கழக வெளியீடு - ௬௬௫

# கு ம ண ன்

[ஒரு நாடகம்]

புலவர் "அரசு" அவர்கள்

UNIVERSITY EXTENSION LIBRARY
22 DEC 1960
MADURAI

:: திருநெல்வேலித் தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை, 1.

First Edition : Oct., 1947.
Second Edition : July, 1950.

[*Copy-right*]

*Published by :*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY :: MADRAS, 1.

*Head Office :*

24, EAST CAR STREET, :: THIRUNELVELI.

The Appar Achakam of the Publishers; 2/140, Broadway, Madras, 1.

# முன்னுரை

காலத்தாற் குமணன் கடையெழு வள்ளல்களுக்கும் பிற்பட்டவன். எனினும், கொடையால் அவர்களுக்கு ஒப்புற்றவன்.

> " இலனென்னும் எவ்வம் உரையாமை யீதல்
> குலனுடையான் கண்ணே யுள "

என்னும் பொய்யாமொழிக்குப் பொருந்திய சான்றோன். அவனைப் பற்றிப் புறநானூற்றிற் காணப்படும் சுவடுகளைப் பின்பற்றி அமைந்தது இந்த நாடகம்.

இதற்குமுன் எழுதப்பெற்ற 'இளவரசன்—முதற் குலோத்துங்கன்' 'புறநானூற்றில் ஐந்து காட்சிகள்' என்னும் நூல்களை உயர்நிலைப் பள்ளிகளில் மேல் வகுப்புகளுக்குத் துணைப் பாடநூல்களாகப் பாடநூற் குழுவினர் அமைத்துள்ளனர். இந்த நூலும் துணைப்பாடமாகவும் நடிப்பதற்கும் ஏற்றது. தமிழன்னையின் அருள் இதற்குங் கிடைக்குமாக!

அந்த நூல்களைப் போலவே, இந்த நூலையும் வெளியிட்ட சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்க்கு என் நன்றி எப்போதும் உரியது.

பூவிருந்தவல்லி,<br>15—8—47.

ஆக்கியோன்.

MADURAI

## நாடக வுறுப்பினர்

| | | | |
|---|---|---|---|
| 1. | குமணர் | — | முதிரத்தரசர், வள்ளல் |
| 2. | இளங்குமணன் | — | குமணர் தம்பி |
| 3. | வான்மலர்தேவி | — | குமணர் பட்டத்தரசி |
| 4. | முடிநாகராயர் | — | முதிரத்தமைச்சர் |
| 5. | அழகுநம்பி | — | இளங்குமணன் தோழன் |
| 6. | இளவெளிமான் | — | வெளிமான் நாட்டுத் தலைவன் |
| 7. | வெற்றிவேள் | — | இளவெளிமான் அமைச்சன் |
| 8. | முல்லைக்கொடி | — | இளவெளிமான் தங்கை |
| 9. | மல்லிகை | — | முல்லைக்கொடியின் தோழி |
| 10. | பெருஞ் சித்திரனார் | } | புலவர்கள் |
| 11. | பெருந்தலைச் சாத்தனார் | } | புலவர்கள் |

முடிநாகராயர் மனைவி, பெருஞ்சித்திரனார் மனைவி, அன்னை, சிறுவன், முதிரத்துக் குடிகள், பூம்பொழிற் காவலன், வேலைக்காரர்கள்.

நாடகம் நிகழ்விடங்கள் :—வெளிமான் நகர், முதிரம், முதிரமலை, பெருஞ்சித்திரம்.

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# நாடகச் சுருக்கம்

தமிழ்ப் பூங்காவிலே இனிதாக ரீங்காரம் புரியும் இசை வண்டு பெருஞ்சித்திரனுர் என்னும் புலவர். அவரை வறுமைக்கோடை வாட்டியது. கோடை வெதும்பும் போது அவருக்குத் தண்ணிய நிழலைத்தரும் கனிநிறைந்த பூங்கா வெளிமான் என்னும் வள்ளல். அப் பூங்காவை நாடிச்சென்ருர் புலவர். அந்தோ! வறிதாகியது அப்பொழி லிருந்த இடம்! வெளிமான் இவ்வுலகைவிட்டுத் திரும்பி வாராத சேயநெறியை அடைந்துவிட்டான். அறிந்தனர் அவர்; திகைத்தனர்; கருகினர். எனினும், ஒருவாறு தேறி இளவெளிமானைக் கண்டார். அவன் வெளிமானின் தம்பி. ஒரு தாய் வயிற்றிற் பிறந்த இருவரும் வேறு வேறு பண்பு கொண்டவர். புல்லனுன அவன் புலவரை யிகழ்ந்தான்.

வறிதே திரும்பிய புலவர், குமணனைப் பற்றிக் கேள்வி யுற்ருர்; சென்ருர். முதிரம் குமணன் இருப்பிடம். அவன் இவரை வரவேற்ருன்; விருந்தளித்தான்; பொன்னுலும் பட்டாலும் புனைந்தான்; களிறூர்ந்து செல்கவெனக் கை குவித்து வழிவிட்டான். களிப்புக் கடலிலே கரைகாணுது திகைத்தார் புலவர்.

திரும்பிய புலவர் களிற்றுடன் இளவெளிமானைக் கண்டார். தமிழருமையறியாச் சழக்கனிடம் தாம் குமண னிடம்பெற்ற பரிசிலைக்காட்டி, 'இக்களிற்றை நீ பெற்றுக் கொள்' என்று கூறி அவனுடைய காவல் மரத்திலே களிற்றைப் பிணித்துச் சென்ருர்; தம் மனைவி மக்க ளுடனும் முதிர்ந்த அன்னையுடனும் குலவி மகிழ்ந்தார்.

புலவர் இளவெளிமானைச் சந்தித்த இருபோதினும் வேறொருவன் அவனுடன் இருந்தான். அவன் இப்புலவர் வரிசைபெற்றுத் திரும்பிவந்து கூறிய மொழிகளாற் புழுங்கினான். அவனே குமணன் தம்பி—இளங் குமணன். அவன் தன் தோழன் அழகு நம்பியுடன் நாடு வலம்வரப் புறப்பட்டவன் இளவெளிமானிடம் விருந்தினனாகத் தங்கினான். அவனும் இளவெளிமானைப் போன்றவனே. "மூர்க்கரை மூர்க்கர் முகப்" பதில் வியப்பென்ன? இளங் குமணனுக்குக் குமணன் கொடைத்தன்மை கொள்ள வில்லை. நெடுநாளாக அதை நெஞ்சில் வளர்த்துவந்தான். அந்த எண்ணம் இப்போது முற்றி வயிரங்கொண்டது. ஆகவே, தன் நண்பனாக இசைந்த இளவெளிமானிடம் விடைபெற்று நாடு சுற்றுமலே தோழனுடன் தன் வீடு திரும்பினான். திரும்பும்போது இளவெளிமான் தங்கை யான முல்லைக்கொடியின் முறுவலையும் பெற்றுவந்தான். முல்லைக்கொடியின் தோழி மல்லிகை. அவள் காதலன் அழகு நம்பி.

முதிரத்தை யடைந்த இளங்குமணன் தன் தோழனுடன் ஆராய்ந்து குமணனைக் கொல்ல முடிவுசெய்தான். அதனை அமைச்சனான முடிநாகராயன் அறிந்தான்; அச்ச முற்றுக் குமணனிடங் கூறினான். குமணன் முறுவலுடன் அதைப்பற்றிச் சிந்திப்பதாகச் செப்பி அவனை அனுப்பி விட்டான். இரவில் அமைச்சனுக்கு ஒரு முடங்கலும் குடிகளுக்கு ஒரு திருமுகமும் எழுதி வைத்துவிட்டு வெளியேறி மறைந்துவிட்டான்.

மறுநாட் காலையில், அமைச்சன் தனக்குக் குமணன் எழுதிவைத்த முடங்கலைக் கண்டான்; முடவனைப்போலத் தான் ஒன்றும் செய்ய ஒண்ணுமற் போனதை யறிந்து திகைத்தான்; வருந்தினான். குடிகளுக்குக் குமணன் எழுதி வைத்திருந்த திருமுகத்தைப் படித்துக்காட்டிக் குடிகளை ஒப்பும்படி செய்து அதிலுள்ளவாறே இளங்குமணனை அரசனாக்கினான். குடிகளும் அமைச்சனுங் குமுறி நின்றனர்.

தங்கள் கருத்து எப்படியோ முற்றியதை யறிந்த இளங் குமணனும் அழகு நம்பியும் முதலிற் சிறிது மகிழ்ந்தாலும் பிறகு, குமணன் உயிரோடிருப்பது குணமன்று என்று கொண்டனர். 'புலி பதுங்குவது பாய்ச்சலுக் கிடம்' என்று எண்ணினர். ஆகவே, மறைந்தவனைக் கண்டு பிடித்துக் கொன்று வருவோர்க்குப் பரிசு கொடுப்பதாக மறை வழியில் ஆட்களை வைத்தனர். இதனையும் அமைச் சன் அறிந்து ஒற்றன் மூலமாகக் குமணனுக்கு அறிவித்து விட்டான். 'உடன் பிறந்தே கொல்லும் வியாதி.'

பெருந்தலைச் சாத்தனு ரென்றொருவர் புலவரிருந்தார். அவர், குமணன் கொடையைப் பெருஞ்சித்திரனார் வாயி லாக வுணர்ந்தார்; முதிரத்தை நோக்கிச் சென்றார்; வழியி லேயே முதிரமலைச் சாரலில் ஒரு குகையிற் குமணனைக் கண்டார். எனினும், அவனே குமணனென அறியார். குமணன் தன்னை யாரென்று கூறாமல் மறைத்துக்கொண்டு புலவரை வரவேற்றுக் களைப்பை யாற்றினான்; 'முதிரத்தை இப்போது குமணன் ஆளவில்லை; அவன் உயிருக்கஞ்சி மறைந்து வசிக்கின்றான்' என்றான். புலவர் மனமறுகினார்; திரும்பிச் செல்ல முடிவு செய்தார்.

அவர் வறிதே திரும்புவதைப் பொறாத குமணன் உண்மையை உரைத்துத் தன் தலையைக் கொண்டுபோய்க் கொடுக்கும்படித் தன் வாளை அவர் கையில் அளித்தான். புலவர் கலக்க முற்றார். எனினும், எப்படியாயினும் குமணனையும் இளங்குமணனையும் ஒற்றுமையாக்கவேண்டு மெனத் தனக்குள் முடிவுசெய்து வாளை வாங்கிக்கொண்டு முதிரத்தை அடைந்தார்.

முதிரத்திலே நகர மாந்தர் இளங்குமணன் போக்குக் கெதிராகக் கனன்று கொண்டிருந்தனர். அதனையும் புலவ ரறிந்தார்; இளங்குமணனைக் கண்டார்; நகரமாந்தர் நிலையை யும் குமணனுடைய உயர்பணியையும் உள்ளவாறு நயம் பட நவின்றார். இளங்குமணன் உள்ளமும் அப்போது சிறிது நல்வழியிலே திரும்பி நின்றதாகையால், அப் புலவ ருடைய பொன்மொழிகள் அவனைத் திருத்திவிட்டன.

தான் செல்லும் வழி தீயதென நன்ருக உணர்ந்தான் அவன்; புடம்போட்ட பொன்ஞனன்; அமைச்சனேயும் புலவரையும் முன்னிட்டுக்கொண்டு நகரமாந்தர் புடை சூழத் தன் அண்ணனிருப்பிடத்தை யடைந்தான்.

குமணன் தன் துணைவனுடைய மனமாறுதலேக் கண்டு வியந்தான். அதற்குக் காரணராக இருந்த புலவர் பெருந் தலேச் சாத்தனரைப் பெரிதும் போற்றினன். எனினும், மடிந்துபோன ஆட்சிக்காதல் உயிர்பெறவில்லே. ஆகை யால், தம்பியையே ஆளப்பணித்துத் தன் துறவை உண் மைத் துறவாக்கிக்கொண்டான். பிரிந்திருந்த வாழ்க்கைத் துணேவியுடன் தம்பியின் வேண்டுகோளுக் கிசைந்து அரண்மனேயைச் சார்ந்த வேனில்விடுதியிலே தங்கித் தமிழ்த் தொண்டாற்றி வந்தான். தன் தமையன் ஆணேப் படி இளங்குமணன் முல்லேக்கொடியை மணந்து முதிரத்தை யாண்டான். பெருந்தலேச் சாத்தனர் பெரும் புகழ்பெற்றுத் தம் குடும்பத்துடன் முதிரத்திலேயே தங்கி விட்டார். இளங்குமணன் அரசவைப் புலவர் அவரே. குமணனேப் போன்ற வள்ளல்கள் பலரைத் தமிழ்நாடு இப் போது எதிர்பார்க்கிறது. அதன் கருத்து முற்றித் தமிழ் செழித்து வளரும் வண்ணம் இறைவனருள் பெருகுக.

# குமணன்

## காட்சி 1

இடம்: வெளிமான் நகரில் ஒரு மலர்ப் பொழில்.

காலம்: நண் பகல்.

பெருஞ்சித்திரனர் உலாவிக்கொண்டிருக்கிருர்.

பெருஞ்சித்: (தாமே) தண்ணென்ற நிழல்! கண்ணுக்குங் கருத்துக்கும் இனிமை யளிக்கும் காட்சி! உள்ளத்தை மயக்கும் தெள்ளிய நீர் நிறைந்த பொய்கை! அந்த நீரைக் கோடையின் வெம்மை பற்ருமற் குளிர்ச்சியை யுண்டாக்கும் தாமரை அல்லி குவளே முதலிய மலர்கள்! பொய்கையின் கரைகளிலே மாவும் பலாவும் கோங்கும் புன்னேயும் ஆதிய மரங்கள்! கதிரவனுெளிபுகா நிழல் வறுமையின் கொடுமையைத் தவிர்க்கும் வெளிமானேப் போல வெயிலின் கொடுமையைத் தவிர்க்கும் விரி மலர்ப் பொழில் இது! எவ்வளவு துடித்தேன் வெயிலில்? எள்ளளவும் இல்லேயே இப்போது! தமிழின் இனிமையே சமைந்துள்ளது இப்பொழிவில்!......, காவியம் போன்றுளது இக்காவிலியங்கல்! கொடும்பசியைத் தவிர்க்கும் அறுசுவை யுண்டியே போன்று வெப்பத்தை விலக்குகிறது இது! (ஒரு மாமர நிழலில் அமர்கிருர்) வழி நடந்த களேப்பு வழி விலகியது. பசிப்பிணியைத் தவிர்க்கப் பார்க்க வேண்டும் வழி......வள்ளல் வெளிமானேப்

பார்க்கும் வாய்ப்புக்கிடைப்பது எப்படி? அவரைக் கண்டாற் போதுமே! பசியும் போம்! பசித்தலைவனை வறுமை வேந்தனும் மாண்டு போவான்! (மாமரத்தைமேலே நோக்குகிறார்) இம் மாங்காய்கள் பழுத்திருந்தால் நன்றாயிருக்கும். இதற்குக் காவலுண்டோ? (சுற்றிலும் நோக்குகிறார். ஒரு புன்னையின் நிழலிலே காவற்காரன் துயில்வதைப் பார்க்கிறார்) இவன்தான் காவலனோ? நம்மைப்போல வழிப்போக்கனோ? எழுப்புவோம்! (கையைத் தட்டி) யாரையா அங்கே? (காவலன் கண் விழிக்கிறான். எழுந்து அமர்கிறான். புலவர் எழுந்து அவனிடம் செல்கிறார்) நீர் இப் பொழிலின் காவலரோ?

காவலன்: (கண்ணைத் துடைத்துக்கொண்டே) ஆமாம்! (கொட்டாவி விட்டுச் சோம்பல் முறிக்கிறான்)

பெருஞ்சித்: இப்பொழில் யாருடையது?

காவலன்: அரசருடையது.

பெருஞ்சித்: அவரை எப்போது பார்க்கமுடியும்?

காவலன்: எப்போதும் பார்க்கலாம். (புலவரை உற்று நோக்குகிறான்) நீங்கள் யார்?

பெருஞ்சித்: நான் ஒரு புலவன்.

காவலன்: (இரக்கத்துடன்) பசியுடனிருக்கிறீர்களே! வெளிமானுடன் மறைந்தது புலவர்களைப் போற்றும் மேன்மை!

பெருஞ்சித்: (பரபரப்புடன்) இப்போது அவரில்லையா?

காவலன்: (வருத்தத்துடன்) நல்ல அரசர்! குடிகளின் செல்வம் அவரே! நல்லவர்களை அப் பாழும் கூற்று

வன் வைத்திருப்பதுதானில்லையே! (கண்கலங்க) வெளிமான் இப்போது வெளியுலகில்.........(பெருமூச்சு விடுகிறான்)

பெருஞ்சித் : (துக்கத்துடன்) என் செவி கேட்பது உண்மையா?

காவலன் : அவரைப்பற்றியும் பொய்வருமா? உண்மையாகவே அவருடைய ஊனுடல் மறைந்து ஒரு திங்களாயிற்றே!

பெருஞ்சித் : (கண்கலங்கி) அங்ஙனமாயின் புரவலரும் புலவரும் வாழ்த்தப் பொன்னிருக்கையிலே யிருந்த வெளிமான் இப்போது, கவிந்த தாழியின் மேலே கழுகு முதலான பறவைகள் இருந்து வாழ்த்த மண்ணிருக்கையிலே மடிந்து துயில்கிறாரோ? அந்தோ!

காவலன் : (விம்மியவாறே) ஐயோ!

பெருஞ்சித் : (விம்மியவாறே) வறுமையால் வந்த கொடுமையைவிடக் கூற்றுவனால் வந்த கொடுமை கொடிது! கொடிது!! பெருஞ்சித்திரா! அப்பெருமான் மறைந்ததனாலே வளையல் முதலிய அணிகளை அவருடைய உரிமைப் பெண்கள் இழந்தனர்! நீயும் உன் போன்ற புலவர்களும் கவிதையழகையிழந்து மங்கிவிட்டீர்கள்! இதனை அறியாமலே இங்கு வந்தனையே!

காவலன் : நன்றாகச் சொன்னீர்கள்! பாடும் புலவர்கள் வாயிழந்தது மட்டுமா! வீரர்கள் வாளேந்தும் கையையிழந்தனர்! அங்கங்கே உள்ள வெற்றி முரசங்களெல்லாம் தோலிழந்தன! யானைகளும்

பாகர் முதலான ஆட்களையும் தம் மருப்புக்களையும் இழந்தன! புகழும் தன் காலையிழந்தது!

பெருஞ்சித் : இனி என் உறவினர் நிலையென்னவோ? மழை பெய்யும் இராக் காலத்திலே கடலிற் செல்லும் மரக்கலங் கவிழ்ந்தபோது, பொறுக்கமுடியாத துன்பமுற்றவுள்ளத்துடன் கண்ணில்லாத ஊமையனொருவன் கடலில் அழுந்துவதைப் போலாயிற்று என் நிலை! வழிதெரியவில்லையே! (காவலன் மனைவி காவலனுக்கு உணவுகொண்டு வருகிறாள்)

காவலன் : (வருத்தத்துடன்) என்ன கொடுமையிது! யான் ஒரு செல்வனாக இருத்தலாகாதா?......ஐயா! வருந்தாதீர்கள். பசியோடிருக்கும் தாங்கள் இவ்வுணவை உண்டு களைப்பாறுங்கள். பிறகு, ஒரு வழியைச் சிந்திப்போம். (காவலன் மனைவி உணவைக் காவலன் அருகில் வைக்கிறாள். அவன் அவளைப் பார்த்து) வைத்துவிட்டு வீட்டிற்குப்போய் இன்னும் ஓராள் சாப்பாடு கொண்டுவா.

மனைவி : (மகிழ்ச்சியுடன்) இதோ ஒரு நொடியில். ஐயா யார்?

காவலன் : அப்பேச்சு அப்புறம். இப்போது ஓடு முதலில்!

மனைவி : ஆகட்டும் (செல்கிறாள்.)

காவலன் : (அன்புடன்) புலவர் பெருமானுக்கேற்ற வுணவாக இராமற் போனாலும், சிறிது பசியைத் தீர்க்கும் இது. வாருங்கள்!

பெருஞ்சித் : பசியை முதலிலேயே போக்கிவிட்டது வெளிமான் மறைவுச்செய்தி! நீர் சாப்பிடும்!

காவலன் : அப்போதே நினைத்தேன், இந்தத் தாழ்ந்த வுணவை உண்ணமாட்டீர்களென்று!

பெருஞ்சித் : (அன்புடன்) நீர் நினைப்பது தவறு. நானும் என் மனைவி மக்களும் உணவைக் கண்டு இரண்டு நாட்களாயின. அப் பசித்துன்பத்தைப் போக்கவே, வறுமைப் புலியால் துரத்தப்பட்டு ஓடிவந்தேன்! இங்கே என் அரண் அழிந்து போனதைக் கேட்டுக் கலங்கி நிற்கிறேன். புகழை விரும்பாமல் அன்புடன் இடும் உம் உணவே அறுசுவை யுண்டியாகும். எனினும், என் கலக்கத்தால் அவ்வாறு கூறினேன். உம் உளம் விரும்பிய வண்ணம் இதோ இப் பொய்கையிலே கைகால்களையும் முகத்தையும் கழுவி வருகிறேன். (செல்கிறார்)

காவலன் : (தனக்குள்) ஐயோ! எவ்வளவு பேராவலுடன் வந்தாரோ? நாமும் கைகால்களைக் கழுவி வருவோம். (செல்கிறான். இருவரும் பொய்கையிலிருந்து கரையேறுகின்றனர்) வாருங்கள்! நான் செய்த நல்வினையே தங்களைக்காணச் செய்தது. ஏதோ குறைந்த வுணவையாவது...

பெருஞ்சித் : அப்படிக் கூறுதீர் ஐயா! பெரிய பொய்கையிலிருந்து கிடைத்தாலும் சிறிய ஓடையிலிருந்து கிடைத்தாலும் வேண்டுவது சிறிது நீரே.

காவலன் : அப்படியன்று! அமருங்கள். (இருவரும் அமர்கின்றனர். ஓர் இலையை எடுத்துப் பரப்புகிறான். குவளையிலுள்ள நீராலே கழுவுகிறான். உணவையும் கறிவகைகளையும் படைக்கிறான். குழம்பை வார்க்கிறான்) அரசர்கள் அரண்மனையிலே பொற் கிண்ணங்களிலே அறுசுவை உண்டியன்றோ கிடைக்

கும்? எங்களுக்கு அத்தகைய உணவு கனவிலும் அகப்படாதே!

பெருஞ்சித் : (உணவைப் பிசைகிறார்) உண்மையிலே ஊன்றிப் பார்ப்போமானால் உம்மைப்போன்ற உழைப்பாளிகளின் உணவுதானே அங்குங் கிடைப்பது? (உண்கிறார்.)

காவலன் : (நகைத்து) புகழவேண்டாம்.

பெருஞ்சித் : (உணவைக் கையிலெடுத்துக் கொண்டு) உழைப்பில்லாமலே அவ் வுணவு வந்துவிட்டதா? ஆறில் ஒரு பங்காகவோ, வேறு வழியாகவோ அரசன் அடைவது இதைத்தானே? பல சிறிய ஊற்றுக்களின் தொகுதியே பேராறு. உங்கள் உழைப்பினாலேதான் அரசர் வள்ளலெனும் புகழையடைகிறார். (உண்கிறார்.)

காவலன் : (நகைத்து) நீங்கள் கூறுவதன் பொருள் என்னவென்று நினைக்கவும் முடியவில்லை! தெய்வப் பிறப்பான அரசர் எங்களைக்கொண்டு பெயர் பெறுகிறாரென்று இப்போதுதான் தங்களாலே கேள்விப்படுகிறேன்! அப்புறம் பேசிக்கொள்வோம். உண்ணுங்கள்.

பெருஞ்சித் : (புன்முறுவலுடன்) வழிவழியாக இவ் வழக்கம் வந்துவிட்டதால் தெரியவில்லை. தேனழிப்பவன் புறங்கையைத்தான் சுவைக்கிறான். தேனைப் பருகுவோன் வேறொருவனே. (உண்கிறார்.)

காவலன் : (அன்புடன்) ஆர அமர உண்ணுங்கள் (உணவை எடுத்து வைக்கிறான்; மோர் விடுகிறான்)

பெருஞ்சித் : *போதும் போதும்! (அயர்வுடன்) அப்பா! வயிற்றைப் பிடித்துக்கொண்டதே! (உண்கிறார்) இனி எங்கே செல்வதோ? இப்போதுள்ள அரசர் யார்?*

காவலன் : *அவர் தம்பி இளவெளிமான்.*

பெருஞ்சித் : *சென்றாற் பயனுண்டோ?*

காவலன் : *அறியேன்; இருவரும் உடன்பிறந்தோரே. எனினும், தென்குமரியும் வடவிமயமும்போல தொலைவிலுள்ளவர்கள். உம்; அவரையும் பாருங்கள். (புலவர் எழுகிறார்) ஏன் எழுகிறீர்கள்? இன்னுங் கொஞ்சம், ஒருபிடி!*

பெருஞ்சித் : *(நகைத்து) குடலிலே இனி இடமில்லை! (கை கழுவுகிறார்)*

---

## காட்சி 2

இடம் : *இளவெளிமான் அரண்மனையிலே கூத்து மண்டபம்.*

காலம் : *மாலை.*

இளவெளிமான், இளவெளிமான் அமைச்சன் வெற்றிவேள், இளங்குமணன், அவன் நண்பன் அழகு நம்பி ஆகியோர் தங்கள் இருக்கைகளிலே கைகளிலே மதுக் கிண்ணத்தை ஏந்திய வாறு இருவிறலியரின் கூத்தைப் பார்த்து மகிழ்கின்றனர். நால்வருக்கும் பணிப்பெண்கள் கவரி வீசுகின்றனர். கூத்தும் குடியும் முடிகின்றன. விறலியரும் பரிசுபெற்றுச் செல்கின்றனர்.

இளவெளி : *(இளங்குமணனை நோக்கி) கூத்துப்பிடித்ததா?*

இளங்கு : *(மகிழ்வுடன்) மிக நன்று! விருந்தோ, கூத்தோ, மதுவோ என்னை மயக்கிய தென்றறியேன்! ஒவ்வொன்றுந் தனித்தனிச் சுவை! என் உள்ளமும் உணர்வும் களிப்பிலே மிதந்துவிட்டன!*

இளவெளி : (அன்புடன்) 'விருந்தில்லா வுண்டி மருந்து' தானே? ஏதோ சிறு விருந்து! தாங்கள் கூறுவது முகமனே. தங்கள் வருகையால் என் உள்ளம் அடையும் மகிழ்ச்சி செப்பமுடியாது. வள்ளுவர்,

'செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு'

என்பதே போல, அப்பயனை அடைந்தேன் தங்களால். தங்களுடன் வந்திருக்கும் இந்த நண்பர் யாவரென் றறியலாமோ?

இளங்கு : என் நண்பன்; அழகு நம்பியெனப் பெயரினன்; வளமிகுந்த செல்வன்.

அழகு : தங்கள் அன்புப் பிணிப்பிலே ஈடுபட்டோம்.

இளவெளி : தங்களுக்கு ஒன்றும் தடையில்லாவிட்டால், எவ்வளவு நாட்கள் இங்கே தங்கினாலும் எனக்குப் பொழுதுபோக்கும் இனிமை கிடைக்கும்.

அழகு : எங்கள் நாட்டிலே பெருமுயற்சியொன்றிலே ஈடுபட்டிருக்கிறோம். விரைவாகத் திரும்பவேண்டும்.

இளவெளி : இன்னும் ஒரு நாளேனுந் தங்குங்கள்.

இளங்கு : நன்று! தங்கள் விருப்பப்படியே ஆகட்டும். (வாயிற்காவலன் வருகிறான்)

இளவெளி : என்ன?

காவலன் : (வணங்கி) அரசர் வாழ்க! பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் தங்களை நாடி வந்திருக்கின்றனர்.

இளவெளி : (வெறுப்புடன்) பொருளின் அருமையறியாத புலவர் வருகிறாரா? உம்...வரச்சொல்.

காவலன் : (வணங்கி) ஆணைப்படி. (செல்கிறான்)

வெற்றி: தங்கள் தமையனாரிடம் நல்ல பரிசு பெற்றுப் பெற்று மகிழ்ந்தவர் இவர்.

இளவெளி: ஓ! அப்படியா? இவ்வாறு வாரிவாரி யிறைத்து விட்டதாலன்றோ சரக்கறை குறைந்து விட்டது? வாய்ச் சொல்லால் வயிற்றை நிரப்பும் புலவர்களின் வருகையைக் குறைக்கவேண்டும். (பெருஞ்சித்திரனார் வருகிறார்) வாருங்கள் ஐயா! அமருங்கள் அப்படி. (ஓர் இருக்கையைக் காட்டு கிறான்)

பெருஞ்சித்: அரசர் வாழ்க! (அமர்ந்து) தங்கள் தமைய னார் காலத்திலே அடிக்கடி நான் வருவேன். என்னை அவர் தம் புகழாக நினைத்து வரவேற்பார். வற்றாத ஊற்றைப்போல வளஞ்சுரப்பவர் அவர்.

இளவெளி. நேற்றுண்டதை யின்று நினைப்பதால் வயிறு நிறையுமா? பசியாவது தணியுமா?

பெருஞ்சித்: (முகம் வாடி) உண்மையே. அந்த அரச ரிடம் யான் விரும்பிவந்தவை தவறாமலே கிடைக் கும். அறிவாளியின் செவியிலே விதைக்கப்படுஞ் செய்யுள் போலப் பிறழாமல் அளிப்பார்.

இளவெளி: சிலரே அவ்வாறு வந்தவரின் வரிசையறியா மலே வாரிக்கொடுக்குந் தன்மையர்.

பெருஞ்சித்: நன்றாக நவின்றீர்கள். வந்தவரின் வறு மையை நோக்குவதல்லது தகுதியை நோக்குவ தில்லை அவர்! ஆனால், தங்கள் உள்ளம் வாடிச் சென்றோர் யாருமில்லை.

இளவெளி: (நகைத்துக் குறிப்புடன்' மற்றையோரை நோக்குகிறான்) புலவரென்றால் வரவேற்கவும் புகழ்

பெறவும் அவருக்குப் பேராசையுண்டு. இந்தப் புகழ் வெறியாலே அரசாங்க நிதி வறிதாயிற்று.

பெருஞ்சித் : (கண்ணீர் கலங்க) எளியராகிய நாங்கள் வாழ்வதை விரும்பவில்லை அந்த எமன். உண விற்கு வைத்த பானையிலே நெருப்புண்டானாற் போலாயிற்று! வருத்த மிகுதியால் மார்பிலடித்துக் கொண்டழும் பெண்களின் வாழைப்பூவைப் போலச் சிதறும் வளையல் போல எங்கள் புலமையும் சிதறுகிறது! அந்தோ! வெளிமான் அகன்றார்!

இளவெளி : (வருந்துபவன்போல் நடித்து) என் செய்ய லாம்? வாழ்வு நிலையற்றது. யானை வேட்டைக் குச் சென்றோன் முயலுடன் திரும்புவது மியற் கையே. (அமைச்சனை நோக்குகிறான். அமைச்சன் சில காசுகளை ஒரு தட்டிலே வைத்து நீட்டுகிறான். பணிப்பெண் அதைப் புலவரிடம் கொண்டு செல் கிறாள்)

பெருஞ்சித் : (கடைக்கண்ணாலும் அதனை நோக்காமல்) அரசே! நான் இரவலனல்லேன். தங்கள் தமை யனார் பிரிந்ததை அறிந்து அவர்க்கிளையராகிய தங்களிடம் வருத்தந் தெரிவிக்கவே வந்தேன். யானையை வீழ்த்தும் புலி எலியைப்பற்றித் தின்று பசிதணிக்க விரும்பாது. வாழ்வீராக! சென்று வருகிறேன். (செல்கிறார்)

இளவெளி : (நகைத்து) நண்பரே! கேட்டீரா? புலி எலியைத் தின்னாதாம்! புலவர் புலியாய் விட்டார்! இனிமேற் புரவலரெல்லோரும் மானாகவேண்டியது தான்.

வெற்றி: இனி இப் புலவர் எப் புலவர்க்கும் எடுத்துக் கூறுவர் இதனை.

இளவெளி: (நகைத்து) எந்தப் புலவரும் இந்தப் பக்கம் இனி எட்டிப்பாரார். அதுதானே நன்று?

இளங்கு: என் தமையனாரொருவர் இப்படித்தான் வள்ளலாய்விட்டார். (வெறுப்புடன்) அந்த வண்மை யாலே மனம் வெதும்பி நைகிறேன் நான்.

இளவெளி: தமக்கும் தமையனார் வெறுப்பாளரோ?

இளங்கு: ஆமாம். தங்கள் நோய் தகர்ந்தது! ஊழ் வினையே உதவியது!

வெற்றி: நல்லரசரென்று கேள்வியுற்றேன்.

இளங்கு: (நகைத்து) அந்த ஆட்சியின் காட்சியிலே கண்ணைப் பறிகொடுக்காதவர் யார்? கேட்டுக் கேட்டுக் காதைச் செவிடாக்காதவர் யார்?

இளவெளி: ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்?

இளங்கு:

“படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு”

என்பார்கள். எங்கள் ஆட்சியிலே முதலுமில்லை; கடையுமில்லை!

இளவெளி: (நகைத்து) என்ன! படையும் அரணும் இல்லையா? அவை தாமே நாட்டுக்கு நலம்?

இளங்கு: மேலும், குடிகளும் அரசரைக் கொற்றவராக மதிப்பதில்லை!

இளவெளி: பின் எப்படி மதிக்கிறார்கள்?

இளங்கு: தங்களில் ஒருவராகவே மதிக்கிறார்கள். அச்ச மென்பது பிச்சைக்குமில்லை குடிகளிடம்!

இளவெளி: அவ்வாறு இடங்கொடுக்கலாமோ?

அழகு: இடங்கொடுப்பதென்ன? அப்படியே பழகும் படி அரசரே கூறுகிருர். ஆனல், எந்தப் பிழையும் நேரவில்லை.

இளங்கு: எப்படித் தெரியும் உனக்கு? அரசர் தண் டித்தாலன்ருே வழக்குகள் வரும்?

வெற்றி: தவறு செய்பவர்களைத் தண்டிப்பது பயிருக்குக் களையெடுப்பது போலன்ருே!

இளங்கு: (நகைத்து) எங்கள் அமைச்சர் அதனை எடுத்துக்கூறமாட்டார். அரசர் 'காக்கை வெளிது' என்ருற் கண்டோ மென்பா ரமைச்சர்! (எல்லோரும் நகைக்கிருர்கள்) அவரை அரசரென்று கூறுதல் அரசர்களையே நாணப்படுத்துவதாகும்!

இளவெளி: சில முத்தண்ணுக்கள் இப்படித்தான் இளையோருள்ளத்தை வாட்டுகிருர்கள். தாங்களேதும் கூறுவதில்லையோ!

இளங்கு: பலமுறை பணிவுடன் பகர்ந்துள்ளேன். களரிலே விதைத்த விதைகளாயின அவைகள்.

இளவெளி: அவற்றைப்பற்றிப் பன்னிப்பன்னிப் பேசுவதாலே பயனில்லை. வாருங்கள் நம் பூங்காவிலே சிறிது உலவி வருவோம்.

இளங்கு: நன்று.

---

## காட்சி 3

*இடம்—இளவெளிமான் அரண்மனைப் பூம்பொழில்*

*காலம்—மாலை*

இளவேளிமான் தங்கை முல்லைக்கோடியும், அவள் தோழி மல்லிகையும் மலர் கொய்துகொண்டே உரையாடுகிறார்கள்.

**மல்லிகை:** அலரும் மலரும் ஒன்று?

**முல்லை:** ஆம்.

**மல்லிகை:** அலர் தூற்றுகிறார்களென்றால் என்ன பொருள்?

**முல்லை:** அங்கும் அதே பொருளே. அரும்பு அலர்ந்தாற் பலரறிய மணமுடையதாகிறது. அதுபோலவே, ஒரு செயல் மறைவாக இருப்பது பல பேரறிய அலர்கிறது. அரும்பு அலர்ந்தால் மணம் காற்றினாலே பரவுகிறது. செயல் அலர்ந்தால் மணம் வாயினாலே பரவுகிறது. ஏன் இந்த எண்ணமிப்போது உனக்கு? உன் காதல் அலராயிற்றோ?

**மல்லிகை:** ஆம். என் அன்னை அறிந்தாள் எப்படியோ?

**முல்லை:** அப்படியானால் உடனே திருமணத்திற்கு முயற்சிதான்?

**மல்லிகை:** (நகைத்து) உன் மணத்தின்போதுதான் என் மணமும்.

**முல்லை:** (நகைத்து) உன் மனந்தான் என் மனமும். எனினும் மலரை நாடி வண்டு வந்தபின்......

**மல்லிகை:** (நாணத்துடன்) பகுத்தறிவுடைய வண்டு செவ்வி நோக்கியேயிருக்கும்.

**முல்லை:** மலர்வதுதானே செவ்வி? (அன்புடன்) நாணமாயிருக்கிறதோ இப்பேச்சு? நாணந்தானே காதலை

மணமுடையதாக ஆக்குவது? உன் காதலரின் நகரம் எது?

மல்லிகை: முதிரம் என்று முன்னமே கூறினேனே.

முல்லை: உனக்குத்தான் மறவாமலிருக்கும். எனக்கு மறவாதா? மேலும் காதலரின் ஊரும் பேரும் மறைமொழிபோலத் திரும்பத் திரும்பக் கூறப் படுவதில் தனியே ஓரின்பமுனக் குண்டாகாதா?

மல்லிகை: உனக்கும் இந்தக் காதற்பிணி உண்டாகாதா? (புன்முறுவலுடன் கைகூப்பி) இறைவா! விரை விலே வழியுண்டாக்கு.

முல்லை: (நகைத்து) வழியுண்டாகுமோ? உண்டா னாலும் உன்போல எப்போதும் உருப்போட மாட்டேன்.

மல்லிகை: (நாணத்துடன்) நான் எங்கே உருப்போடு கிறேன். இருக்கட்டும் இப் பேச்சு. நான் வேலி யோரத்திலுள்ள முல்லை மலர்களைக் கொய்து வரு கிறேன். நீ இங்கேயே யிரு.

முல்லை: (நகைத்து) வேலியோரமாக ஏனடி யிப்போ? அவர் வந்திருக்கிறாரா அங்கே?

மல்லிகை: (திடுக்கிட்டு) ஏன் அங்கே வருகிறார் இப் போது?

முல்லை: (நகைத்து) நீ ஏன் போகிறாயோ அதற்காகவே! எனக்கு ஒன்றுந் தெரியாதென்று நினைக்கிறாயா? உன் காதலர் இப்போது அரண்மனையிலே இல்லையா?

மல்லிகை: (நாணத்துடன்) அதையும் அறிந்து வைத் திருக்கிறாயா? முதிரமலை இளவரசர் இளங் குமண

ருடன் வந்திருக்கிறுரென்பது உண்மை. ஆனுல், இப் பூங்காவிலே என்னை எதிர் பார்ப்பதாய் ஏற்பா டொன்றுமில்லை.

முல்லை : (நகைத்து) சரி, நீ போய்வா. காதலின் மயக்கத் தில் கையில் முள்ளைக் குத்திக்கொள்ளாதே.

மல்லிகை : (முகம்வாடி) காதலின் மயக்கம் என்றவுடன் என் அன்னை கூறியது நினைவுக்கு வருகிறது. அது ஒருகால் உண்மையாய் வருமோ என்று அஞ்சு கிறேன்.

முல்லை : (பரபரப்பாக) என்னடி அது ?

மல்லிகை : அவர் வளம் மிகுந்த பெருஞ் செல்வர். என்னை மறவாமல் மணம் புரிவாரென்பது என்ன நிலை? காதலின் மயக்கத்தால் கண் தெரியாமல் இருக்கிறேனு என்று ஐயப்படுகிறேன்.

முல்லை : (அன்புடன்) சேச்சே! அப்படி யொன்றும் நேராது. செல்வச் செருக்கெல்லாம் உண்மைக் காதலின்முன் ஓங்காதென்றுரைப்பார்கள்.

மல்லிகை : (கண்ணீர் வார) என்னவோ அம்மா! நான் அவரை மறந்தாலும் என் உள்ளம் மறப்பதில் லையே! அவர் பெயரைக் கூற வேண்டாமென்று நினைத்தாலும் மனத்திலும் வாயிலும் அவர் பெயரே வந்து நிற்கிறது எப்போதும்! (தலை கவிழ்கிறுள்)

முல்லை : (அருகில் நெருங்கி முகத்தை நிமிர்த்திக் கண்ணீ ரைத் துடைத்து) காதலென்பது ஊழ்வினையின் அரும்பு. அது தவறுமல் உங்களை ஒன்றுசேர்க்கும் தளையாகும். இடையிலே எவ்வளவு ஆழமான அகழியும் மதிலும் தடையாயிருந்தாலும் அவற்

றைக் கடந்து வந்துவிடும். (புன்முறுவலுடன்) இதற்கு இவ்வாறு வருந்துவது வேண்டாம்.

**மல்லிகை :** நீங்கிஞற் சுட்டும் குறுகிஞற் குளிர்ந்தும் இருக்கும் இந்தக் காதல் நெருப்பின் இயல்பை நீ அறியமாட்டாய். (பூக் குடலையிலுள்ள மலர்களைப் பார்த்து) இம் மலர்கள் போதா. இதோ சென்று இன்னுஞ்சில பறித்து வருகிறேன். அதுவரை இங்கேயே இரு. (செல்கிருள்)

**முல்லை ;** (தானே இரக்கத்துடன்) ஐயோ! காதலென்பது இவ்வளவு கொடியதா? நீங்கிஞற் சுடுமாம்! (மகிழ்வுடன்) இதுவரை அந்தத்தீ நம்மைப் பற்றவில்லை. பற்றும்படி இடங்கொடுக்கவும் கூடாது. (சிறிது தொலைவில் ஆளரவம் கேட்கிறது. அப்பக்கம் நோக்குகிருள். இளங்குமணன் ஒரு புன்னை மரத்தடியில் நிற்கிருன்) ஆ! இங்கேயும் ஆடவர் யாரோ புதியவர் வந்திருக்கிருரே! (உற்று நோக்குகிருள்) உள்ளமே! உள்ளங்கை புறங்கையாக மாறுவதைப் போல உன் உறுதியை யிழந்தாயே! காதலுக்கு இடந்தரலாகாதென்று இப்போதுதானே உறுதி செய்தாய்! இதற்குள் ஏன் புதியவரைப் பார்க்க விழைகிருய்? பார்ப்பது பிழையில்லையென்கிருயோ? அது உண்மைதான். ஆஞல், உன் பார்வை வெறும் பார்வையாக இல்லையே! அழகும் வீரமும் இளமையும் ஒரு வடிவமெடுத்ததுபோன்ற தோற்றம்!...எவ்வளவோ ஆடவரைப் பார்த்திருக்கிறேன். ஆஞல் என் உள்ள வண்டு அவர் கண் மலரை நாடி நிற்கவில்லையே!... இது என்ன வெட்கமும் நடுக்கமும் உள்ளமே! இது உன் நிறைக்குத் தக்கதன்று!...தோழியைக் கூப்பிடுவோம்! மல்லிகா!

மல்லிகா!...தொலேவில் இருக்கிருளோ? அவள் இருக்குமிடம் செல்வோம்...ஐயோ! என் கால்களில் என்ன? அடியெடுத்து வைக்கவும் முடியவில்லேயே! (இளங்குமணனைப் பார்க்கிருள். அவனும் நோக்குகிருன்) சேச்சே! என்ன இது! அவரும் நம்மைப் பார்க்கிருரே! (நாணித் தலேகுனிகிருள்)

**இளங்குமணன்:** (தனக்குள் வியப்புடன்) ஆ! அழகிய முல்லேக்கொடி!

**முல்லே:** (தனக்குள்) ஐயோ! நம் பெயரை வேறு அறிந்திருக்கிருரே!

**இளங்:** (தனக்குள்) தாமரையும் குவளேயும் காந்தளும் மலர்ந்த இனிய மணம் வளரும் மாலேயோ இவள்! கண்பெற்ற பேறு! நூல்களிலே திருமகளென்று கற்பித்துக் கூறும் அழகெலாம் இவளுடையாள் எனலாம். இவளுக்குவமை இவளே! அழகு சுமந்து இளேத்த ஆகத்தினுள்! வண்டுகளும் வேட்கும் கருங்கூந்தலாள். நங்கையர் தமக்குப் புகழ் தரும் ஒளிவிளக்கு!...இவள் யாரோ?...என்னே என் மடமை! அயலான் அரண்மனேப் பூங்காவிலே தனித்து நிற்கும் அணங்கைக் கண்டு அகம் இழப்பதா? முன்பின் அறியாத இவளேக் கண்டவுடன் என்னுள்ளம் ஏன் இப்படித் துடிக்கிறது? தேனில் வீழ்ந்த வண்டென மயங்கித் தவிக்கிறதே! வாய்க்கினிய விருந்தளித்த இந்த அரசர் கண்ணுக்கினிய விருந்தையும் கவினுறக் காட்டியூட்டினர்!...சீச்சீ! இவ்வாறு உள்ளத்தைச் சிதறவிடுவது தக்கதன்று!......என்ன வியப்பு! நூல்களிலே வருங் காதற்காட்சிகளேப் படிக்கும்போது வேலேயற்ற

புலவர்களின் கற்பனை ஓவியம்—பெரும் பொய் மொழிகள்—என எண்ணிய நான் முன்பின் அறியாத இவ் வழகியிடம் உளத்தைப் பறிகொடுத்து நிற்கின்றேனே!......இதுதானோ தெய்வக்காதல்? தமிழிலே அகப்பொருளிற் சிறப்பித்துக் கூறப்படும் உள்ளக்கலப்பு இதுதானோ? (அவளருகிற் செல்கிறான்)

முல்லை: (புன்முறுவலுடன்) என்ன துணிவு! நம்மை நெருங்கி வருகிறாரே!

இளங்: (மகிழ்வுடன்) உளமே! அஞ்சாதே! நம்மைக் கடைக்கண்ணால் நோக்கிய இவள் புன்முறுவல் செய்கிறாள்.

முல்லை: (நடுக்கத்துடன் கையிலிருந்த மல்லிகை மலர் மாலையை நழுவ விடுகிறாள். அது கீழே விழுகிறது) ஐயோ! மல்லிகை!

இளங்: நடுங்காதே! அந்த மல்லிகை மாலையை நான் எடுத்துத் தருகிறேன். (அதை அவள் கையில் வைக்கிறான். அவள் வாங்காமல் நடுங்கி நிற்கிறாள்) ஏன் இந்த மலர்மேல் வெறுப்பு? உன் கூந்தலிலே அணிந்துகொள். (முல்லைக்கொடி பேசாமல் நிற்கிறாள்) நான் அணியலாமா? (கடைக்கண்ணால் நோக்கியவாறே பேசாமல் நிற்கிறாள். இவனே அணிகிறான்)

## காட்சி 4

இடம் : *முதிரம் என்னும் மலைச்சாரல்.*
காலம் : *காலை.*

பெருஞ்சித்திரனார் ஒரு பலாமரத்தடியில் நிற்கிறார்.

பெருஞ் : (*தாமே*) *இளவெளிமானுடைய இறுமாப்பு என்னே! புலவரை மதிக்கத் தெரியாத புல்லன். அவனுக்குப் பாடங் கற்பிக்கவேண்டும் எப்படியாவது—தமயனுக்குந் தம்பிக்கும் எவ்வளவு வேற்றுமை? ஒருடலிலே ஊறிய இவர்கள் இவ்வாறு வேறுபட்டிருப்பதேன்?* (*முகம்வாடி*) *அந்தக் காட்சியைக் கண்டதுமுதல் என்னுள்ளம் துடிக்கிறதே! பலாப்பழத்தைப் பார்த்துவிட்ட கடுவன் தன் காதல் மந்தியைக் கையாற் குறிப்பிட்டுக் கூப்பிட்டது என்னுள்ளத்தைப் பிளக்கிறதே! ஆறறிவுடைய மக்கட் குழுவிலே நூலறிவுடன் பிறந்த நான் என் வாழ்க்கைத் துணைவியை மயங்கி வாடவிட்டுச் சுற்றுகிறேன்—அந்தோ! அவள் நிலை! மனம் அழிந்து குப்பைக் கீரையை அது கொழுந்து விட்டவுடன் கிள்ளிவந்து உப்பின்றி வேகவைப்பாள். பைங்குதலைச் சிறுவனுக்கும் அன்னைக்கும் கொடுத்துத் தானும் தின்பாள். சோறும் அறியாள்! மோரும் அறியாள்!—அன்னை!* (*கண்ணீர் விடுகிறார்*) *அன்னையை நினைக்குந்தோறும் இன்னலுறும் என் சின்ன உள்ளம்! "எவ்வளவு நாள் இவ்வுடலைச் சுமப்பேன்! என் உயிர் போகவில்லையே!" என்ற பாடமே எப்போதும். நூலை விரித்தாற்போன்ற நரைத்த கூந்தல்! கோலே காலாகக் குறுக அடி வைத்து நடப்பாள்! பார்வை குன்றிய கண்! முற்றத்தைவிட்டு வெளியே செல்லமுடியாத*

முதியவள் ! அவள் நிலை நெஞ்சைப் பிளக்கிறதே!... செல்வமென்பது சிந்தையின் நிறைவாம்! அவாவே வறுமையாம்! வறுமை வருத்தும்போது சிந்தை நிறைவதெப்படி? குமணன் வெளிமானைப்போலக் கொடுக்கும் வள்ளலோ? சென்று பார்ப்போம்!— என்ன அழகிய மலையிது! பார்த்திருந்தாலே பசியாறுமே! (செல்கிறார்)

---

## காட்சி 5

**இடம்:** குமணன் அரண்மனை.
**காலம்:** மாலை.

பெருஞ்சித்திரனாரும் குமணனும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். பெருஞ்சித்திரனார் பொன்னாடையும் பொற்பணியும் அணிந்திருக்கிறார்.

**குமணன்:** (மகிழ்வுடன்) புலவர்களோடு அளவளாவி நீண்ட நாட்களாகின்றன! வாடியிருந்த என்னுள்ளத்திலே இன்றுதான் தங்கள் வருகையான மழை பெய்தது!

**பெருஞ்:** (மகிழ்வுடன்) நானும் பல நாட்களாகத் தமிழினிமை யறிந்தவர்களோடு உரையாடி மகிழும் பேற்றை இழந்திருந்தேன். அது நரகம்போலிருந்தது.

**குமணன்:** உண்மையே! காணாத வானுலகத் தினிமையைப்பற்றிக் கதை கட்டுகிறார்கள். அறிவிற் சிறந்த புலவர்களுடன் உரையாடிக் கொண்டிருப்பதுதான் வானுலகம் என்கிறேன் நான்.

**பெருஞ்:** தமிழ் நாட்டிலே பல ஆண்டுகளுக்குமுன்னே பல வள்ளல்க ளிருந்தனர். இடைப்பட்ட காலத்

திலே தமிழ்நாடு கரம்புபோலக் கவினும் பயமின் றிக் கிடந்தது. அக் குறையைத் தாங்கள் நீக்கி னீர்கள்,

குமணன் : (நாணத்துடன்) முகமனுக்கும் அளவு வேண் டாமா? அவர்களோடு என்னைச் சேர்க்கலாமா தாங்கள்?

பெருஞ் : ஏன் சேர்க்கலாகாது? முரசொலியும் வெண் மையான சங்கொலியும் பாறைகளில் மோதிக் கொண்டு இழியும் அருவியின் ஒலியும் வேறுபா டறிய முடியாதது பாரியின் பறம்பு. தங்கள் மலை யும் அத்தகைய காட்சியுடையதே. முல்லைக்கொடி படரத் தேரைக் கொள்கொம்பாகக் கொடுத்தவர் பாரி. ஓரி யென்பவர் வில்லாளி. 'வல் வில் ஓரி' என்றே வழங்கப்படுவார். அவர் மலை கொல்லிமலை. காரி என்னும் சிறந்த பரியை யுடையவர் காரி. இருண்ட குகைகளையும் உயர்ந்த கொடுமுடிகளை யும் குளிர்ந்த காட்சியையும் உடைய மலைநாட்டுத் தலைவன் பேகன். ஆய்வேள் என்பவர் மோசுகீர னாராற் புகழப்பெற்றவர். தம்மை எதிர்த்த பகை வரையும் புலவருடைய வறுமையையும் ஓட்டும் வீரர்-புகழ் விரும்பாதவர்-நள்ளி. குதிரைமலைத் தலைவர் அதிகமான். இவர்கள் கொடையினாலே புகழ்பெற்றவர்கள். வரையாது கொடுப்பவர்கள். தாங்கள் உண்மையாகவே அவர்களோடு ஒப்பிடத் தக்கவர்கள்.

குமணன் : (நாணத்துடன்) புலவர்களிடம் இவ்வாறு புகழுங்குறை யொன்றுள்ளது.

பெருஞ் : (புன்முறுவலுடன்) நன்றியறிதலைக் காட்டு வது புகழாகாது. வள்ளல்களுடைய ஒப்புரவிற்

குக் கைம்மாறு செய்யமுடியாது. எனவே, அவர்களுடைய பண்பைப் பலரறிய விளக்குவதுதான் புலவர்களின் கடமை. இன்று காலையில் தங்கள் செல்வம் நிறைந்த மாளிகையிலே வறுமைக்கோலத்துடன் உள்ள என்னைப் பெருமகிழ்வுடன் வரவேற்றீர்கள்! அறுசுவை யுண்டியைப் பொற்கிண்ணங்களிலே இட்டுப் பண்புடன் உண்பித்தீர்கள்! என் வறுமைக் கோலத்தைக் களைந்து செல்வவுடையை அளித்தீர்கள். (தம் உடையை நோக்கி நகைக்கிறார்) இந் நிலையிலே என் மனைவி என்னைப் பார்த்தால் அடையாளந் தெரியாமல் திகைப்பாள்! (முகம் வாடுகிறது)

குமணன்: (திகைத்து) ஏன் முகம் வாடுகிறது?

பெருஞ்: பல நாட்களாக என் மனைவியையும் குழவியையும் அன்னையையும் விட்டு வந்துவிட்டேன். வாடும் பயிர்க்கு நீர் கொண்டுவர வந்த நான் நீரிலே முழுகி விளையாடிக்கொண்டே இருக்கிறேன். அருள் கூர்ந்து விடைகொடுங்கள்.

குமணன்: (திகைத்து) இப்பொழுதே செல்ல வேண்டுமா?

பெருஞ்: ஆம் அரசே!

குமணன்: (முகம் வாடி) அப்படியானால் தங்கள் குடும்பத்தைச் சென்று பார்த்து மகிழுங்கள். ஆனால், என்னைத் தங்கள் இனிய உரையாடலால் அடிக்கடி மகிழ்விக்கவேண்டும்.

பெருஞ்: (மகிழ்வுடன்) தங்கள் விருப்பமே என் பணி.

குமணன்: (காவலனை நோக்கி) அமைச்சரிடம் சென்று வழக்கம்போல் மிகுதியான பொன்னையும் ஆடை

களையும் ஒரு களிற்றின்மேல் ஏற்றிப் பாகனுடன் கொண்டுவர ஏற்பாடு செய்யச்சொல்.

**காவலன் :** (வணங்கி) அரசர்பிரான் ஆணைப்படி. (செல்கிறான்)

**குமணன் :** இன்னும் கால்நாழிகையில் யாவும் வந்து விடும்.

**பெருஞ் :** (வியப்புடன்) களிறு சுமக்கும் செல்வமா? ஏன் அவ்வளவு?

**குமணன் :** (மகிழ்வுடன்) ஏன் அங்ஙனங் கூறுகிறீர்கள்? களிறுந் தங்களுக்கே!

**பெருஞ் :** களிறுமா? ஏற்றவனோ நான்? செல்வங் கிடைப்பினும் சீரறியாத நான் எங்ஙனங் காப்பேன்?

**குமணன் :** மன்னரிற் கற்றோர் சிறப்புடைய ரல்லரோ? மன்னர்க்குரிய களிறு மாசறு புலவர்க்குத் தகாதோ? தமிழ்ப் புலவர்கள் களிற்றின்மீதூர்ந்து செல்லும் நிலையுடையவ ராலன்றி என் மனம் மகிழாது. தங்கட்குச் சிறப்புச் செய்யாமல் நான்மட்டும் சிறப்புப் பெறுவேனோ? மேலும், இப் பொருளெல்லாம் உழைத்துக் கொடுத்த ஏழைகளின் பொருள்களே! எனக்கெனப் பொருளேது? அரியணையிலே அமர்ந்து மகிழும் அரசன் வாழ்வது அந்த ஏழைகளாலேயே! என் நாட்டிலே செல்வன் நிலைவேறு, அரசன் நிலை வேறு, ஏழைகளாகிய உழைப்பாளிகளின் நிலை வேறு அல்ல. தங்களுக்குக் கொடுக்கும் இப் புகழும் அந்த ஏழைகளையே சாரும்.

**பெருஞ் :** (வியப்புடன்) வறியனாக வந்த நான் செல்வனாகக் களிறூர்ந்து செல்கிறேன். தாங்கள் கூறிய பொருள் பொதிந்த மொழிகளையும் என் உள்ளத்

திலே அமைத்துச் செல்கிறேன் (காவலன் வருகிறான்)

**காவலன் :** (வணங்கி) அரண்மனை வாயிலில் யானைப் பாகன் யானையைக் கொண்டுவந்து நிறுத்தி யிருக்கிறான்.

**குமணன் ;** (எழுந்து) நன்று! வாருங்கள் செல்வோம். வியப்பொன்று மில்லை யிதனிலே. தமிழ்ச் செல்வத்தையும் பொருட் செல்வத்தையும் பண்டமாற்றுச் செய்துகொள்கிறோம். எப்பொருளையும் யாவருக்கும் உரிமையாக்குவதே நம் வேலை.

(செல்கிறார்கள்)

---

## காட்சி 6

**இடம் :** இளவெளிமான் நகரில் அரண்மனை.

**காலம் :** காலை.

இளவெளிமானும் இளங்குமணனும் அழகுநம்பியும் உரையாடுகிறார்கள்.

**இளங்கு :** நண்பரே! தங்கள் அன்பிலே இரண்டு நாட்கள் ஊறிவிட்டோம் நாங்கள். இனி, எங்களைத் தாங்கள் வேறாக நினையாமல் முதிரத்துக் காட்சியைப் பார்க்க வரவேண்டும்.

**இளவெளி :** (மகிழ்வுடன்) தவறாமல் வருவேன். (காவலன் வருகிறான்) எங்கே வந்தாய் ?

**காவலன் :** (வணங்கி) ஒரு புலவர் வந்திருக்கிறார்.

**இளவெளி :** (நகைத்து வெறுப்புடன்) பொருளருமையறியாத புலவரோ? வரச்சொல்.

(காவலன் வணங்கிச் செல்கிறான்)

இளங்கு : நன்று கூறினீர்கள். எதையாவது உளறிக் கொட்டிவிட்டு நிறையப் பரிசு விரும்பும் நெஞ்சினர் இவர்கள். பண்டமாற் றறியாப் பச்சைக் குழந்தைகள் !

இளவெளி : ஆம். இவர்கட்கு வரையாது வழங்க வேண்டுமாம்.

அழகு : அவ்வாறு வழங்குவோரே வள்ளல்களாம்.

இளங்கு : எடை போட்டுப் பார்க்காமலே சரக்கை மதிப்பிடும் ஏமாறிகளுக்குப் பெயர் வள்ளல்கள் !

(பெருஞ்சித்திரனார் வருகிறார்)

இளவெளி : ஓ ! நீங்களா? வாருங்கள்; வாருங்கள் ! காசின் எண்ணிக்கை யறியாத இளங்குழந்தைக ளல்லர் நாங்கள் ! அது வரும் வழியும் போக வேண்டிய வழியும் சீர்தூக்கி அறிவோம். எங்களாலே உங்களுக்குப் பயனில்லை !

இளங்கு : (அவர் ஆடையை உற்றுநோக்கி) இவர் இரண்டு நாட்களுக்குமுன் வந்தவரா ?

இளவெளி : ஆமாம் ! புலவரே ! ஏன் நிற்கவேண்டும்? பொருந்தும் அந்த இருக்கையிலே! புகலும் வந்த போக்கதனை ! முன்பு கந்தலுஞ் சிந்தனையுமாய் வந்தார் கைநிறையப் பொருள் கிடைக்குமென்று.

இளங்கு: இப்போது இரக்கப்போனாலுஞ் சிறக்கப் போகவேண்டுமென்று பொன்னும் பட்டும் புனைந்து வந்திருக்கிறார் போலும் !

அழகு : ஆம். புலவரறியாததுமுண்டோ?

(மூவரும் நகைக்கிறார்கள்)

**இளவெளி:** ஆனால், முன்னையைவிட இப்போது ஏமாந் தார். அடடா! ஏன் நிற்கிறீர். அமர்ந்து அமர்ந்து கூறுங்கள் ஆவலை!

**இளங்:** (நகைத்து) ஏன் ஏமாந்தார்?

**இளவெளி:** முன்பு வறியகோலத்தோடு வந்தபோது மதிக்கவில்லையென்று இப்போது சிறப்புடன் எழுந் தருளினார். ஆனால், நாம் இம்மாதிரிப் பேர்வழி களை எப்போதும் மதிப்பதில்லையென்று சிறிதும் அறியார். ஆகையால் ஏமாந்தார்.

**பெருஞ்:** (நின்றுகொண்டே புன்முறுவலுடன்) நான் ஏமாந்துபோகவில்லை. ஒரே முறையில் ஒருவ ருடைய உள்ளத்தை உணர்வேன். மேலும் இந்தப் புனைவு தங்களை ஏமாற்றவேண்டி வந்ததன்று. புலவர் புரவலர்போற்றும் மதிப்புடையார் என்று நீங்கள் அறியாதது என் குறையா?

**இளவெளி:** (நகைத்து) நன்று! படித்த புலவர் எப்படி யும் பண்பாக மாற்றுவார் பொருளை! எடுத்து விளக்குவது இழிவாகத்தான் முடியும். ஆகவே, அதைவிட்டு வந்த நோக்கத்தை வகைசெய்து கூறுங்கள்.

**பெருஞ்:** உலகத்திலே என் போன்றவர்களை ஆதரிக்கத் தங்களால் முடியாது என்பதையும், எங்களை ஆத ரிக்கும் வள்ளல்களும் இருக்கிறார்கள் என்பதையும் அறிவிக்கவே வந்தேன்.

**இளவெளி:** ஓ இதுவும் ஒரு சூழ்ச்சியா? இப்படிக் கூறியவுடனே நானும் வள்ளலெனும் பட்டத்தை வாங்கத் தங்கட்கு வரையாது கொடுப்பேனென்று மனப்பால் குடிக்கிறீர் என்று நினைக்கிறேன்.

**பெருஞ்:** (நகைத்து) தமிழ்ப்பால் பருகு மெனக்கு மனப்பால் வேண்டாம் செல்வரே! தமிழ்ப் பூங்கா விலே மணமிக்க மலர்களுமுண்டு. தங்களைப் போன்ற முட்புதர்களுமுண்டென்று நன்கறிவேன். இருளில்லாவிட்டால் வெளிச்சத்திற்கு மதிப்பேது? மேலும்!

**இளவெளி:** (சீற்றத்துடன்) எம்மைப் பழிக்கவேண்டு மென்றே வந்தீர்களா? நல்லது! உங்கள் வள்ளல் வழங்கியதுதா னென்னவோ?

**பெருஞ்:** (புன்முறுவலுடன்) சீற்றம் வேண்டாம். நான் செல்கிறேன். அவர் வழங்கியவற்றையெல்லாம் பறைசாற்றுவது என் நோக்கமன்று. குதிரை வீர ரான தங்களை யானை வீரராக்கவேண்டுமென்று வந்தேன். என்னைப் புரந்த புரவலர்—குமணப் பெருமான்—(இளங்குமணன் முகம் கனல்கிறது) எனக்குத் தகுதியென்று நினைத்து, 'நெடுநல் யானை' ஒன்றை வழங்கினார். எனக்கோ 'அர்த்த ராத்திரி யிலே குடைபிடித்துக்கொள்ளும்' ஆவலில்லை. உண்டி கிடைத்தாலே போதும். ஆகையால், அந்தக் களிற்றினைத் தங்கள் காவல் மரத்திலே பிணித்தேன். பிறகு, அதைத் தங்களிடம் கூறவே வந்தேன். அதனைக் கைக்கொண்டு மகிழ்க! நான் செல்கிறேன். (செல்கிறார்)

**இளவெளி:** (நகைத்து) இந்தப் புலவன் பூச்சாண்டி காட்டிச் செல்கிறான். திரும்பவும் அழைப்பேன்; மதிப்பேன்; யானையும் பரியும் வழங்குவேனென்று எண்ணியிருப்பான். மந்திரத்திலே மாங்காய் விழுவதில்லை! அடே காவலா!

**காவலன் :** (வணங்கி) ஆணை அரசே!

**இளவெளி :** ஓடிப்போய் அந்தக் களிறு கட்டப்பட்டிருந் தால் அவிழ்த்துச் சென்று யானைப் பந்தியிலே கட்டுங்கள்.

**காவலன் :** (வணங்கி) நன்று அரசே! (செல்கிறான்)

**இளங்கு :** (வருத்தத்துடன்) தங்களை இவ்வளவு வருத்தி யவர் என் தமையனார்.

**இளவெளி :** (நகைத்து) அதற்கென்ன செய்யலாம்? வள்ளல் வழங்குகிறார் வரையாமல்; இரவலன் இடித்தும் இகழ்ந்தும் பேசுகிறான் புரவலனை! (சீற் றத்துடன்) அப்புலவனை வாளால் வீசாமல் விட் டேனே!

**இளங்கு :** புலவனைக் கொல்வது வீரத்துக்குப் புன்மை. (சிந்தனையுடன்) ஆராயாமலே புலவரைப் போற்று கின்ற வள்ளல்களை வாரி வீசவேண்டும்! காலங் கழிகிறது! சென்று வருகிறேன்.

(எழுகிறான்; அழகு நம்பியும் எழுகிறான்)

**இளவெளி :** நன்று. மறவாதீர்கள் என்னை.

---

## காட்சி 7

இடம்—இளவெளிமானரண்மனையிலே அந்தப்புரம்.
காலம்—இரவு.

முல்லைக் கொடியும் மல்லிகையும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

முல்லை: ஏன் இப்படிப் பறக்கிறாய்?

மல்லிகை: காலம் ஆகவில்லையா? அன்னை வேறு தேடுவாள்.

முல்லை: இரு, செல்லலாம். உன்னிடம் ஒன்று வினவ வேண்டும்.

மல்லிகை: (புன்முறுவலுடன்) என்ன அது? விரைவில் சொல்.

முல்லை: உன் காதலர் இன்று உன்னைப் பார்த்தாரா?... இல்லை, நீ வழிகூட்டி அனுப்பினையோ?

மல்லிகை: ஆம். அதைக்கூற மறந்தேன். என் அச்சத்தையெல்லாம் அகற்றி, விரைவிலே திருமணம் புரிவதாகச் செப்பினார்.

முல்லை: (அன்புடன்) நான் கூறவில்லையா? உண்மைக் காதல் ஒருபோதும் வீணாகாது. நன்று, எங்கே சந்தித்தீர்கள்?

மல்லிகை: பூங்காவிலேதான்.

முல்லை: அப்படியானால், என்னைப் பிரிந்துவிடுவாய்.

மல்லிகை: உண்மையன்பு பிரிக்குமா?

முல்லை: ஆம். எங்கிருந்தாலும் உள்ளம் ஒன்றித்தானே இருக்கும்? ஒன்றுபட்ட உள்ளங்களை உலகிடைப் பிரிப்போர் எவருமிலர்.

மல்லிகை: (நகைத்து) நான் கூறவந்தது அதுவன்று.

முல்லை: பின் எது?

மல்லிகை: உள்ளமேயன்றி இடமும் பிரியோம் என்பதுதான்.

முல்லை: (வியப்புடன்) நீ என்ன மந்திரங் கற்றவளா? அப்படிக் கற்றிருந்தாலும் மந்திரத்தாலே மாங்காய் விழாதே!

மல்லிகை: மந்திரமன்று! தந்திரமே! உன் விருப்பப் படியே!

முல்லை: என்னடி கூறுகிறாய்? ஒன்றும் விளங்கவில்லையே!

மல்லிகை: (குறும்பாக) ஏன் விளங்கும்? நான் கைகூப்பி, நேற்றுப் பொழிலிலே வேண்டினேனே; அதை இறைவன் முற்றுவித்தார். காதல் வண்டியிலேறிவிட்டாய். இனி அது முதிரத்துக்குத்தான் கொண்டுவிடும்.

முல்லை: (ஐயத்துடன்) பிதிர்க்காமல் உள்ளபடி தெளிவாகச் செப்பமாட்டாயா?

மல்லிகை: (சினமடைந்தவள்போல) ஓ! ஒன்றுமே தெரியாதோ? நீ கூறாவிட்டாலும் உன் நிலை கூறியதே உன் உள்ளத்தை! என்னை மறைப்பதனால் எளிதில் உன் காதல், முற்றுப்பெறுமோ?

முல்லை: (அவளைத் தழுவிக்கொண்டு) நான் எப்படியடி சொல்வேன்? மேலும் உன்னை நிறுத்திய நோக்கமும் அதுதானே. நேற்று நீ வேலியோரம் போன பிறகு, ஒருவர் அங்கு வந்தார். அவரும் என்னைப் பார்த்தார். நானும் அவரைப் பார்த்தேன். அவ்வளவுதான். அப்போதுமுதல் அவரென் உள்ளத்திலே (நாணத்துடன்) ஊன்றி விட்டாரடி!

மல்லிகை: (நகைத்து) நன்று; உன்னுள்ளத்திலும் வாயிலும் கண்ணிலும் ஊறிக்கொண்டிருக்க ஒருவ ரகப்பட்டாரா? 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளைவது' விந்தையா? அவர் யாரென்று நான் அறிவதாற் பிழையில்லையே?

முல்லை: நானே அறியேனடி; உனக்கெப்படி அறி விப்பேன்?

மல்லிகை: (நகைத்து) சரி, யாரோ மொட்டைத்தாதன் குட்டையில் விழுந்தான். அவனை அறிவதற்கு என்ன வழி யிருக்கிறது! உம். நீ அவரை உள்ளக் குட்டையிலிருந்து மெதுவாக எடுத்து வெளிவிடு. இல்லாவிட்டால், 'ஆண்பாவம்' வந்து அல்லற் படுத்தும்.

(இருவரும் நகைக்கிறார்கள்)

முல்லை: (கவலையுடன்) நாணந்தான் அவரை அறிய முடியாமல் தடுத்துவிட்டது. மேலும் அவருட னேயே சென்றுவிட்டது. அவரோ என் உள்ளத் திலே ஊன்றிவிட்டார்.

மல்லிகை: ஊன்றினாலும் ஊன்றாவிட்டாலும் காவலை யுடைய உள்ளக் குளத்திலே வந்து ஊர்பே ரறி விக்காமல் விளையாடுகிறவரை வெளியேற்றத்தான் வேண்டும்.

முல்லை: (சினத்துடன்) நீ உன் காதலரை மறப்பாயோ? நேற்று நீ கொண்ட கவலை இன்னும் நினைவிலிருக் கிறதே......கற்புடைய பெண்களின் உள்ளத்திலே காதல் மலர் ஒருமுறைதானே மலரும்? பிறகு, மற்றொருமுறை மலர்வதெப்படி? (பெருமூச்சு விட்டு) உன் காதல் இனிய விடிவெள்ளியாக இருக்

கிறது. என் காதல் இருண்ட வானமாக இருக்கிறது. இனிச் செய்வதென்ன? (கண் கலங்குகிறுள்)

**மல்லிகை:** (அன்புடன் தழுவி) வருந்தாதே. அறிவேன் அவரை. உன் உள்ளப் பொய்கையில் அரச அன்னந்தான் வந்தமர்ந்தது.

**முல்லை:** (பரபரப்பாய்) யாரடி அவர்?

**மல்லிகை:** முதிரத்தவர்! இளங்குமணர்! இளவரசர்!

**முல்லை:** (நாணத்துடன்) யாரடி சொன்னுர்? உன் காதலரோ?

**மல்லிகை:** ஆம்.

**முல்லை:** என்ன வியப்படி யிது! அவர் யாரோ, நான் யாரோ? செம்மண் பூமியிலே பெய்த நீர்போல ஒன்ருகக் கலந்துவிட்டன எங்களுள்ளங்கள்!

**மல்லிகை:** (அன்புடன்) இதுதான் ஊழ்வழி யென்பார்கள்.

**முல்லை:** (புன்முறுவலுடன்) ஊழ்வழி யென்பதில் ஐயமில்லையடி! இதைக்கேள். அவர் என்னருகில் வந்தவுடன் நடுங்கிப்போனேன். நீ இருக்குமிடத்திற்கு வரவேண்டுமென்று நினைத்தால் அடியெடுத்தும் வைக்கமுடியவில்லை. அதை நினைக்கும் போதெல்லாம் நகைப்பு வருகிறதடி!

**மல்லிகை:** (அன்புடன்) எல்லாம் அவர் தம் நண்பரிடம் கூறிவிட்டார். அவரும் என்னிடம் இசைத்துவிட்டார்.

**முல்லை:** வேறு ஏதாவது விளம்பினுரோ?

**மல்லிகை:** (நகைத்து) நீங்கள் மறுபடியும் எப்போது சந்திப்பீர்களென்றுதானே கேட்கிருய்? கூடிய

விரைவிலே முதிரத்திலே நாம் அவர்களைச் சந்திப்போம். அஞ்சாதே!

முல்லை: (அன்புடன்) உனக்கு என்ன கைம்மாறு செய்வேனடி!

மல்லிகை: என்னை விரைவிலே வீட்டிற்கனுப்பினால் போதும்.

முல்லை: என்னைத் தனிமையிலே விட்டுவிட்டா செல்கிறாய்? நேற்று அப்படிச் சென்றதாலேதான்......

மல்லிகை: என்ன கெடுதி நேர்ந்ததாம்?

முல்லை: ஊர் பேரறிவியாமலே ஒருவர் வந்து புகுந்தார் என் உள்ளக் கோயிலில்!

மல்லிகை: (நகைத்து) அதற்குள் உன் உள்ளத்தை அவர்க்குக் கோயிலாக்கிவிட்டாயா? பின், அவர் உன் உள்ளத்திலே இருக்கும்போது தனிமையென்ன?

முல்லை: (நாணத்துடன்) வைகறையிலேயே வந்துவிட வேண்டும். போய் வா!

மல்லிகை: (அன்புடன்) அவர் பிரிவினாலே அழப் போகிறாய்.

(செல்கிறாள்)

---

## காட்சி 8

**இடம்:** பெருஞ்சித்திரம் என்னும் சிற்றூர். பெருஞ்சித்திரனார் வீடு.

**காலம்:** நண்பகல்.

பெருஞ்சித்திரனார் அன்னை மிக முதிர்ந்த வயதுடைய மங்கையர்க்கரசியும், மனைவி அன்புக்கோடியும் உரையாடுகிறார்கள். சரியான உணவில்லாமையால் மெலிந்த தோற்றம். முதியவள் அடிக்கடி இருமிக்கொண்டிருக்கிறாள். நடுங்கிய பேச்சு.

**மங்கை:** என் வயதுக்கு இதைப்போலப் பட்டினியால் வாடியதேயில்லை. எங்கே போயிருக்கிறானோ? எங்கே பார்த்தாலும் வறுமை! வறுமை! (மருமகளை நோக்கி) உம்...உன்னிடம் ஏதாவது கூறினானோ?

**அன்பு:** வெளிமானிடம் செல்வதாகச் சொன்னார். (கண்கலங்க) இரண்டு நாட்களாகியும்......

**மங்கை:** (இருமிக்கொண்டு) என் வயிற்றிலே பிறந்த தீவினை! ஐயோ! வெறுங்குப்பைக் கீரையைத் துவட்டித் தின்று மெலிந்தாயே நீயும்! நன்றாக உண்டு உடுத்துக் களிக்கவேண்டிய சிறு பெண்!

**அன்பு:** (அன்புடன்) தாங்கள்மட்டும் அறுசுவையுணவை யுண்கிறீர்களா? இப்போதுதான் பசியின்றி நிறைய உண்ணவேண்டும். தங்களை ஆதரவு செய்யமுடியாமல் நாங்கள் வாடுகிறோமேயென்ற கவலையே என்னை வாட்டுகிறது.

**மங்கை:** எனக்கு என்னடி அம்மா! காடு வாவா என்கிறது! வீடு போபோ என்கிறது! உண்ணவும் தின்னவும் வேண்டிய இளம்பெண் நீ! ' இன்று

இளமை வறுமை வந்து எய்தியக்கால்,' என்று நீ படித்ததில்லையா? (துக்கத்துடன்) மூன்று வயது தானே ஆயிற்று! அந்தப் பச்சை மண்! அதற்குக் கூட......(இருமுகிருள்) அவன் எங்கே?

அன்பு: (கண்கலங்கி) அண்டைவீட்டுப் பெண் அழைத்துப்போனுள் விளையாட. பசியை ஓட்டமுடியாமல் அப் பசி அவரை எங்கெங்கோ ஓட்டுகிறதே!

மங்கை: ஓட்டுவது மட்டுமா? உன் மேனியின் அழகையுந் தின்றுவிட்டதே! (மூன்று வயதுடைய சிறுவன் ஒருவன் வெளியிலிருந்து ஓடிவந்து சமையலறைக்குள் செல்கிருன்)

அன்பு: அங்கே ஏனம்மா ஓடுகிருய்?

சிறுவன்: (உள்ளேயிருந்து மழலைச் சொற்களால்) கீரை!

அன்பு: தங்கள் பேரனுக்குக் கீரையின் பேருந் தெரிந்துவிட்டதே! (சிறுவன் ஓடிவருகிருன். அவனை அன்புக்கொடி அணைத்துக்கொள்கிருள்)

சிறுவன்: (அழுதுகொண்டே) அம்மா! பசி!

அன்பு: (அன்புடன் முத்தமிட்டு) கண்ணே! பசியாடா வேண்டும்?

சிறுவன்: (அவள் முகத்திலே மலர்க்கைகளால் அடித்து) உம். உம். பசிக்குதம்மா!

அன்பு: உள்ளே போனுயே!

சிறுவன்: (அழுதுகொண்டே) போ, அதிலே ஒண்ணுமில்லே.

மங்கை: (கைகளை நீட்டி) அழாதே கண்ணு! இங்கே வாடா! அம்மாவைத் தொந்தரவு செய்யாதேடா!

**சிறுவன் :** போ, வரமாட்டேன். அம்மா! சோறு!

**அன்பு :** (கலங்கிப்போய் அவனை அணைத்துக்கொண்டே) அதுகூட நினைவிலிருக்கிறதா? கண்ணு! ஐயோ! புலமைச் செல்வம் படைத்தும் வறுமைப் பேயை ஓட்ட வழியில்லையே! (சிறுவன் கண்ணீரைத் துடைத்து முத்தமிட்டு) உன் வயிற்றுக்குக்கூட ஒரு பிடி சோறில்லையே! என்ன காலக்கொடுமை! (மறுமுறையும் முத்தமிடுகிறாள்)

**சிறுவன் :** (அவள் முகத்தைப் பிடித்துத்தள்ளி) முத்தம் வாணும் போ! சோறு கொண்டா.

(அழுகிறான்)

**மங்கை :** (அவனை அமைதியாக்க) ஐயையோ! புலி வருகிறதடா புலி! கப்சிப்புண்ணு இருடா! அழாதே.

**அன்பு :** (அவனை அணைத்து) ஆமாண்டா! ஐயையோ! நாலு காலடா அதுக்கு. கண்ணை மூடிக் கொள்ளடா! அது போனபிறகு அழலாம், வாயை மூடு.

**சிறுவன் :** (அழுதுகொண்டே நாற்புறமும் நோக்கி) உம்! ஏமாத்துறீங்க! (அன்னையை அடிக்கிறான்) சோறு வேணும் இப்போ.

**அன்பு :** என்னை அடித்தால் செத்துப்பூடுவேண்டா! அப்போ என்னடா பண்ணுவே?

**சிறுவன் :** (அழுதுகொணடே) பின்னே பசிக்குதே!

**அன்பு :** (புன்முறுவலுடன்) என்னை அடித்தால் பசி நீங்குமோ? (சிறுவன் பேசாமல் அழுகிறான்) அதோ பாரடா உன் அப்பா!

**சிறுவன் :** (வாயிற் பக்கம் பார்த்து) எங்கே பொய்! (அழுகிறான்)

அன்பு: (அன்புடன் முத்தமிட்டு) அது இருக்கட்டும். கண்ணு! அப்பா வந்தால் எப்படிப் பழித்துக் காட்டுவே? (சிறுவன் அழுகையை நிறுத்தி முகத்தைச் சுருக்கிக் காட்டுகிறான். பெருஞ்சித்திரனார் வருகிறார். அன்புக்கொடி சிறுவனை யெடுத்துக் கொண்டு எழுந்து வியப்புடன்) அடே அப்பா! கண்ணே! பாரடா! அத்தை! பாருங்கள் உங்கள் குழந்தையை! புலவர்க்கரசரை!

மங்கை: (அன்புடன்) வாடா கண்ணே! எதோ! கிட்டே வா!

பெருஞ்: (அன்னையின் அருகிற் சென்று வணங்கி) இதோ அம்மா! பாவி இக்கோலத்துடன் உங்களை வாடவிட்டுச் சென்றும் இப்போதுதான் வந்தேன். (கண்ணீர் விடுகிறார்)

மங்கை: (அன்புடன் அவனைத் தொட்டுத் தடவிப் பார்த்து) வருந்தாதே சித்ரா! பொன்னுடை! பொற்பணி! புலமைக்கேற்ற நிலைமை! இப்போதுதான் என் எண்ணங் குளிர்ந்ததடா! (கைகளால் அவருடைய கன்னத்தைத் தடவித் தன் கன்னத்தில் வைத்து நெரிக்கிறாள். அன்புக்கொடி புன்முறுவல் செய்கிறாள்)

பெருஞ்: (மனைவியின் கையிலிருந்து சிறுவனை வாங்கி அணைத்து முத்தமிட்டுக்கொண்டே) இன்றுங் கீரை தானே?

அன்பு: (புன்முறுவலுடன்) இன்னுமா வறுமைப் பேச்சு? (நான்கு ஆட்கள், சுமக்கமுடியாத மூட்டைகளைக் கொண்டுவந்து வைக்கிறார்கள். வியப்புடன் அவர்களை நோக்குகிறாள்)

**பெருஞ் :** (அன்புடன்) வையுங்களப்பா இப்படி ! எனக்காக மிகவும் தொந்தரவெடுத்துக் கொண்டீர்கள்.

**ஆட்களில் ஒருவன் :** தொந்தரவா? மகிழ்ச்சியை வெளியிட வாய் போதாது. தங்களைப்போன்ற புலவர்கட்குப் பணி செய்யப் புண்ணியம் வேண்டாமா?

**மற்றொருவன் :** எங்களரசர் பொருள் கொடுத்தார் ; தங்களுக்கு நாங்கள் உழைப்பாவது கொடுத்தோமே.

**மூன்றாவதாள் :** எவ்வளவோ ஆட்கள் இருக்கிறார்கள். அவர்கட்குக் கிடைத்ததா இப் புண்ணியம்?

**நான்காவதாள் :** (துக்கத்துடன்) தமிழன்னையின் செல்வ மகனை தங்கள் குடும்பத்தை இந் நிலையிலா இந்த நாடு வைத்திருக்கவேண்டும்? அந்தோ ! இழிவு ! இழிவு !!

**பெருஞ் :** (புன்முறுவலுடன்) அந்த இழிவை யெல்லாம் வள்ளலாகிய குமணன் வழியனுப்பி விட்டாரே ! இனி அதை மறந்து விடுவோம். நீங்கள் கூறிய இன்மொழிகள் என்னை மெய்ம்மறக்கச் செய்து விட்டன ! நறுமுல்லையின் மணம் அதைச் சூழ்ந்த இடமெல்லாம் கமழுவதுபோல, நீங்கள் குமணரின் நற்பண்புகளை அடைந்திருக்கிறீர்கள். 'அரசனெவ்வழி அவ்வழி குடிகள்' என்னும் பழமொழி உண்மையானதே ! ஏன் நிற்கிறீர்கள்? அமருங்கள் முதலில்.

**நால்வரும் :** (பணிவுடன்) தங்கள் கட்டளைப்படி. (அமர்கிறார்கள்.) அன்புவல்லி உள்ளே சென்று பெரிய பானைநிறைய நீர் கொண்டுவந்து வைக்கிறாள். ஒரு

செம்பினால் முகந்து ஒவ்வொருவரையும் கால் கை கழுவி, முகங்கழுவி நீர் பருகச்செய்கிறாள். பெருஞ் சித்திரனாரும் கால் கைகளைக் கழுவி முகங்கழுவி நீர் பருகுகிறார்)

**அன்பு :** ஒரு நாழிகை இருந்தீர்களானால் எல்லோரும் உண்ணலாம். (துக்கத்துடன்) வந்தவுடனே களைப் பாற்ற முடியாநிலையில் இருந்துவிட்டோம்.

**பெருஞ் :** ஆம். சற்று ஓய்வெடுத்துக்கொள்ளுங்கள்.

**ஆ. ஓ :** அன்புடனளித்த நீராலேயே களைப்புப் போய் விட்டது! பிழையாக எண்ணாமல் விடை கொடுத் தால் உடனே சென்று அரசரிடம் அறிவிக்க நேரமிருக்கும்.

**பெருஞ் :** (அன்புடன்) நீங்கள் வள்ளலிடமிருந்து பழகி யவர்கள். உங்கள் வீட்டிற்கு வந்தவரை உண்பிக் காமல் அனுப்புவீர்களா? ஏதோ இதுவரையிலே பாலைவனத்திலே வாடித் திரிந்தாலும், இப்போது குமணரின் அருட் பொழிலிலே வந்து தங்கிவிட் டோம் நாங்கள். வந்த விருந்தினரை வறிதே அனுப்பமாட்டோம்.

**அவன் :** (மற்றவர்கள் முகத்தை நோக்கியவாறு) தங்கள் மனம் வருந்த நாங்கள் நடந்துகொள்ளமாட்டோம்; ஒரே ஒரு வேண்டுகோள்மட்டும்.

**பெருஞ் :** என்ன அது?

**அவன் :** எங்களைப் பெரிய விருந்தினராக நினைத்துக் கொள்ளாமல் தங்கள் குடும்ப ஆட்களாகவே நடத்தவேண்டும். அப்போதுதான் எங்கள் உள் ளம் இசையும்.

**பெருஞ்:** நீங்கள் கூறுவதன் பொருள் விளங்கவில்லை. எங்கள் வீட்டிலே யாரும் ஆளாக இருக்கமுடியாது. எல்லோரும் பணி செய்வோரே! தலைவர்களும் அவர்களே! என்ன நோக்கத்துடன் அவ்வாறு கூறுகிறீர்கள்?

**அவன்:** (ஒருபுறமாக நோக்கியவாறே) இப்போது சமைப்பதற்கு வேண்டிய பொருள்களை நாங்கள் வாங்கிவரும் புண்ணியம் வேண்டும். இதோ விரைவில் வாங்கி வருகிறோம். தாங்கள் அப் பச்சைச் குழந்தையுடன் பேசி மகிழுங்கள். அன்னையின் பிரிவு வாட்டத்தைப் போக்குங்கள். அந்த இளம் புலவர் எங்களைப் பார்த்து அச்சத்துடன் தங்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பதைப் பாருங்கள். நாங்கள் இதோ வந்துவிடுகிறோம் (எல்லோரும் போகிறார்கள்.)

**பெருஞ்:** (அவர்கள் செல்வதைத் திகைப்போடு பார்த்து) என்னென்பேன் இவர்கள் அன்பை!

**அன்பு:** என்ன பேசாமலிருந்தீர்களே? அவர்களிடம் என்ன வேண்டும் என்று கூறாமலும், பொருள் கொடுக்காமலு மிருந்தீர்களே!

**பெருஞ்:** (மகிழ்வுடன்) கவலையேன்? அவர்கள் பேரன்பை அணைபோட்டுத் தடுப்பதா? அது போகட்டும். மூட்டைகளைப் பிரித்துப்பார். (சிறுவனை முத்தமிட்டு) என்ன ஐயா! இளம் புலவரே! அவர்களை விரட்டிவிட்டாயே? அதை மன்னித்துவிடுகிறேன். ஒரு முத்தங்கொடு (சிறுவன் முத்தமிடுகிறான்) அப்பாடா! காலெல்லாம் வலி (அமர்கிறார் தரையில்)

அன்பு: (ஒரு மூட்டையை அவிழ்த்து) அப்பா! கண்ணைக் கூசுகிறதே! பொன்மாலைகளும் நவமணிமாலைகளு மாகவே! எல்லாம் நமக்கா?

பெருஞ்: (நகைத்து) எல்லாம் இந்த வீட்டுத் தலைவிக் குத்தான்.

சிறுவன்: அப்பா! எனக்கு அது! (நகையின் பக்கம் கையை நீட்டுகிறான்) விடப்பா!

பெருஞ்: பாரடி! இந்தப் பெரிய புலவனுக்கு இப் போதே நகையிலே ஆவல். (அவனை விடுகிறார்)

அன்பு: வாடா கண்ணே! (அவனை மடிமேல் அமர்த்திச் சில மாலைகளை அவன் கழுத்திலே இடுகிறாள். அவன் சில மாலைகளை எடுத்துக்கொண்டு பாட்டியிடம் ஓடு கிறான்)

மங்கை: (அவனை அணைத்து முத்தமிட்டு) எங்கே எனக் குக் கொடடா? (சிறுவன் அவைகளைப் பாட்டியிடங் கொடுக்கிறான். மூவரும் மகிழ்கின்றனர்)

அன்பு: (மற்றொன்றை அவிழ்த்து) எல்லாம் பட் டாடைகள். (மற்றொன்றை அவிழ்த்து) 'ஆ! இவை களும் ஆடைகளே! (மற்றொன்றை அவிழ்த்து) கண்ணப்பா! வாடா! எல்லாம் பொற்காசுகளடா!' (சிறுவன் ஓடிவந்து அவற்றை வாரியிறைக்கிறான்) அரைநாழிகைக்குமுன் அருந்த உணவில்லாமல் அயர்ந்திருந்தோம். இப்போது எவ்வளவு செல்வம்! "ஆறிடும் மேடும் மடுவும்போ லாம்செல்வம்" என்பது எவ்வளவு உண்மையானது!

பெருஞ்: ஏனம்மா! வாழ்க்கைத் துணைவியே! போதுமா?

அன்பு: (மகிழ்வுடன்) என்னசெய்வது இவற்றையெல்லாம்?

பெருஞ்: (நகைத்து அன்னையை நோக்கி) கேட்டீர்களா அம்மா! உங்கள் மருமகள் வறுமை வாட்டும் போதும் என்ன செய்வது என்றாள்! இப்போதும் என்ன செய்வது என்கிறாள்! நீங்களே சொல்லுங்கள்.

மங்கை: அம்மாடி! நன்றாக வைத்துக்கொண்டு வேண்டியபடி செலவிடடியம்மா! (மகிழ்வுடன்) நீ பட்ட துன்பமெல்லாம் பறந்துவிட்டதடி!

அன்பு: தங்கள் ஆணைப்படியே நடந்துகொள்கிறேன் அம்மா! இனியாவது தங்கள் வாய்க்கினிய பண்டங்களைச் செய்து கொடுக்கும் நலங் கிடைத்ததே; அதுவே போதும்.

பெருஞ்: (கண்ணீர் ததும்ப) பெற்ற வயிற்றைக் காய வைத்த பெரும்பேதை நான்! (பெருமூச்சு விடுகிறார்)

அன்பு! (அன்புடன்) ஏனிந்தக் கவலை இனி? இப்பொருளைச் செலவழிக்கும் முறையைக் கூறுங்கள்.

பெருஞ்: (நகைத்து) நன்று "காதலிருவர் கருத்தொருமித் தாதரவு, பட்டதே இன்பம்." இப்பொருளைச் செலவிடும் உரிமை இல்லாளாகிய உனக்கே! எனக்கேதடி அவ் வுரிமை? நாளைக்கு வேண்டுமென்று இன்று குறைத்துச் செலவுசெய்ய வேண்டியதில்லை. உன்னை விரும்பினவர் உனக்குக் கடன் கொடுத்தவர்! நம் நண்பர்! உறவினர் மற்றும் யாவரென்றில்லை! எல்லோர்க்குங் கொடு; என்னைக் கேட்கவே வேண்டாம்.

மங்கை: (மகிழ்வுடன்) என் வயிறு புண்ணியம் செய்தது! என்ன உயர் நோக்கம்!

பெருஞ்: (மனைவியை நோக்கி) ஏன் பேசாமல் வாயடைத்து நிற்கிறாய்? என் அன்னை என்னைப் புகழ்ந்ததற்கா? காக்கைக்குந் தன் குஞ்சு பொன் குஞ்சுதானே? உன்னிடந்தான் மதிப்புப் பெற வேண்டும்.

அன்பு: (நாணத்துடன்) போதுமே குறும்புப் பேச்சு!

பெருஞ்: பிறகு, பேசாமலிருப்பதற்கு என்ன காரணம்? ஏதாவது குறையா? என்ன இல்லை?

அன்பு: (மகிழ்வுடன்) ஒரே ஒரு குறைதான். நம் வறுமை மூட்டை எங்கே யென்றுதான் தேடுகிறேன்.

பெருஞ்: (நகைத்து) அதை எல்லைக்கப்புறமே விட்டு விட்டேன். வேண்டுமா அது?

அன்பு: (நகைத்து) அதை நன்றாகக் குழிதோண்டிப் புதைக்கவேண்டும். (சிறுவனை எடுத்தணைத்து) இவனைப் பாருங்களேன்! கண்ணப்பா! அப்பா முகம் எப்படியடா இருக்கிறது? (சிறுவன் முகத்தைச் சுருக்கிக் காட்டுகிறான்)

பெருஞ்: (கோபித்தவர்போல) இங்கே வாடா பயலே! உன் அன்னை உன்னை வைத்துக்கொண்டு என்னைப் பழித்துக்கொண்டே யிருந்தால், சாப்பாடு கூப்பாடாகத்தான் போகும்!

அன்பு: (சிறுவனை அவரிடம் அளித்து) இதோ அரை நாழிகையிலே சமைத்துவிடுகிறேன்.

(குளிக்கச் செல்கிறாள்)

## காட்சி 9

**இடம்:** *முதிரமலைச்சாரலிலுள்ள வேனில் விடுதியில் ஒரு கூடம்.*

**காலம்:** *மாலை.*

*இளங்குமணன் உலாவுகிறான். அழகுநம்பி அமர்ந்திருக்கிறான்.*

**இளங்:** *ஒரு பூங்கொத்திலே இரண்டு மலர்கள்! ஒன்றை மக்கள் விரும்புகிறார்கள்; வண்டுகள் வட்டமிடுகின்றன. மற்றொன்றை மக்களும் விரும்பிலர்; வண்டுகளும் வரவில்லை. அதாவது மணமுமில்லை! தேனுமில்லை. இதனைக் கேட்டதாவது உண்டோ நீ?*

**அழகு:** *அது இயற்கையில்லையே.*

**இளங்:** *ஒரு புலிக்கு இரண்டு குட்டிகள். ஒன்றுக்கு மட்டும் நகங்களும் பற்களும் வேட்டையாடுந் திறமையும் உண்டு. மற்றொன்றுக்கு ஒன்றுமே யில்லை. இஃதாவது உண்டா?*

**அழகு:** *ஒருபோதும் இம்மறுதலை இல்லை.*

**இளங்:** *இரண்டு கைகளிலும் இரண்டு விளக்குகளை ஏந்துகிறோம். ஒன்றுமட்டும் ஒளி வீசுகிறது; மற்றொன்றுக்கு அத்திறமையே இல்லையாமோ?*

**அழகு:** *ஏன் இப்படி வினவுகிறீர்கள்?*

**இளங்:** *மக்களிலுங்கூட அரசகுடும்பந் தவிர மற்றைய குடும்பங்களிலே பிறக்கும் பிள்ளைகளில் உரிமை வேறுபாடுண்டோ? ஏன் இந்த அரச மரபிலே மட்டும் இவ் வேறுபாடு? மூத்தவன் அரசாள்வது: இளையவன் ஏமாந்துபோவது ஏன்?*

அழகு : (புன்முறுவலுடன்) இதற்குத்தானு இந்த உவமைகள்? அரச குடும்பத்தின் இயற்கை அப்படி! மரபு அது!

இளங் : (வெறுப்புடன்) என் உள்ளத்திலே வெறுப்புக் கனல்! உன் இதழ்களிலே புன்முறுவலா? (நின்று) மரபு என்கிருயே; மரபு முறையை ஏற் படுத்தியவர் யார்? (உலாவுகிருன்)

அழகு : மக்களே ஏற்படுத்திஞர்கள்.

இளங் : மக்களாவது? அரசனே ஒழுக்கம் வகுப்பவன். ஆகவே, எவனுவது அரசகுடும்ப மூத்த மகன் ஒருவன் இந்த இழிவழக்கை ஏற்படுத்தியிருப்பான். அதனுல், நான் எந்தச் செல்வாக்குமின்றி நாற் புறம் மதில்களாலே தடையுற்றிருக்கிறேன்! ஒருநாள் முன்னதாகப் பிறந்தாலும் போதும்! அவன் அறிவீனனுயும் வலிமையற்றவனுயு மிருந் தாலும் அரசன்!

அழகு : ஆரிய அரசர்களின் வழக்கமும் அதுதானே. கெளரவ மரபிலே திருதராட்டிரன் குருடனுக இருந்தும் அரசன்! அவன் தம்பி அவனே அரியணே யிலே அமர்த்திவிட்டுத் தான் ஏவலனுக இருந்து நாட்டை நடத்திஞன்.

இளங் : ஏன் அப்படிச் சொல்கிருய்? (நின்று) கைகேயி அவ் வழக்கத்தை முறித்தெறியவில்லேயா? இராம னுக்குக் கிடைத்த அரசைப் பரதனுக்குக் கொடுக்க விதி செய்தனளே!

அழகு : ஆனுல், அதைப் பரதன் ஒத்துக்கொள்ள வில்லேயே. அண்ணனேயே அரசனுக்கித் தான் பிரதிநிதியாகத்தானே ஆண்டான்? மேலும்

பதினுன்காண்டுகளே ஆண்டான். இராமனும் அந்தக் காலம்வரை காட்டிலே அலைந்தான்.

இளங் : (வெறுப்புடன்) எல்லாம் பின் பிறந்தவர்களின் கோழைத்தனத்தாலே விளைந்தது! பின்பிறந்த இளங்கோவடிகளுக்கு அரசாளும் நல்லூழ் இருக்கிறதென்று கணி கூறினன் என்பதை அறிவாயே! அந்தக் கோழையும் அப்போதே துறவியாய் விட்டார். முயன்ருல் அரசராகி யிருக்கலாம்.

அழகு : இருக்கலாம்.

இளங் : இருக்கலா மென்பதென்ன? அதுதானே நடக்க வேண்டியது. நாம் முயன்று அந்த முறையை மாற்றி அமைக்கவேண்டும். மக்கள் அமைத்ததை மக்களே மாற்ற முடியும்.

அழகு : அது உங்கள் ஒருவராலேமட்டும் இயல்வதா?

இளங் : (நின்று) உண்மை. என்னுலேமட்டும் எப்படி இயலும்? எல்லாத் தம்பியர்களும் ஒத்து வருவார்களா?

அழகு : மேலும், பொதுமக்கள் உங்கள் சார்பிலே உழைப்பார்களா?

இளங் : (இருக்கையிலே அமர்ந்து) ஆம்! அவர்களும் வரமாட்டார்கள். போரிடுவதாயினும் படைகளெல்லாம் அவர்கள் சார்பிலேயே உள்ளன. (தலையிலே கையை வைத்துக்கொண்டு சிந்தனையுடன்) வேறு வழியில்லையா?

அழகு : நேர் வழி கிடையாது.

இளங் : (சோர்வுடன்) ஆம். நேர்வழி கிடையாது. ஆனல், என் அரசாட்சிக்காதல் வீணுவதா?

(சிற்றத்துடன்) மேலும், கண்முன்னே நடக்கும் கருத்துக் கொவ்வாக் காட்சிகளைக் கண்டு முடவனைப்போல முடங்கிக் கிடப்பதா?

அழகு : ஒவ்வாக் காட்சி எது?

இளங் : கொடை கொடையென்று கூட்டங் கூட்டிப் புலவர்களைக் கொழுக்க வைப்பதைத்தான் கூறுகிறேன். இந்த வள்ளல்க ளில்லாவிட்டால், அந்த வறிய புலவன் பெரிய புரவலனான இளவெளிமானை இகழ்ந்துரைப்பானா? பொருளை உழைத்துழைத்துக் கொடுப்போர் உண்ணவும் உடுக்கவும் இடர்ப்பட்டுக் கிடக்கிறார்கள். அப் பொருளைச் சிறிதும் உழைப்பின் அருமையறியாதோர் வாரி வாரி வழங்கி வள்ளல்களெனப் பெயரெடுக்கிறார்கள். அவர்களைப் புகழ்ந்து பாடுவதனாலே புலவர்களாய் விட்ட புல்லர்கள் அப் பொருளைப் பெற்று, அழகாக உடுத்தி உண்டு அமைகிறார்கள். என்னே இழிசெயல்!

அழகு : இறைவன் இறையென்ற போர்வையாலே ஏழைகளின் உழைப்புப் பொருள்களை எடுத்துக் கொள்கிறான். புலவன் கொடை யென்ற நெறியிலே தடையின்றிச் சென்று, பொருளை வாங்கி, வயிற்றை நிரப்புகிறான். இதுதான் உலகியல்!

இளங் : எப்படியாவது இதனை தடுக்கவேண்டும் நம்பி! ஏதாவது வழி—நேர்வழி யில்லாவிட்டாலும்—கூறு.

அழகு : (அன்புடன்) என்னிடம் அவ் வேலையை விடுங்கள்.

இளங் : (மகிழ்வுடன்) நீதான் செய்யவேண்டும். ஏதாவது வழியுண்டா?

அழகு : எத்தனையோ வழிகள்! "வருந்தும் உயிர் ஒன்பான் வாயில் உடம்பில் — பொருந்துதல் தானே புதுமை?" தங்களுக்கேன் அந்தக் கவலை, தங்கள் உள்ளம் அசைந்தால் உடனே அசையும் அவ் வள்ளலின் உயிர்! என் பொறுப்பு அது.

இளங் : உன் பொறுப்பா? (நடுங்குகிறான்)

அழகு ; (நகைத்து) ஏன் இப்படி நடுங்குகிறீர்கள்? பின் பிறந்த குறையா? தம்பிகளெல்லோருமே கோழைகளா?

இளங் : ஏனோ என் உள்ளம் தடுமாறுகிறது!

அழகு : (வாட்டத்துடன்) அப்படியானால் அடிமையாகவே அடைபட்டுக் கிடக்க வேண்டியதுதான். அரசாட்சிக் காதலை அகற்றியெடுத் தெறிந்து விடுங்கள்.

இளங் : (எழுந்து) ஓ! ஒருபோதும் அமைந்திரேன். நம்பி! நீ விரும்பியபடியே உரிமை தருகிறேன். வள்ளலை எப்படியாவது வானுட்டுக் கனுப்பிவிடு.

அழகு : நன்று! அப்படி வாருங்கள் வழிக்கு. (மகிழ்வுடன்) இன்றே இளங்குமணர் பிறந்த நாள்! ஒழிக வள்ளல்களின் ஆட்சி!

## காட்சி 10

இடம் : குமணர் அரண்மனையில் ஓர் கூடம்

காலம் : முன்னிரவு

குமணர் ஓரழகிய பொற் பீடத்திலே அமர்ந்திருக்கிறார். அமைச்சர் முடிநாகராயர் எதிரிலே நடுக்கத்துடன் நிற்கிறார்.

**குமணர் :** (புன்முறுவலுடன்) ஏன் இப்படி நடுங்குகிறீர்! மலைகலங்கினாலும் மனங் கலங்கலாமோ? அமைதியாய்க் கூறுங்கள். அப்படி அமர்ந்து கொள்ளுங்கள். கலக்கத்திலே கூறவேண்டியதைக் கோட்டை விடாதீர்கள்!

**முடி :** (வாய்குழற) ஆம் ஆம்! நாம்...நாம்...கோட்டை விடக்கூடாதுதான். (அமர்கிறார்)

**குமணர் :** (அமைதியுடன்) பகைவர் முற்றுகையா நேர்ந்தது?

**முடி :** அப்படியிருந்தாலும் அச்சமில்லையே!

**குமணர் :** அவ்வாறு நேர்ந்தால்தானே கோட்டைவிட வேண்டும்? அதைவிட நாட்டிற்கு அச்சம் ஏது?

**முடி :** (தயக்கத்துடன்) எப்படிக் கூறுவேன்? நன்மையைத்தரும் நீரும் நிழலும் ஒவ்வாத நிலையை அடைந்து தீமைசெய்வதைப்போல, நேர்ந்துளது, 'எட்பிளவு அன்ன சிறு உட்பகை.'

**குமணர் :** (புன்முறுவலுடன்) உட்பகையா? நம் ஆட்சியிலா?

**முடி :** ஆம் அரசே! தாங்கள் புன்முறுவல் செய்வது வியப்பாயிருக்கிறது. நாட்டின் நலன்—தமிழின்

உயிர் ஆகிய தங்கள் ஆட்சி அழியச் சூழ்ச்சி நடக்கிறதே!

குமணர்: எள்ளின் பிளவு அன்ன சிறியது என்று தானே கூறினீர்? அதற்கும் அஞ்ச வேண்டுமா? மூட்டைப் பூச்சிக்கு அஞ்சியோ வீட்டைப் பிரிப்பார்?

முடி: (வியப்புடன்) என்ன கூறுகிறீர்கள்? "எட்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்—உட்பகை உள்ள தாம் கேடு," என்ற வள்ளுவர் வாய் மொழியை நோக்கினீர்களா? மூட்டைப் பூச்சியை நசுக்காமல் விட்டால் அயர்ந்து உறங்கல் ஆகுமா? "முனைவரு கூர்முள் வேலை முளையிலே கிள்ளின் அல்லால்—நனிவர வயிர்த்தபோது நவியமும் மடியும் அன்றே?"

குமணர்: (புன்முறுவலுடன்) இவ்வளவு நீர் வற்புறுத்திக் கூறும்போது புறக்கணித்தல் இயலாது. சூழ்ச்சியாளர் யார்?

முடி: (அச்சத்துடன்) தங்கள் தம்பியே.

குமணர்: (வியப்புடன்) என்ன! என் தம்பியா? என்ன சூழ்ச்சி?

முடி: ஆம். தங்கள் தம்பியே தங்களைக் கொல்லச் சூழ்ச்சி செய்கிறார்.

குமணர்: (புன்முறுவலுடன்) என்னைக் கொல்லவா சூழ்ச்சி செய்கிறான்? நன்று! அவனுக்கு உரிமையிருக்கிறது! படையுண்டா? துணையுண்டா?

முடி: (வியப்புடன்) அவரும் அழகு நம்பியுமே! வேறு யாரும் இல்லை. தங்களைத் திடீரென்று இறந்த

தாகப் பிறர் நம்பும் வண்ணம் சூழ்ச்சியுடன் கொல்ல முடிவு செய்தனர் இன்று மாலை !

குமணர் : நன்று ! நீர் எவ்வாறறிவீர் ?

முடி: இன்று மாலை வேனில் விடுதியிலே தனியேயிருந்து ஆராய்ந்து முடிவுசெய்தனர். அடியேன் பக்கத் தறையிலே மறைந்து நின்று கேட்டேன்.

குமணர் : (சிந்தனையுடன்) இப்போது அவர்கள் எங்கே ?

முடி : அழகு நம்பியின் அரண்மனையிலுள்ளனர்.

குமணர் : இதற்கு என்ன செய்ய வேண்டும் என்கிறீர் ?

முடி : அவர்களைச் சிறைப்படுத்தத் தங்கள் ஆணை வேண்டும்.

குமணர் : அவர்களை என்றால் யாரை ?

முடி : அழகு நம்பியையும் தங்கள் தம்பியையும்.

குமணர் : (புன்முறுவலுடன்) என் தம்பியைச் சிறைப் படுத்துவதும் என்னைச் சிறைப்படுத்துவதும் ஒன்றே. கண்ணைக் குத்த வருகிறதென்று விரலை வெட்டுவார்களோ ?

முடி : (திடுக்கிட்டு) மன்னிக்க வேண்டும். அரசே ! தங்கட்குத் தெரியாததில்லை. அரசுக்குக் கேடு சூழ்வார் யாவராயினும் ஒறுத்தற் குரியாரே.

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்"

அன்றோ ?

குமணர் : உண்மையே; ஆயினும் அவன் ஏன் என்னைக் கொல்லச் சூழ்ச்சி செய்கிறானென் றறியாமல்

எப்படிச் சிறைப்படுத்துவது? அது அரசியற் குற்றமாக இன்றி அண்ணன் தம்பி முறையிலே இருந்தால் என்ன செய்வீர்?

முடி: அரசுரிமை பெறவே இம்முடிவுக்கு வந்துளார். எனினும்....

குமணர்: எனினும் என்பதே வேண்டாம். இது அரசியற் குற்றமா?

முடி: ஆம் அரசே! அரசர் வேறு, நாடு வேறு அல்ல. அரசருக்குச் செய்யும் தீமை நாட்டையும் பற்றும்.

குமணர்: வேறோரரசன் என்னை வென்று நாட்டைக் கைப்பற்றுகிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். அது நாட்டிற்குக் கெடுதியா?

முடி: ஆம் அரசே! போர் நடந்தால் நாட்டிற்கும் இடையூறுதானே? தங்களரசரை எதிரியுடன் சண்டையிடத் தனியே விட்டு விட்டுக் குடிகள் இருப்பார்களோ?

குமணர்: போரிடும் வரையிலேதான் இடையூறு. மறுபடி இல்லையே! நன்று! நான் இதைப்பற்றிச் சிந்தனை செய்து வைகறையிலே அறிவிக்கிறேன். (புன்முறுவலுடன்) இன்றைய இரவிலேயே அப்படியொன்றும் நேராது என் ஆருயிர்க்கு. நீர் உம் அரண்மனையிலே கவலையின்றித் துயிலலாம்.

முடி: (எழுந்து வணங்கிநின்று) நன்று! சென்று வருகிறேன். அரசர் பெருமான் உயிர் இந்த நாட்டின் உயிரேயாகும். தங்கள் செயலின் ஒவ்வோரசைவும் இந் நாட்டின் நலத்திலேயே மிளிர்கிறது. (கண் கலங்க) ஆகையால்,...

குமணர்: (அன்புடன்) கலங்காதீர்! சென்று வருவீராக! நாட்டின் நலமே என் நலன் என்பதை மறவேன். மேலும் உம் அன்பையும் கடமை யுணர்வையும் ஒருபோதும் மறக்க முடியாது.

முடி: (வணங்கி) நான் செய்த நல்வினை. (செல்கிறான்)

குமணர்: (எழுந்து உலாவிக்கொண்டே) என் தம்பி என்னைக் கொல்ல விரும்புகிறான். (நகைக்கிறார்) திங்களிலே வெப்பம் உண்டாவதுண்டோ? நம் மரபிலே இத்தகைய பிள்ளை பிறப்பது நன்றோ? (நிற்கிறார்) என்னை நேரிலே கண்டு கேட்டால் முழு மனத்துடன் நாட்டையளிப்பேனே! பாரி தன் பகையரசர்க்கே நாட்டையும் உயிரையும் அளிக்க வில்லையா? என் தம்பி என்னைக் கொல்லவிரும்பி னால் கொன்று கொள்ளட்டும்! (உலாவுகிறார்) இதற்காக அவனையோ அவன் நண்பனையோ சிறைப் படுத்தினால் நம் குடும்பத்தின் உயிர் நாடி நைந்து நாற்றமெடுத்துவிடும்! அப்படியே அவன்கொல்லலா மென்று விட்டுவிட்டாலும் அதே நிலைதான்! குடிகள் அவனை வெறுப்பார்கள். அந்தோ! என்ன செய்யலாம்? சிறைப்படுத்துவதுந் தவறு! சூழ்ச்சியி லகப்படுவதுந் தவறு! (நின்று)

"உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போ டுடனுறைந் தற்று"

என்று வள்ளுவர் கூறுகிறார். (உலாவுகிறார்) மறைந்து விட்டால் என்ன? ஆம். அதுதான் நன்று! அவனுக்கும் பாவமில்லை! நமக்கும் பழி யில்லை. அரசபோகத்திலே வெறுப்புற்றுத் துறவு பூண்டதாக ஒரு முடங்கல் எழுதி வைத்து விட்டு

மறைந்துவிடுவோம். (நின்று) என்னே ஊழ்வினையின் கோலம்! நடந்துகொண்டே யிருக்கும்போது இரண்டுகாலும் முடமாயினாற் போலாயிற்று நம் வாழ்க்கை! (உலாவுகிறார்) தமிழ்ப் புலவருடன் உரையாடுவதையும் தமிழி னினிமையைச் சுவைப்பதையும் எப்படி விடுவது? இறைவா! என் செய்தனே!

[அமர்ந்து ஒரு முடங்கல் எழுதுகிறார். சுருட்டித் தம் இலச்சினையிடுகிறார். அப்படியே கட்டிலின்மேல் வைக்கிறார். மற்றொரு முடங்கல் எழுதுகிறார். இலச்சினையிடுகிறார்]

வாயிற் காவலா! (வாயிற் காவலன் வருகிறான்)

**வா. கா:** (வணங்கி) அரசர் வாழ்க!

**குமணர்:** இவ் வோலையை விடியற் காலையிலே அமைச்சரிடம் கொடு—எங்காவது விட்டுவிடப் போகிறாய்! போ.

**வா. கா:** (வணங்கி) ஆணைப்படி அரசே! (செல்கிறான்)

**குமணர்:** (தாமே) உடனுறை வாழ்க்கைத் துணைவிக்கும் அறிவிக்காமற் செல்ல நேர்ந்ததே! (மாறு வேடம் அணிந்து வெளியே வருகிறார். மெய்க்காவலன் பின் தொடர்கிறான். அதைத் தடுத்து விட்டுச் செல்கிறார்)

# காட்சி 11

**இடம் :** அமைச்சர் முடிநாகராயர் அரண்மனை.

**காலம் :** காலை.

முடிநாக ராயர் தனியே உலாவிக்கொண்டிருக்கிறார்.

**முடி :** (தானே) "என் தம்பியைச் சிறைப்படுத்துவதும் என்னைச் சிறைப்படுத்துவதும் ஒன்றே." என்ன தூய உள்ளம்! ஆராய்ந்து அமைதி பெற்ற உள்ளம்! தன்னலத்தைத் தகர்த்தெறிந்து தணிந்த உள்ளம்! எதிரியின் பிழையாலே தாக்கப் பெற்றுந் தன்னிலை கலங்காத தனியுள்ளம்......எப்படிப் புகழ்வேன்? இத்தகைய அரசருடன் பிறந்தானே, தாமரை மலருடன் புறவிதழ்போல்! பகலுடன் இரவுபோல்! அறத்துடன் மறம்போல்!......எப்படியாவது அக் கொடியாரை ஒறுத்தல் வேண்டும். அன்பைக் கடமையால் நீக்க வேண்டும்—! ஆம். அதுதான் அரசர் கடமை. அவர்க்குத் தன் கடமையைத் தெளிவுற எடுத்துக் காட்டாவிட்டால் நான் செய்ந்நன்றி மறந்தவனாவேன்! மறத்திற்குத் தூண்—கொடுமைக்குக் கைப்பிடி—ஆவேன்!......நாட்டுக்காக வாழ்கின்ற நல்லரசர்! தமிழுக்காக வாழ்கின்ற தகைசான்ற புலவர்! புலவர்கட்காக வாழ்கின்ற புரைபடாத சிந்தாமணி!........இத்தகைய அரசரை இழப்பதா?......(நின்று) ஏன் இவ்வெண்ணம் எழுகிறதெனக்கு? அவரை ஏன் இழப்பேன்? (உலாவிக்கொண்டே) தம்பிக்கு அரசை அளித்து விடுவாரோ? அங்ஙனமேல், குரங்கினிடம் அகப்பட்ட பூமாலையாய்விடும் இந்நாடு!...(கண் கலங்க) கூடாது! எப்படியாவது கொடுமையை நிமிர்த்த

வேண்டும். '(வாயிற் காவலன் வருகிறான்) என்ன வேண்டும்?

காவலன் : (வணங்கி) அரசரிடமிருந்து தூதன் வந்திருக் கிறான்.

முடி : வரச்சொல். (காவலன் செல்கிறான்) இப்பொழுதே சென்று வள்ளலின் உள்ளத்தை மெள்ளத் திருப்ப வேண்டும். (தூதன் வருகிறான்) வா அப்பா! அரசர் கூப்பிட்டாரா?

தூதன் : (வணங்கி) இத் திருமுகத்தைத் தங்களிடம் அளிக்கச் சொன்னார் அரசர். (திருமுகத்தைக் கொடுக்கிறான்)

முடி : (வாங்கிப் பிரித்துக்கொண்டே) இப்போது என்ன செய்கிறார்! தனியே இருக்கிறாரா? அவையில் இருக்கிறாரா? எப்போது எழுந்தார்?

தூதன் : (வணங்கி) மன்னிக்கவேண்டும், இரவு தாங்கள் வந்த ஒரு நாழிகைக்கெல்லாம் உருவை மாற்றிக் கொண்டு வெளியே சென்றவர் இன்னும் வரவில்லை! (அமைச்சர் திருமுகத்தைப் படிக்கிறார்; முகம் மாறு கிறது. கையிலிருந்த திருமுகம் நழுவுகிறது)

முடி : (தன் அச்சத்தையும் கலக்கத்தையும் வெளிக்காட் டாமல்) சரி, நீ போய் அவருடைய அறையைப் பூட்டி வைத்துவிடு! நான் வரும்வரையிலே திறக் காதே! போ விரைவில்!

தூதன் : (வணங்கி) நல்லது. போய்வருகிறேன். (செல் கிறான்)

முடி : (துக்கத்துடன்) மனக்கோட்டை மண்ணாகிவிட் டதே. மறத்தினுக்கஞ்சி அறம் மறைந்துவிட்

டதே! இருள் வருமுன் ஒளி மறைந்ததே! (திரு முகத்தை எடுத்து வாய்விட்டுப் படிக்கிறார்)

"அமைச்சரே! இன்றிரவு நீர் கண்டதாகக் கூறிய என் தம்பியின் சூழ்ச்சியை வெளியிடலாகாது! வெளியிடலாகாதென்பது மட்டுமன்று! மறந்தே விடவேண்டும். எள்ளளவும் நான் மறைந்த உண்மை நாட்டிலே வெளிவரலாகாது! என்னிடத்திலே நீர் உண்மையன்பு கொண்டிருந்தால்—அதில் ஐயமில்லை யெனக்கு—என் தம்பியுடன் ஒத்துழைத்து அவனை நன்னெறியிலே செலுத்தவேண்டும். என் மரபிற்குக் களங்கம் வரா வழியை நாடியே மறைகிறேன்.

"நான் அரசியலிலே வைத்த பற்றை நெருப்பிலே விட்டுவிட்டேன். அது நன்றாக எரிந்தும்விட்டது! மீண்டும் உயிர் பெறாது. ஆகையாலே, தேடும் முயற்சியைச் சிக்கற விடுவீராக.

"கண்ணீர் வருகிறது! கலங்குகிறது உள்ளம்! எழுத்தை மறைக்கிறது ஏக்கம்! நான் கௌதம புத்தரல்லேன்! அவர் தம் மனைவியையும் மகவையும் ஒருமுறை கண்ணுற் பார்த்துவிட்டுத் துறவிலே சென்றார்! நான் என் காதற்கொடியைப் பார்க்காமலே வெளியேறுகிறேன். பார்த்தேனானால் எல்லாம் மறைந்துவிடும்! உள்ள உறுதி ஓடிவிடும். அவளை ஒருவருமறியாமல் ஆதரவிலே வைத்திருக்கவேண்டுகிறேன். என் மறைவிடம் சரியாகக் கிடைத்தால் வந்து அழைத்து வந்து விடுகிறேன்.

"எல்லாவற்றையும் ஒழுங்காக முடிப்பேனென்னும் எண்ணம் உண்டு எனக்கு."

"என் அறையிலே எழுதிவைத்திருக்கும் திருமுகத்தைப் படித்துக்காட்டிக் குடிகளை அமைதியுறச் செய்வீராக! என் இளவலுக்குத் துணைபுரிக!"

—குமணன்.

(கண்ணீர் வார உலாவிக்கொண்டே) உள்ளமே! கலங்காதே! செயல் சிதைந்துவிடும். இனி நெருப்புச் சுடலாகாது! கதிரவன் ஒளி வீசலாகாது! காற்று வீசலாகாது......என்னே என் கடமை! குமண வள்ளல் எல்லோருக்கும் இனிய பொருள்களை அளித்தார். எனக்குக் கசக்கும் நஞ்சையே கொடுத்தார். (விம்மி விம்மி அழுகிறார்)

---

## காட்சி 12

**இடம்:** குமணனுடைய அரண்மனையில் அந்தப்புரம்.

**காலம்:** காலை.

அரசி வான்மலர்தேவி இரவெல்லாம் விழித்திருந்த சோர்வு தோன்றத், தனியே கட்டிலில் அமர்ந்து, சிந்தித்தவண்ணம் இருக்கிறாள்.

**வான்:** (தனியே) அந்தப்புரம் அமைதியாகத்தான் இருந்தது. ஆனால், என் உள்ளம் ஏனோ புயல் போலக் குமுறியது! இமைகள் மூடினும் உள்ளத்திலே உறக்கமேயில்லை! காரணமில்லாமலே ஏதோ குழப்பம் சுழன்றது......அரசர் ஏன் வரவில்லை? நீண்டநேரம் அமைச்சருடன் பேசினராம்! அப்புறம் வெளியே சென்றனராம்!......இதுவரையில் இப்படியில்லையே! என்னிடம் உரையாமலேதும் புரியார். இன்றுமட்டும் என்ன நிகழ்ந்தது? (தாதி வருகிறாள்) என்னடி!

**தாதி:** அமைச்சர் தங்களைப் பார்க்க வருகிறாரம்மா!

வான் : (எழுந்து உடையைச் சரிப்படுத்திக்கொண்டு) இன்னும் யார் வந்திருக்கிறார்கள் ?

தாதி : அமைச்சர் மனையாட்டியும் வந்திருக்கிறார்கள்.

வான் : சரி, வரச்சொல். (தாதி செல்கிறாள்) ஏனோ உள்ளம் நடுங்குகிறது! நல்லதாகக் கேள்விப்பட மாட்டேனா? வலக்கண் இரவெல்லாந் துடித்தது; போதாதென்று இன்னும் துடிக்கிறது! (முடிநாகராயரும் அவர் மனைவியும் வருகிறார்கள். முடிநாகராயரின் முகம் வெளுத்தும் சிந்தனையால் குழம்பியும் உள்ளது) வாருங்கள்! இதோ இந்த இருக்கையிலே இருங்கள். அரசர் எங்கே?

முடி : (தலை குனிந்தவாறே) இவளுடன் என் அரண்மனை செல்லுங்கள். நடுப்பகலில் வந்து விளக்கமாகக் கூறுகிறேன்.

வான் : (பதைபதைப்புடன்) எதை விளக்கமாகக் கூறு வீர்கள்? மேலும், தங்கள் அரண்மனையிலே என்ன வேலை?

முடி : அரசர் ஆணைப்படியே சொல்லுகிறேன். என்னை நம்புங்கள்! இங்கே தாமதிக்கும் ஒவ்வொரு நொடியும் தங்களுக்குக் கெடுதியே! நாற்புறமுந் தங்களைத் தீ சூழ்கிறது! அப்புறம் வந்து சொல்கிறேன். செல்லுங்கள். (அரசி கலக்கத்துடன் நிற்கிறாள்) அந்தோ! என் எதிரிலே இருளுங் காடுமே நிற்கின்றன! தாங்களும் துன்புறுத்தாமல் செல்லுங்கள்! (அமைச்சன் மனைவி சோர்ந்து நிற்கும் அரசியை அழைத்துச் செல்கிறாள்)

13715

UNIVERSITY EXTENSION LIBR

## காட்சி 13

**இடம்:** *குமணர் அரசவை.*

**காலம்:** *பிற்பகல்.*

இளங்குமணன், அழகுநம்பி, முடிநாகராயர், மற்றுமுள்ள அவையோர், பெருங்குடிமக்கள்.

யாவருடைய முகத்திலும் ஏக்கம். இளங்குமணன் குழப்பத்துடன் அமர்ந்திருக்கிறன். அவன் முகம் அடிக்கடி வியர்க்கிறது.

**முடி:** *(எழுந்து) அவையோர்களே! இன்றுமுதல் நம் அரசர் இளங்குமணரே. அதற்கு ஆதாரம் முன்னிருந்த அரசர்! (கண் கலங்கி) எழுதி வைத்திருக்கும் இந்தத் திருமுகத்திலுள்ள ஆணையே!*

**குடிகளில் ஒருவர்:** *அரசர் எங்கே?*

**முடி:** *அதுவும் இத் திருமுகத்திலுள்ளது. (தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்தி) படிக்கிறேன்! (படிக்கிருர்)*

*என் அன்புக்குரிய குடிகளே! திடீரென்று காரண மேதுமின்றி எனக்கு இவ் வாட்சியிலே வெறுப்புத் தட்டியது. எனவே, நான் கௌதம புத்தரைப்போலத் துறவு பூண்கிறேன். உங்களுக்கும் என் இளவலுக்கும் அறிவித்து வெளிப்படையாகத் துறவு பூணும் அத்தகைய நிலை எனக்கில்லை! (எல்லோரும் கண்ணீர் விடுகிருர்கள்) நானும் அரசியும் எங்குச் செல்கிறேம், இருப்போம் என்பதையும் அறிவிக்க முடியவில்லை! வெளிப்படையாகவே இவற்றை அறிவித்தால் நீங்களும் என்னை விடமாட்டீர்கள்! என் தம்பியும் என்னை விடமாட்டான்! எனவே நான் திருடன்போல் மறை*

கிறேன். என்னைத் தேட முயல்வது வீண். இனி நான் இறந்தவனே. இறைவன் அருள் உங்களுக்குப் பெருகுக!

—குமணன்.

இதுதான் அரசர் திருமுகத்திலுள்ள ஆணை— இனி உங்கள் விருப்பத்தைக் கூறுவீர்களாக! (அமர்கிறார்)

அழகு : (எழுந்து) அரசர் துறவு பூண்டதற்குக் காரணம் எதுவாயினும் அவர் பிரிவிற்குக் குடிகள் வருந்தாமலிருக்க முடியாது. எனினும், இனி வேறு செய்வதற்கில்லையே! எனவே, அதை மறந்துவிட்டுப் புதிய அரசராக இளங்குமணரை வரவேற்கிறோம். (அமர்கிறான்)

குடிகளில் ஒருவர் : (எழுந்து) அழகுநம்பியார் பேசியபின் நான் வேறு கருத்தைக் கூறுவதற்காக அவர் மன்னிப்பாராக. என் வேண்டுகோளாவது, அரசர் எங்கிருக்கிறாரென்பதைக் கண்டு பிடிக்கவேண்டும் என்பதே. அவ்வாறு தெரிந்தால் எப்படியாவது நாங்கள் சென்று வேண்டிக்கொள்கிறோம் அரசாட்சியை ஏற்கும்படி. அவர் ஏற்காவிடின் இளங்குமணரை அரசராக ஏற்றுக்கொள்கிறோம். இதற்கு இளங்குமணர் இணங்குவாரென்று நம்புகிறேன். (அமர்கிறார்)

இளங்கு : நான் அதை வரவேற்கிறேன். என் தமயனாரை இழக்க நான் விரும்பேன். அவரைக் கண்டு பிடிப்போருக்குத் திரண்ட செல்வம் அளிக்கிறேன்.

முடி : (எழுந்து) இளங்குமணர் கூறுவது விரும்பத்தக்கதே. எனினும், மறைந்த அரசர் விருப்பப்படி நடப்பதே நடக்கத்தக்கதாகும். கதிரவனை யிழந்த

தாமரைமலர் போன்ற இப் பேரவைக்கு வேறு வகையில்லை. குமண வள்ளலின் பிடிவாத குணத்தை மாற்ற மருந்தில்லை. (அமர்கிறார்)

ஒருவர் : (எழுந்து) திடீரென்று வெறுப்பு ஏற்படக் காரணம் என்னவென்று அறிய முடியுமா? அவரை இழக்க (கண்ணீர் ததும்ப) எங்கள் உள்ளம் விரும்பவில்லை. (அமர்கிறார்)

முடி : (கலக்கத்துடன்) அதை அவர் உள்ளமே அறியும். (இளங்குமணனை நோக்கியவாறே) அறிந்தவர் யாராவதிருக்கிறீர்களா? (ஒருவரும் எழவில்லை) ஆகையால், வேறு வழியில்லையே! இனி முடிசூட்டு விழாவை விரைவிலே நன்னாள் குறித்து நடத்திவிடுவோம். (அமர்கிறார்)

இளங் : (எழுந்து) யாவரும் ஒருமனமாக என்னை ஏற்றுக்கொண்டதற்கு நன்றி செலுத்துகிறேன். என் தமையனாரைத் தேடி அழைத்துவர இன்றே முயற்சிப்பேன். என்னாற் கூடியவரையில் உங்கள் நன்மையை நாடியே உழைப்பேன். காவலன் என்பது காத்தலில் வல்லவன் என்று பொருள் தருகிறதே ஒழிய, வரிவாங்குவதில் வல்லவன் என்று பொருள்தரவில்லை. அத்தகைய தொண்டு கிடைத்ததற்கு மிகவும் மகிழ்ச்சி. (அமர்கிறான்)

யாவரும் : (எழுந்து) இறைவர் இளங்குமணரைக் காப்பாராக! இளங்குமணர் வாழ்க! முதிரம் வாழ்க! தமிழ் வாழ்க!

## காட்சி 14

இடம்—முடிநாகராயர் அரண்மனையிலே அந்தப்புரம்.

காலம்—நண்பகல்.

அரசி வான்மலர்தேவியும், அமைச்சர் மனைவியும்.

வான் : தங்களுக்கும் ஒன்றுந் தெரியாது என்கிறீர்கள்! அவரும் இன்னும் வரவில்லை! என்ன செய்வேன்!

அ. ம : (அன்புடன்) காலையிலிருந்து ஒன்றும் உண்ணவில்லையே! ஏதாவது கொஞ்சம் புசியுங்கள்.

வான் : (துக்கத்துடன்) கவலை யுணவிருக்கிறதே! மேலும், பசியென்பதைக் காணமலிருக்கும்போது உணவு ஏன்?

அ. ம : (அன்புடன் தழுவி) வருந்தாதீர்கள் அம்மா! நம் மனக்கலக்கத்தாலே அதற்கு மருந்து கிடைக்குமோ? துணிவுகொண்டு நம் கலக்கத்தைத் தடுக்கவேண்டும்.

(அமைச்சர் வர, இருவரும் எழுந்து நிற்கிறார்கள்)

முடி : (இருக்கை யொன்றில் அமர்ந்து) அமருங்கள் அம்மா! (இருவரும் அமர்கிறார்கள். அரசி மனக் குழப்பத்துடன் அவர் முகத்தை நோக்குகிறாள். முடிநாகராயர் கண்ணீர் ததும்ப நிலத்தை நோக்கியவாறே) எப்படிக் கூறுவதென்றே தெரியவில்லை அம்மா! அரசர் நம்மை வஞ்சித்துவிட்டார்.

வான் : (திடுக்கிட்டு) என்ன?

முடி : அரசர் ஆட்சியைத் தம்பிக்கு வழங்கிவிட்டார்! தாம் இருக்குமிடந் தெரியாமல் மறைந்துவிட்டார்!

தங்களையும் உடனழைத்துச் சென்றுவிட்டதாகக் குடிகளுக் கெழுதிய அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார். [எனக் கெழுதிய குறிப்பிலே தாம் மறைந்திருக்கத் தகுதியான இடம் கிடைத்ததும் வந்தழைத்துப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

**வான் :** ஏன் இவ்வாறு செய்தார்?

**முடி :** மின்மினிப் பூச்சி வருகிறதென்று கதிரவன் மறைந்த காட்சியம்மா இது! அறத்தை மறம் வெல்லுங்காலம் இது. கொள்ளிக்கட்டை கடல் நீரைச் சுட்டுவிட்டது. தம்பி தம்மைக் கொல்லச் சூழ்ச்சி செய்வதை அறிந்து மரபின் மதிப்புக் கெடாமல் இருக்க மறைந்துவிட்டார்! எப்படி இதைப் பொறுப்பது!

**வான் :** அந்தோ! என்னகாலமிது! கனியும் மலரும் நிறைந்த பூம் பொழில் திடீரென்று வறண்ட பாலையாகிவிட்டதே! எப்பக்கமும் இன்னலே பொங்கிப் புகைந்து எரிகிறதே! நாடு தலைவரை யிழந்தது! வாழ்வினுந் தாழ்வினும் பிரியாமலிருக்க வேண்டிய நாங்கள் பிரிந்துவிட்டோம். (கண்ணீர் வடிய விம்முகிறாள்)

**முடி :** (துக்கத்துடன்) இது ஊழ் வினையின் சூழ்ச்சி! ஆனால், தாங்கள் விரைவிலே அரசரிருக்குமிடத்தை அடைவீர்கள். அவர் இருக்குமிடத்தைப் பகைவ ரறியாவிடினும் நாம் அறிய வழிகிடைக்கும். எவ்வகைக் குறையும் நேராவண்ணம் பார்த்துக் கொள்வேன்.

**வான் :** பொறுப்பினும் பொருமல் உள்ளம் கலங்கு கிறதே!

முடி : என்ன செய்யலாம்? மனம் கொண்டு உறுதி யெனுந் துடுப்பைப் பிடித்துத் தள்ளினாலன்றி இந்தத் துன்பக்கடலைக் கடக்க முடியாதே !

வான் : மற்றவர்க்குத் துன்பம் நேரும்போது ஆறுதல் கூறுதல் எளிதாக இருந்தது எனக்கும். ஆனால், எனக்கு வந்த இந்த இடுக்கணைத் தாங்க மனவுறுதி யில்லை. தந்தையினும் பேரன்புடைய தாங்கள் ஆறுதல் கூறும்போதும் ஆறவில்லையே! இந்நிலை யிலே ஆதரவு செய்யுந் தங்களுக்கு எப்படி நன்றி யுரைப்பேன்?

முடி : என்ன ஆதரவு செய்துவிட்டேன்? என் உடம்பி லுள்ள ஒவ்வோ ரணுவையும் பிய்த்துப் பிய்த்துக் கொடுத்தாலும் அரசர் பெருமானுக்கு நன்றி செய்ததாகாதே! இனி வருந்துவதை விட்டு என் வேண்டுகோளைக் கேளுங்கள்.

வான் : தங்கள் கட்டளைப்படி நடக்கிறேன்.

முடி : அரசர் தங்களை அழைத்துப் போகும்வரை வெளியார் அறியாமல் இங்கே இருக்க வேண்டு கிறேன். இப்போது, தாங்கள் அரசருடன் இருப்ப தாக யாவரும் நம்பவேண்டும்.

வான் : (பெருமூச்சுவிட்டு) உண்மையே. தாங்கள் மொழிந்த வண்ணம் நடக்கிறேன். தாங்களே என் காவல்.

முடி : (அன்புடன்) வருந்தாதீர்கள். இறைவனை நம்பி யாவற்றையும் நடத்துவோம். 'வருவது வருக' என முழுமனத்துடன் ஏற்போம்!

---

## காட்சி 15

இடம்: இளங்குமணன் அரண்மனை, தனி அறை.

காலம்: முன்னிரவு.

இளங்குமணனும் அழகு நம்பியும்.

இளங்: (புன்முறுவலுடன்) நம்பி! என்ன அப்பா! எனக்கு ஒரே வியப்பாக இருக்கிறதே! ஒன்றுமே புரியவில்லையே! "காக்கையேறப் பனம்பழம் விழுந்த கதை" யாகத்தானே இருக்கிறது! நேற்று மாலை நாம் நினைத்தோம். இரவே அது பயன் பெற்றது! நம் நினைவைத் தவிர முயற்சியொன்றுமே செய்தறியோம். கைகால் முடங்கியவன் வாயிலே தானே தேன் ஒழுகியதுபோல இருக்கிறது! கனவிலே கண்ட பொருள் விழித்தாற் கையிலே இருக்கிறது! சேச்சே! என்னல் நம்பவே முடியவில்லையே! (நகைக்கிருன்) நாங்களிருவரும் உடன்பிறப்பாகையால் என் உள்ளத்திலுதித்தது அவருள்ளத்தும் உதித்ததோ? வலிய வந்தனள் திருமகள்!

அழகு: எனக்கு என்னவோ எல்லாம் நம் சூழ்ச்சியின் விளைவு என்றே படுகிறது. நம் சூழ்ச்சியை அவர் அறிந்திருக்கவேண்டும். இன்றேல், அவர் ஏன் வெளியேறவேண்டும்?

இளங்: (சிந்தனையுடன்) அவர் வெளியேறியதற்குக் காரணம் நம் சூழ்ச்சியை அறிந்ததுதானென்று எண்ணுகிருய்? அப்படி நீ நினைக்கக் காரணம் என்ன?

அழகு: அவர் எழுதி வைத்திருந்த முடங்கலைப் பாருங்கள்! எடுத்துப் படியுங்கள். அந்த முடங்க

லென்னவோ அவர் கருத்தைத் தெளிவாக்கு மென்றே நினைக்கிறேன்.

இளங் : (மடலைப் பிரித்து படிக்கிறான்) 'என் அன்புக் குரிய குடிகளே!'

அழகு : இது போதுமே. இதிலிருந்தே தாங்கள் அன்புக்குரிய தம்பியல்ல என்று தெரிகிறது வெள்ளிடை மலைபோல!

இளங் : அரசன் தன் உறவினரைவிடக் குடிகளுக்குத் தானே கட்டுப்பட்டவன்? ஆகையால், குடிகளுக்கு எழுதியிருக்கிறார்.

அழகு : சரி. மேலே படியுங்கள்.

இளங் : "திடீரென்று எனக்கு இந்த ஆட்சியிலே வெறுப்புத் தட்டியது."

அழகு : திடீரென்று நம் சூழ்ச்சி தெரிந்தது என்பது போல இருக்கிறது இம்மொழி. உம்....மேலே படியுங்கள்.

இளங் : "எனவே, நான் கௌதம புத்தரைப்போலத் துறவை மேற்கொண்டேன். உங்களுக்கும் என் இளவலுக்கும் அறிவித்து, வெளிப்படையாகத் துறவு பூணும் அத்தகைய நிலை எனக்கில்லை."... என்ன இதன் பொருள்? வெளிப்படையாகத் தெரிவித்தால் என்னவாம்?

அழகு : இப்போதாவது புலி வெளியேறிய காரணம் புலப்படுகிறதா? நம் சூழ்ச்சியை ஒற்றியிருந்து யாராவது கேட்டிருக்கவேண்டும். இதில் ஐயமே யில்லை.

இளங் : நன்று ! அப்படியானல் நம் சூழ்ச்சியை அறிந்தவர் உடனே நம்மைச் சிறைப்படுத்துவதற்கென்ன ?

அழகு : அதுதான் புலப்படவில்லை. ஒருக்கால் நம்மைச் சிறைப்படுத்த அஞ்சினரோ என்னவோ !

இளங் : (நகைத்து) ஏன் அஞ்சவேண்டும் ?...... போகட்டும் ; எப்படியும் நம் சூழ்ச்சியின் விளைவுதான் இது ! (புன்முறுவலுடன்) உடலிலே தோன்றிய கட்டி அறுக்காமலே உள் அழுந்தியது நன்மைதானே ?

அழகு : கட்டி உள்ளழுந்துவது நன்மைக்காகுமா ? வேறோரிடத்திலே புறப்படும்.

இளங் : ஆம். உண்மையே. இதற்கென்ன செய்யலாம் ?

அழகு : கட்டி தோன்றாமலிருக்க வழிதேடவேண்டும். பயிரிலே தோன்றிய களையை மேலே கிள்ளிவிட்டால் மறுபடியும் தளிர்க்கும் ; பயிரின் நலத்தைக் கெடுக்கும். வேரோடு எடுத்தாலொழிய நன்மையாகாது.

இளங் : எல்லாம் உண்மையே. ஆனல் அவரிருக்குமிடந் தெரியவில்லையே ! மேலும் "உலகிற்கினி இறந்தவனே" என்று குறிப்பிட்டிருக்கிறரே !

அழகு :

"காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்"

என்றவாறு காலம் நோக்கி யிருப்பார்.

இளங் : ஆம்.

அழகு: 'புலி பதுங்குவது பாய்ச்சலுக்குத்தான்.' நம் சூழ்ச்சியை நேற்றறிவித்தவர்கள் இனியும் அறிவிப் பார்கள். ஆகையால், மறைந்த புலியை வேட்டை யாடி வதைத்தாலொழிய, நாம் ஓய்ந்திருக்க முடியாது.

இளங்: புலியைக் காண வழி என்ன?

அழகு: ஆள் வைத்துக் கண்டுபிடிப்போம். அவரைக் கொன்று வருவோர்க்குப் பரிசளிப்போம்.

இளங்: இம் முயற்சி மறைவாகவே யிருக்கட்டும். தெரிந்தால் எதிர்ப்புகள் கிளம்புவதோடு நமக்கும் இடையூறுகிவிடும்.

அழகு: ஆம். அவ்விதமே செய்வோம். இந்த நிலை யைத் தங்கள் நண்பர் இளவெளிமானுக்கறிவித் தல்வேண்டும்.

இளங்: (மகிழ்வுடன்) ஆம் அப்பா! நம் மகிழ்ச்சியை நண்பருக் கறிவிப்போம். குமணனுடைய கொடை யின் பெருமிதத்தாலே வருந்தியவர் அவர். அந்தப் புலவனாலே தாக்கப்பெற்றவர். மேலும் முல்லைக் கொடியையும் வரவழைக்கவேண்டும். மல்லிகை யையும் மலரச் செய்யவேண்டுமிங்கே உனக்கு? என்னென்பேன் இந்த வியப்பை?

அழகு: எந்த வியப்பை?

இளங்: காரிகை முல்லைக்கொடியின் காதலெப்படி வெளிதிலே கிடைத்ததோ, அப்படியே அதைத் தொடர்ந்து ஆட்சியும் கிடைத்தது. அவள் காதல் ஒரு நல்ல ஒளி! உறுதியான பற்றுக்கோடு! நல்வினை! ஆகவே, அக் காதலை நினைத்தால் வியப் புண்டாகிறது.

அழகு : (கொட்டாவிவிட்டு) என்னவென்று திருமுகம் எழுதுவது ?

இளங் : இங்கே வரவேண்டும் என்றுதான் எழுதவேண்டும். முன்பே முதிரத்தைப் பார்க்க வரவேண்டுமென்று கேட்டிருந்தோமே !

அழகு : நன்று. நானே அத் திருமுகத்தைக் கொண்டு செல்கிறேன். இப்போது உறக்கம் வருகிறது ; போய்வருகிறேன். (எழுகிருன்)

இளங் : நன்று போய்வருக. (அழகுநம்பி செல்கிருன்) (எழுந்து உலாவிக்கொண்டே) உள்ள மகிழ்ச்சி நிறைந்திருக்கலாகாதா ? இன்ப நிலையத்திலே அடியெடுத்து வைத்தேன். எல்லாக் காட்சியையுங் காண முடியவில்லை ! பெண் காதலும் அரைகுறை ! மண் காதலும் அரைகுறை ! இடையிடையே தடை.—என் தமையஞர்பால் ஏனோ இன்னும் உள்ளம் பற்றுக்கொள்கிறது ? என் ஊக்கத்தை இடையிடையே தடைப்படுத்துவது இப் பற்றே. 'உள்ளமே ! உறுதியாக நில் ! நீ விரும்பிய அரசு கிடைக்கவேண்டுமாஞல், உன் கண்முன் அதைத் தவிர வேருென்றும் காணப்படலாகாது ! வேறு காட்சிகள் உன்னை மயக்கிவிடும் ! மீனைப் பிடிப்போன் அது துடிப்பதைக் கண்டிரங்கிஞல் விட்டுவிட வேண்டியதுதான். அதன் அழகையும் அதன் விளையாட்டையுங் காண விரும்புவோன் அதைத் தின்னமுடியாது ! அண்ணன் அன்புக்குக் கண்ணீர் விட்டால் அது உன் அரசுக் காதலை வேரறுத்து விடும் ! ஆகையால் ஒன்றை ஒழி ; ஒன்றைப் பற்று' (நின்று) முல்லையின் முறுவலும் முல்லையின்

மணத்தை நுகர உள்ளத்தைப் பிணிக்கிறது! அரசுக்கு முல்லைக்கொடியின் படர்ச்சியும் இனிதே. அம் முல்லையைப் பெறுவதும்...எளிதே. ஆகையால், உள்ளமே! இனி எதற்கும் அஞ்சாமல் இவற்றைப் பெற முயல்வாயாக! இறைவனே எதிர்ப்படினும் — 'கூற்றுடன்று மேல்வரினும்— கூடி எதிர் நிற்பாயாக!

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்."

இனி அமர்ந்துறங்குக.

(கட்டிலிற் சென்று படுக்கிறான்)

---

## காட்சி 16

இடம்: முதிரத்தில் அமைச்சர் முடிநாகராயர் அரண்மனைப் பூம்பொழில்.

காலம்: அதே இரவு.

முடிநாகராயர்: (உலாவிய வண்ணம்) உள்ளத்தைச் சுடுகிற இந்தத் தீயைத் தணிக்க ஏதும் நீரில்லையா? அவ் வெப்பம் தண்ணீரையும் வறட்டிவிட்டதே! அரசர் ஆணைக்குட்பட்ட வுள்ளமே! இனி உனக்குக் கரையேற வழியேது?......விளையாட்டுக் குறும்பன் கையிலே ஆட்சி! குரங்கின் கையிலே பூமாலை! பூனையின் வாயிலே கிளி......இக்கொடியவன் ஆட்சியைவிட அவருடைய அன்புள்ளமே என்னை வருத்துகிறது! இந்நாட்டை வருத்துகிறது! புலவருடைய நாவை வருத்துகிறது!...இனி எப்போது கேட்போம் இன்பந்தருந் தீந்தமிழை? இனி எப்போது காண்போம் புலவருடைய குழுவினிலே

புன்னகை தவழும் அப்புரவலருடைய முகவழகை? எப்போது பருகுவோம் பைந்தமிழ்த் தேனை? தென்றல் வீசுகிறது! ஆனால், மணமில்லை! வண்டுகள் ரீங்காரஞ் செய்கின்றன! ஆனால், அவ் வொலியிலே தமிழில்லை! (வானத்தை நோக்குகிறார்) வானத்திலே தாரகைகளிருக்கின்றன; முழுமதியும் இருக்கின்றது; மேகங்கள் ஓடுகின்றன! யாவும் முன்போலவே நிகழ்கின்றன! ஆனால், அந்தோ! வள்ளலின்மையால் வறண்ட காட்சி!'......அவருடைய உணவை யளைந்த கைகள் அவரெதிரியைக் கும்பிடுகின்றன! அவர் செஞ்சோற்றையுண்ட வாய் அவரெதிரியை வாழ்த்துகின்றது! அவருணவிலே வளர்ந்த இவ்வுடல் அவரெதிரிக்குப் பணி செய்கிறது! என்னே கொடுமை! உலக இயற்கை மாறவில்லை; இந்தக் கோழையுள்ளம் மாறிவிட்டது! (ஒற்றனொருவன் வருகிறான்) ஏதாவது புதியதுண்டோ?

ஒற்றன்: (வணங்கி) மறைந்த புலிக்கு வேடர்கள் வலை போடுகிறார்கள்?

முடி: என்ன, என்ன?

ஒற்றன்: அரசர் பெருமானைத் தேடிக் கொன்று வருவோருக்குப் பரிசு கொடுப்பதாக.

முடி: பறை சாற்றுகிறார்களா?

ஒற்றன்: அன்று. மறைவாகக் கையாட்களுக்குத் தெரிவிக்கிறார்கள்.

முடி: (கலங்கி) இது அவருக்குத் தெரிவதெப்படி? நாட்டையளித்த அண்ணனுக்குக் காட்டையளிக்க

வும் விரும்பாத அறமுடையோர் நிலை விளங்குவ தெப்படி ?

ஒற்றன் : அரசருடைய உப்பைத் தின்ற இவ்வுடல் இருக்கிறது ; வாழ்விலே மகிழ்ந்த மனம் இருக்கிறது.

முடி : (அன்புடன் கண்ணீர் ததும்ப அவன் கையைப் பற்றி) நீ செய்யும் இந் நன்றியறிதல் நாட்டைக் காக்கும் நற்றுணை.

ஒற்றன் : (கைகுவித்து வணங்கி) 'என் கடன் பணி செய்து கிடப்பதே!' இதோ செல்கிறேன்.

(செல்கிறான்)

முடி : மரபின் மானத்தைக் காப்பதாம்! இப்படியா காப்பது? அண்ணன் காக்க முயன்று விட்டுக் கொடுப்பதாம்! தம்பி அழிக்க முயன்று அடிவேர் பறிப்பதாம்! தமிழறம் அவலமாகும் நாளாய்விட்டதே! இராமன் தன் ஆட்சியைத் தம்பிக் களித்துச் சென்றான். எனினும், தம்பி ஏற்றுக்கொள்ள உளங்கொளாமல் அண்ணனைத் திருப்ப அழைத்தான்! அவன் வரும்வரை அவன் ஏவலனாகவே இருந்தாண்டான். இங்கு நடப்பதென்ன? (சிற்றத்துடன்) அரசையிட்டுச் சென்ற அண்ணலைத் தேடிக் கொல்லத் திரிகிறான் தீயவன்! தன்னை வேறாக எண்ணாத அண்ணனை அழிக்க வழி தேடுகிறான் தம்பி! (உலாவுகிறார்) இனியும் எப்படி யாகுமோ? (அமைச்சர் மனைவி வருகிறாள்) என்ன?

மனைவி : (கவலையுடன்) உறங்குவதேயில்லையா ?

முடி: (பெருமூச்சு விட்டு) உறக்கம் எப்படி வரும்? உள்ளத்திலே கவலைத் தீ சுடுகிறது! சிந்தனைக் கட்டடங்களைச் செந்தீ தழுவுகிறது! நீ போய் உறங்கு.

மனைவி: வெள்ளத்தைப் பெருகவிட்டுக் கவலைப்படுவதாலே கைகூடுவதுமுண்டோ?

முடி: தவறிவிட்டோம். எனினும், எப்படியாவது தடுக்க எண்ணுகிறது உள்ளம்.

மனைவி: அரசி படுந்துயரம், அந்தோ! என்னென்பது?

முடி: நீதான் தேற்றவேண்டும்.

மனைவி: கவலையைவிட்டுத் துன்பத்திலிருந்து மீள வழி தேடுங்கள். உறங்காதிருந்தால் உடல் கெடுமே!

முடி: சரி! நீ செல்; இதோ வருகிறேன்.

மனைவி: எனக்குமட்டும் உறக்கம் வருகிறதா?......குடிகள் உள்ளம் எப்படிக் குமுறுகிறதோ?

முடி: கொடை கொடுத்த வள்ளலைக் குறித்துச் செய்வதறியாமல் திகைப்பார்கள்; நன்றியை மறந்த அரசன்கீழ் வாழ நயப்பார்களா? விரைவிலே தீக் கொழுந்து தன் நாவை நீட்டும்!

மனைவி: ஆம். உள்ளம் எரிந்தால் உலகம் எரிகிறது!

முடி: அதற்கும் வள்ளலே தடையாயிருப்பார்! எனினும், முயன்று பார்ப்போம். அரசர் தாமே தமக்குப் பகையாகும் வியப்பைக் கூறுவதெப்படி? வா, செல்வோம். (இருவரும் செல்கிறார்கள்)

## காட்சி 17

*இடம்—முதிரமலைச் சாரலில் ஒரு குகை.*

காலம்—*காலை.*

குமணர் துறவிபோன்ற மாற்றுருவத்துடன் குகையருகி லுள்ள ஒரு மரத்தடியில் அமர்ந்திருக்கிறார்.

குமணர்: (*தாமே*) வாழ்க்கை நெறியை ஊழ்வினை எங்கும் ஓரே வகையாக ஒழுங்குபடுத்தி வைப்ப தில்லை. சிறு தொலைவு நிழலும் கனியும் நீரும் நிறைந்திருக்கும்; சிறு தொலைவு காடும் மேடுமாகக் கரடு முரடு செய்யும். எனினும், இவ்வகை நெறி யிலேதான் நம் வாழ்க்கைப் பயணம் நடக்கிறது! இதை நீங்கிச் செல்வதெப்படி? நன்னிழல் கிடைக் கும்போது, வெதுப்புங் கானும் இருக்கிறதென்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். கொடு மையை ஏற்க உளத்தைப் பண்படுத்தவேண்டும். இன்றேல் வாழமுடியாது. (*தம்மைச் சூழ்ந்து இருக்கும் இயற்கையழகை நோக்குகிறார்*) ஆ! என்ன இயற்கை யழகு! புலவர்களின் கவிதைக்குற்ற கருவூலம்!...... கற்பனையில் அடங்குமோ இக் காட்சி? உள்ளக் கவலை ஒரு கோடியாயினும் மெல்ல அறியாமல் விலகிவிடும்! உணவையும் நினைவையும் மறப்பிக்கும் இவ்வியற்கை யோவியம் வாழ்க! (*ஒற்றன் சுற்றிலும் பார்த்துக்கொண்டு வருகிறான்*) நன்று! இவன் ஏன் இங்கு வருகிறான்? (*நகைக்கிறார்; பெருமூச்சு விடுகிறார்*) எரிந்து போன அரசியலிலே காணப்படும் சிறு பொறி! அன்று! சிறு பொறியின் நினைவு! உள்ளத்தி

விருந்து இறக்கப்பட்ட சுமையின் சிறு சுவடு; நம்மை அழைத்துச்செல்ல வந்திருப்பான் அந்த எரிமலேக்கு. உள்ளமே இளகிவிடாதே! அவனே அறியாதவன்போல நடிக்கத் திட்டம் போட்டுக் கொள். (ஒற்றன் அருகில் வந்துவிட்டான்.)

**ஒற்றன் :** (வணங்கி அமர்கிறான்) அப்பப்பா! (கால்களேப் பிடித்துக்கொள்கிறான்) காட்சி என்னவோ நன்றாகத்தான் இருக்கிறது! ஆனால், நடக்கும் காலே ஒடித்து விடுகிறது!

**குமணர் :** (புன்முறுவலுடன்) உலகமே அப்படித்தான் ஐயா! அழகிய காட்சி! இனிய பொருள்கள்! ஆனால், அவற்றை நுகரும்போது பல தடைகள் உண்டாகும். கல்லிருக்கும்! முள்ளிருக்கும்! ஈயிருக்கும்! வாய் நடுக்கும்! அடைத்துக் கொள்ளும்!......தாங்கள் யார்?

**ஒற்றன் :** உலக வாழ்விலே வெறுப்புத் தட்டிய ஒருவன்!

**குமணர் :** ஓ! கால்வலியோடு மனவலியும்!

**ஒற்றன் :** என்ன செய்வேன் அடிகளே! தங்களேப் பார்த்த உடனே தாங்கள் என்ன நினைத்துக் கொள்கிறீர்களோ—துறவிலே ஆசை யுண்டாகிறது.

**குமணர் :** (நகைத்து) உலக வாழ்விலே வெறுப்புத் தட்டினால் துறவா? துறவிலே உலகமில்லே யென்கிறீர்களா?

**ஒற்றன் :** ஆம். உலகை வெறுப்பது தானே துறவு?

குமணர் : உலகை வெறுத்தவன் வேறு எங்கே செல்வான்? இதோ பாரும்! நம்மைச் சூழ்ந்து இருக்கும் இனிய காட்சிகளை! மரங்களும் செடிகளும் கொடிகளும் அவற்றிலே பழகும்—குடியிருக்கும் பறவைகளும் விலங்குகளும் பூச்சிகளும் புழுக்களும் ஈக்களும் எறும்புகளும் உயிர்களில்லையா? அவற்றிற்கு இன்பமுந் துன்பமுமில்லையா? இவை உலகிலிருந்து விலகிய வேறு பொருள்களா? மேலும், துறவிக்கு மட்டும் பசித்துன்பம், அயர்வு, மகிழ்ச்சி முதலிய உணர்ச்சிகளில்லையா? உள்ளமில்லையா? அவ்வுள்ளத்திலே பிற உயிர்களின் இன்பதுன்பங்கள் உறைப்பதில்லையா? அல்லது வெறுங்கல்லா? ஆகவே, துறவி வெறுத்து விலகுவது எதை?

ஒற்றன் : (திகைத்து) அப்படியானால், உலகை வெறுத்தவன் துறவி என்கிறார்களே, அது தவறா?

குமணர் : தவறுதான்.

ஒற்றன் : அப்படியா? ஆனால், துறவென்பதென்ன?

குமணர் : தன்னைப்போலப் பிறரையும் நோக்கும் நிலையே துறவு. இல்லறத்தான் ஒருவன் தன் சூழ்நிலையால்—மனைவி மக்களின் தொடர்பால்—பிறருடைய நன்மையை நாடமுடியாத நிலையிலிருப்பான். அதுமட்டுமா? பிறர் துன்புறுவதை அறிந்தும்—அதாவது அவர்களைத் துன்புறுத்தியேனும்—ஒருபொருளைப் பெறுவதிலும் விலக்க முடியாதவனாக இருப்பான்.

ஒற்றன் : உண்மையே.

குமணர் : இந்த நிலையிலிருந்து—ஆவலிலிருந்து—விலகுவதே துறவு. தன் குடும்பத்தின் இன்பத்தை

மட்டும் நோக்காமல் மற்றோருடைய இன்பத்தையும் நோக்குவதுதான் துறவு. உலகமே தன் குடும்பமென்று நினைப்பவன்தான் துறவி. குறுகிய நோக்கிலிருந்து பரவிய நோக்கிற்கு வருபவனே துறவி. 'பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்' என்ற வள்ளுவரின் உள்ளமுமிதுவே!

**ஒற்றன் :** (வியப்புடன்) இது வரையில் இத்தகைய நன்மொழியைக் கேட்டதே யில்லை அடியேன்.

**குமணர் :** ஒரு நாட்டையே தன் குடும்பமாக நினைக்கும் அரசன், மற்றவன் நாட்டை விரும்பிய ஆவலினால் அந்நாட்டிற்குத் துன்ப மியற்றிப் போர் புரியும் போது குறுகிய உளமுடையவனாகிறான்? தன் னாட்டிற்காகப் பிற நாட்டைத் துன்புறுத்துகிறான். ஆகவே, பரவிய பேருலகத்தையே தன் குடும்பமாக நினைக்கும் துறவிக்கு இவ் வேந்தன் துரும்பாகிறான். துறவி பேரரசன்! இவன் சிற்றரசன்!

**ஒற்றன் :** இளங்கோவடிகளைப் பேரரசரென்று நிமித்திகன் கூறியதும் இதே கருத்துப்போலும்!

**குமணர் :** ஆம்; இதோ பாரும்! இப்போது பசிப்பிணி வந்து விட்டது! உண்ண உணவை விரும்பாமலிருக்க முடியுமா? காய்கனிகள் கிடைக்கா விட்டால், உலகை நாடித்தானே ஆகவேண்டும்? அதை வெறுத்தவன் அதனிடம் செல்லலாமோ?... இருக்கட்டும் இப் பேச்சு. நீர் யாரோ? பசியுடன் இருக்கிறீர். உம்மை விருந்தினராக ஏற்கும் பேறு கிடைத்தது எனக்கு. சற்று இரும்! இக் குகைக்குள் சில பழங்கள் உள்ளன. எடுத்து வருகிறேன் (உள்ளே செல்கிறார்)

ஒற்றன் : (தானே) இப் பெரியார் நம் அரசரா யிருப்பாரா? முகத்தோற்றம் அவ்வாறில்லையே! நடையும் அத்தகைய ஏறுபோற் பீடு நடையாக இல்லை! ஆனால், சாயலால்மட்டும் அவரைப் போலவே யிருக்கிறார்......வேண்டுமென்றே தம்மை அவர் மறைத்தாற் கண்டுபிடிப்பது எப்படி? காணாமலே மீள்வதுந்தான் எப்படி? காடெல்லாம் அலைந்து திரிந்தேன்! (கண்ணீர் ததும்ப) கண்டே னில்லையே தமிழ்க் காவலரை! (குமணர் வெளியே வருகிறார். ஒற்றன் தன் கண்ணைத் துடைத்துக் கொள்கிறான்)

குமணர் : (புன்முறுவலுடன் சில பழங்களை இருவர்க்கும் இடையே வைத்துக்கொண்டு அமர்கிறார்) பழத்தைத் தின்னுங்கள் ஐயா! துறவைப்பற்றிப் பிறகு பேசுவோம். பசி வந்திடின் எதுவும் நில்லாது.

ஒற்றன் : (ஒரு பழத்தை யெடுத்துத் தின்றுகொண்டே) துறவியாருக்கு இல்லறத்தான் உணவளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். ஆனால், இன்று அவரே இல்லறத்தானுக்கு உண்டி யளிப்பதைக் காண்கிறேன்!

குமணர் : (ஒரு பழத்தை யெடுத்துத் தின்றுகொண்டே) தன்னை நாடிவந்த ஒருவர்க்கும் பழமுங் கொடுக்க இயலாத ஒரு துறவியால் நாட்டிற்கு—உலகிற்கு என்ன நன்மை?

ஒற்றன் : (நகைத்து) அப்படியானால் நான் குடும்பத் தொல்லை பொறுக்கமுடியாமல் துறவியாக வந்தது பிழையென்று சொல்லுங்கள்!

குமணர்: (நகைத்து) ஆம்; துறவிகளின் நிலையைப் பழிப்பதாக முடியும் அது.

ஒற்றன்: (சிந்தனையுடன் கூறுபவன்போல்) அப்படியானல், எங்கள் அரசர் துறவியாக வந்ததுந் தவறுகு மென்கிறீர்களா?

(அவரைக் கூர்ந்து நோக்குகிறான்)

குமணர்: (புன்முறுவலுடன்) ஓ! தெரிகிறது! நீர் உம் அரசரை நாடித் திரியும் ஒற்றர்போலும்!...தங்கள் அரசர் யார்?

ஒற்றன்: (வெட்கி) நானா ஒற்றன்? அப்படியொன்றுமில்லை. நான் குடிகளில் ஒருவன். எங்களரசர் இந்நாட்டரசர்.

குமணர்: (வியப்புற்றவர்போல்) யார்? குமணரா? என்ன வியப்பிது? ஏன் துறவியானர்?

ஒற்றன்: அது அவருக்குத்தான் தெரியும். ஆட்சியிலே வெறுப்பென்று அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தார். அரசியாருடன் வெளியேறிவிட்டார். மேலும், உலகிற்குத் தம்மை யிறந்தவராகவே நினைக்கும்படி எழுதியிருந்தார்.

குமணர்: இவ்வளவு குறிப்பிட்டுவிட்டு மறைந்தவரைத் தேடுவதிலே என்ன பயன்? 'வேண்டாமென்பவன் கழுத்திலே வெறுத்த பெண்ணைக் கட்டுவதுபோல'த் தானே ஆகுமது?

ஒற்றன்: (கவலையுடன்) அவரைத் திரும்ப அரசேற்கத் தூண்டுவதற்கன்று தேடுவது? வேறொரு புதிய செய்தியை அறிவிக்கவே தேடுகிறேன். அவரறிந்தாகவேண்டும் அதனை.

குமணர்: (புன்முறுவலுடன்) நீர் ஒற்றரல்லரென்றீரே முன்பு? ஒற்றரல்லாத நீர் அவரைக் காண்பது எப்படி?

ஒற்றன்: (நாணத்துடன்) ஒற்றனென்றே வைத்துக் கொள்ளுங்கள். (கண்ணீர் ததும்ப) அவரைத் தேடி அலைகிறேன் சிலநாட்களாக! காணுமல் மீள மாட்டேன்?

குமணர்: நீர் மட்டும் அவரைத் தேடிப் பயனென்ன?

ஒற்றன்: நாட்டின் உயிராகிய அவரை நான் மட்டுந் தேடுவதாக நினைக்கலாமா? அமைச்சராகிய முடி நாகராயரின் ஏவலாலேயே நான் வந்தேன்.

குமணர்: (தம் உள்ளப் பரபரப்பை வெளிக்காட்டாமல்) உம்மால் அவரைக் கண்டுபிடிக்க முடியுமா, நேரிலே கண்டாலும்?

ஒற்றன்: நன்றாய்க் கண்டுபிடிப்பேன். "பல்லாவுள் உய்த்துவிடினும் குழக்கன்று—வல்லதாந் தாய் நாடிக்கோடலை" என்பதுபோல எங்கள் அரசரைக் கண்டுகொள்ள முடியாமற்போனால் என் கண்களுக்குத்தான் குறையென்று சொல்லவேண்டும். அவரை என் உள்ளத்திலே எழுதி வணங்கிவரும் நான் காணமாட்டேனே? என் உடம்பிலே ஓடும் ஒவ்வொரு நரம்பிற்கும் அவரைப்பற்றிய உணர்ச்சியே எப்போதும்!

குமணர்: (அன்புடன்) நாட்டையேவிட்டு ஓடி மறைந்த அவரிடம் உன் அன்பைச் செலுத்தி இவ்வாறு அல்லலுறலாமா? அப்படி அவரிடம் அறிவிக்க வேண்டிய இன்றியமையாத பொருளென்ன?

ஒற்றன் : (தயக்கத்துடன்) அவரிடமே அறிவிக்க வேண்டி வந்தேன். மன்னிக்கவேண்டும்.

குமணர் : (புன்முறுவலுடன்) அப்படியானல் உம்மால் அவரைக் கண்டுபிடிக்க முடியாது.

ஒற்றன் : (வணங்கி) பெரியாருடைய அருள்மொழி அவ்வாறு இருத்தலாகாது! அவரைக் கண்டாலன்றி, 'மாளும் இவ்வுடல்கொண்டு மீளேன்!' (கண்கலங்க) தாங்கள் அவரை அறிந்திருந்தால் இடங்கூறுங்கள்.

குமணர் : உம்மால் அவருக்குத் தீமையேற்படுமோ என்ற ஐயம் அவருக்கிருந்தால் வெளிக்காட்டிக் கொள்வாரா?

ஒற்றன் ; (துக்கத்துடன்) அவ்வாறு அவர் என்னை நினைக்கமாட்டார். ஏனெனின், 'என் உடலில் உள்ள ஒவ்வோரணுவும் அவருக்குச் சேவை செய்யவே விழைகிறது! முன்னும் பழகியது!' என்பதை அவ் வள்ளல் அறிவார். தவருக நினைப்பின் திங்களிலே நெருப்புண்டானது போலத்தான்.

குமணர் : (தம் தாடி மீசைகளைக் களைந்து உண்மைத் தோற்றத்துடன் நிமிர்ந்து அரச நோக்குடன்) அன்பா! உன் அரசனைக் கண்டனையா?

(கண்ணீர் ததும்புகிறது)

ஒற்றன் : உணர்ச்சியுடன் (துள்ளியெழுந்து அவர் திருவடிகளில் வணங்கி) பேறுபெற்றேன்!

குமணர் : (அன்புடன் அவனை எழுப்பி) என் மாற்றுருவை நீ காணமுடியாதது எனக்கு மகிழ்ச்சியையே அளிக்கிறது. என் முயற்சியிலே வெற்றி பெற்றேன் என்று நினைக்கிறேன்.

ஒற்றன் : (கண்ணீர் வார நாக்குழற) அரசர் பெருமான் கருத்து எங்களுக்கு ஒன்றுந்தெரியவில்லை! நாடு செய்த தீமை என்ன? எங்களை வெற்றுடலாக விட்டுவிட்டு வந்து விட்டீர்களே! எங்கே என் அன்னையார்?

குமணர் : (வருத்தத்துடன்) யாரும் எனக்குத் தீமை செய்யவில்லை. என்னுளமே துறவு நிலையை நாடியது என்று அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தேன். அதன் சார்பிலே எதையும் புதிதாகக் கூறுவதற்கில்லை. நீ வந்ததை விளக்கிவிட்டுச் செல்! என் உள்ளத்தைக் குழப்பாதே—உண்மையான அன்பு கொண்டிருந்தால்!

ஒற்றன் : (வணங்கி) மன்னிக்கவேண்டும். தங்கள் தம்பியார் தங்கள் கொடைப்பண்பை மறந்தார். நன்றி மறந்ததோடு கொல்லவும் சூழ்ச்சி செய்திருக்கிறார். தங்கள் தலையைக் கொண்டுவந்தால், அதற்கு இவ்வளவு விலையென்று தம் கையாட்களுக்குக் கூறியுள்ளார்.

(கண்ணீர் விடுகிறான்)

குமணர் : (அன்புடன்) நண்பா! அதைப்பற்றிக் கவலைப் படவேண்டாம். எப்போதாவது ஒருமுறைதானே இறப்பு? ஆகையாற் சாவைப்பற்றிச் சிந்திக்காதே! —எனினும், என் மாற்றுருவத்தைக் காணமுடியாதென்பதை உன்னைக்கொண்டு முடிவு செய்துவிட்டேன். வேறு என்ன?

ஒற்றன் : தங்களிடம் அவர் செயலைத் தெரிவித்துக் கொள்ளவே அமைச்சரால் அனுப்பப்பட்டேன். வேறொன்றுமில்லை.

**குமணர்:** (முன்போல அணிந்துகொண்டு) கவலையின்றிச் செல் இனி. அமைச்சரிடம் இன்னும் சரியான இடங் கிடைக்கவில்லை என்று கூறு.

**ஒற்றன்:** (வணங்கி) கட்டளைப்படியே. (செல்கிறான்)

---

## காட்சி 18

*இடம்—பெருஞ்சித்திரத்துக் கருகில் ஒரு மரநிழல்.*

*காலம்—நண்பகல்.*

பெருஞ்சித்திரனாரும், பெருந்தலைச் சாத்தனாரும்.

**பெருந்:** நண்பரே! தமிழ்ச் செல்வமுடையோரெனத் தருக்கிப் பேசுகிறோம். அமிழ்தமென இனிய அஞ்சொற் கவிதையால் அகம் மகிழ்கிறோம். கற்பனையுலகிலே நம்மை மறந்து களிப்புட னுலாவுகிறோம். எனினும், வயிற்றுக் கொடுமையை வழிப்படுத்த வகையறியோமே!

**பெருஞ்:** வறுமையே நம் வாழ்வின் ஒளியாக இருக்கிறது. அஃதின்றேல், தீஞ்சுவைத் தமிழின் திறம் வெளிப்பட வழியில்லையே! வள்ளல்களின் வண்மை படர நம் வறுமையே கொள்கொம்பாக வுள்ளது.

**பெருந்:** போதுமையா! போதும்! வள்ளல்களின் புகழ் நம்மால் பரவுவது போதும்! வறுமை! வறுமை!! வறுமை!!! நம் வறுமையாலேதான் அவர்களைப் புகலடைகிறோம்!......ஒவ்வொருபோதும் அவர்களாலே புறக்கணிக்கப்படும்போது நம்மையே எரித்துக் கொள்கிறோம்! நடைப் பிணமாகிறோம்! என்ன வாழ்வு!

பெருஞ்: *(இரக்கத்துடன்) ஆம்! நானும் வறுமைத் தீயால் வதங்கி வாடிப்போயிருக்கிறேன்.*

பெருந்: *என் மனையின் வளத்தைக் கேட்டீரானால், வயிறு குளிர்ந்துபோகும்! என் மனையிலே அடுப்பு நீண்டகாலமாகியும் தேயவேயில்லை!*

பெருஞ்: *(வியப்புடன்) அஃதாவது அடுப்பு மூட்டவே யில்லை!*

பெருந்: *(நாணத்துடன்) ஆம். அடுப்பிலே காளாம்பி பூத்துளது!*

பெருஞ்: *அந்தோ! (கண்களில் நீர் நிறைகிறது)*

பெருந்: *(ஒரு புறமாகப் பார்த்துக்கொண்டே) என் பைங்குதலைச் சிறுமி உடலை வாட்டும் பசியினாலே, தன் தாயின் வற்றிய மார்பைச் சுவைக்கும்போ தெல்லாம் பாலின்மையாலே அழுவாள். அவளைப் பார்த்துப் பார்த்துக் கண்களில் நீர் நிறைந்து 'மழைக்கண்' உடையவளானாள் என் வாழ்க்கைத் துணைவி! — தெரிகிறதா என் புலமை எங்கே படர்ந்திருக்கிறதென்று?*

பெருஞ்: *(அன்புடன்) நண்பரே! வருந்தாதீர்! என் வறுமை வழிக்கொண்ட விதத்தை விளம்புகிறேன். ஒருமுறை ஒரு வள்ளலின் இல்லத்திற்குச் சென்றேன்.*

பெருந்: *அந்த வள்ளல் யார்?*

பெருஞ்: *கூறுகிறேன், கேளுங்கள். அவ் வள்ளல் தம்முடைய நோக்கத்தினாலேயே என் உள்ளத் தைக் குளிர்வித்தார்; இன்சொல்லாற் பசியையே மறக்கடித்தார்; பிறகு, உணவளித்தார். என் சொல்வேன்?*

**பெருந் :** நல்ல உண்டியாயிருக்கும்.

**பெருஞ் :** ஆம். கேளுங்கள் உணவின் சிறப்பை! புதிய பொற்கிண்ணங்களிலே தும்பைமலரெனச்சோறும், பொன்னிறமான கறிகளும் படைத்திருந்தார்கள்! அத் தோற்றம் முழு நிலவைச் சுற்றி நாண்மீன்கள் இருந்தாற்போன்று காணப்பட்டது. திகைத்து நின்ற என்னை அவர் கையைப்பற்றி அமர்த்தித் தாமும் பக்கத்திலே அமர்ந்தார். எனக்கோ நாண மாக இருந்தது! என்னை மறந்து அமர்ந்து உண் டேன். பலவகைத் துவையல்களுடன் நெய் கலந்த சோற்றைப் படைக்கப் படைக்க விலாப் புடைக்க உண்டேன். எங்களுடன் பல புலவர்களும் அமர்ந்து உண்டனர். உண்ணப் புகுமுன் அவர், 'புலவர்கூட்டம் வாழ்க!' எனக் கூறியது இன்னும் என் செவிகளிலே ஒலிக்கிறது.

**பெருந் :** உம். பிறகு என்ன?

**பெருஞ் :** கோடைக்காலத்திலே கதிரவனுடைய வெங் கதிர்களாலே ஈரம் வற்றிப்போன பயிர்போலப் பசியால் தின்னப்பட்டு வற்றிப்போயிருந்தது என் உடல்! உணவு செல்லாததாலே மடிந்து கிடந்தது பலவரிகளாக என் குடல்! யாவுந் தழைத்தன அவ் வள்ளலின் உணவால்!

**பெருந் :** நன்று! அந்த வள்ளல் யாரென்று இனியுந் தெரிவிக்கமாட்டீரா?

**பெருஞ் :** முதிரத்து வள்ளல் குமண மன்னரே அவர். அவர் புகழ் எப்படி நெடுந்தூரத்திலுள்ளோரும் அறியும் நிலையில் உள்ளதோ, அவ்வாறே அவர் முதிரமலையும் நெடுந்தூரந் தெரியும்.

பெருந் : ஓ! அவரா? அவரைப்பற்றி நானுங்கேள்விப் பட்டிருக்கிறேன். கொடை எத்தகையது?

பெருஞ் : எல்லாம் பொன்னுடைகளும் பொற்பணி களும் பொற்காசுகளுமே தாம் அளவின்றிக் கொடுத்தார். என் கிழிந்த ஆடைகளை முற்றும் நீக்கிப் பொன்னுடையா லுடுத்திவிட்டார். பொற் பணிகளைப் புனைந்தார். (மகிழ்வுடன்) ஒரு களிற்றை அழகுபடுத்தி என்னை அதன்மேலேற்றிப் பொருள் மூட்டைகளையும் என் பக்கலில் வைத்தனுப்பினார். என்னே அவர் பெருந்தன்மை!

பெருந் : (நகைத்து) நன்று! அந்தக் களிற்றை வேண்டா மென்று கூறவில்லையா நீங்கள்? வறுமையைக் கட்டிச் சோறிடமுடியாத நாம் யானையைக் கட்டித் தீனி போடுவதுதான் எப்படி?

பெருஞ் : வெளிமான் என்னும் கொடையாளியை அறி வீர்களென்று நினைக்கிறேன்.

பெருந் : அறிவேன். இப்போது அவர் பேரின்ப வீட் டிலேயன்றோ இருக்கிறார்?

பெருஞ் : ஆம். அவர் தம்பி தமிழை யறியாதவன். "செவி யுணர்வில்லாத வாயுணர்வு," உடையவன். அவன் என் வரிசை யறியாமற் சிறிது கொடுக்க வந்தான்.

பெருந் : அவன் பெயர் என்ன?

பெருஞ் : இளவெளிமான். அவனை நாணுறச் செய்ய அப் பகட்டை அவனுடைக் காவல் மரத்திலே கட்டிவிட்டு வந்தேன்.

**பெருந் :** (மகிழ்வுடன்) மிகவும் நன்று.

**பெருஞ் :** அப்பாடா ! இப்போது என் வறுமைத் தோழன் எங்குளான் என அறியேன். ஒருமுறையே குமண வள்ளலைக் கண்டேன்; பைந்தமிழ்க் கவிதை யாற் பா வினிமை யறியாரைப் பாடிப் பாடிப் பசியைத் தணிக்குந் தொல்லையைத் தொலைத்தேன். தாங்களும் குமணரைக் கண்டால் வறுமை நோய் தீர்ந்து நலம் பெறுவீர்கள்.

**பெருந் :** (கை குவித்து) அன்பரே ! தங்கள் ஆற்றுப் படையால் என் வறுமை நெறி தொலைய இறைவ னருள்வாளுக ! இனி நான் செல்கிறேன்.

**பெருஞ் :** (கை குவித்து) குமணர் கொடையால் வறுமை தொலைவதிலே ஐயமே யில்லை. அதோ தெரிகிறதே, அதுதான் என் குடியிருப்பாகிய பெருஞ்சித்திரம். இப்படியே வாருங்கள்; அருள் கூர்ந்து விருந்துண்டு மகிழ்ந்து செல்லுங்கள். அதற்குள் வெயிலின் வெப்பந் தணியும்.

**பெருந் :** தங்கள் விருப்பப்படியே ஆகட்டும்.

(இருவரும் செல்கிறார்கள்)

## காட்சி 19

**இடம்:** இளவெளிமான் நகரில் அவன் அரண்மனையில் முல்லைக் கொடியின் அந்தப்புரப் பூம்பொழில்.

**காலம்:** காலை.

முல்லைக்கொடி ஒரு மணல் மேடையிலே அமர்ந்து மல்லிகை மலரைத் தொடுத்துக்கொண்டிருக்கிருள்.

**முல்லை:** (தனிமை) நீண்ட நாட்களாயினவே! அவரை நான் மறந்தாலும் என் கண்கள் மறக்கவில்லையே! கண்கள் மறந்தாலும் உள்ளம் மறக்கவில்லையே! அவருடன் ஒருநாள்—ஒரு நாழிகைகூடப் பழக வில்லை; அவரைக் காதலித்தது பேதைமை. (கண் களில் நீர்வடிகிறது) முல்லைக்கொடியே! பாரியைப் போல நீ படர்வதற்குக் கொள்கொம்பளித்தாரோ? வெற்று வெளியிலே படரத் தாவுகிருய். இது பேதைமையன்ரே?......தென்றல் தவழ்வதுபோல அவர் நினைவு என் உள்ளத்தைத் தடவுகிறது!... எங்கும் உலவும் இத் தென்றல் முதிரமலைச் சார லுக்குச் செல்லலாகாதா? அவரிடம் உண்மையான என் உள்ளக் காதலை எடுத்து வீசி மெல்லென விளம்பி என் தனிமையின் கொடுமையைத் தவிர்க்க அவர் கூறும் பொன்மொழிகளையேனும் எனக்கு வந்து கூறுகிறதா? மெல்ல வந்து என் கூந்தலையும் முதுகையும் தடவிக் கொடுக்கிறது! 'உணவு கிடைக்காது; உணவு உணவு என்று நினைத்தாலே பசி போய்விடும்' என்பதுபோ லிருக்கிறது அதன் செயல்! (மல்லிகை மெல்ல வந்து பின்புறம் நிற்கிருள்)

இந்த மல்லிகை என் கையிலே யிருந்தாலும் என்னைப் பார்த்து மனமிரங்காமல் நகைப்பது

நன்றே ? "முல்லையாகிய நீ மணம் பெறவில்லை; நான் மணம் பெற்றேன், பார்!" என்பது போலன்றே உள்ளது அந்த நகைப்பு ?

**மல்லிகை :** (எதிரே வந்து) உன்னைப் பார்த்து நகைக்கும் அந்த மல்லிகையை ஏன் தொடுகிறாய்? எப்போது பார்த்தாலும் மல்லிகை, மல்லிகை யென்று உயிர் விடுவது ஏன்? இவ்வளவு காலை நேரத்திலே பூம் பொழிலிலே என்ன வேலை! உன்னை அரண்மனை யிலே தேடித் தேடி அலுத்துப்போய் இங்கே வந்தேன். இங்கே என்னவென்றால் நீ மல்லிகை யோடு பேசிக்கொண்டிருக்கிறாய்! நான் போகி றேன். இந்த மல்லிகைதான் இனி உன் தோழி! (செல்வதுபோலத் திரும்புகிறாள். முல்லைக்கொடி பேசாமல் மலர் தொடுக்கிறாள் மல்லிகை இரண்டடி எடுத்து வைக்கிறாள்) போகட்டுமா ?

**முல்லை :** (வெறுத்தவள்போல) அடி அம்மா! நீ போவதை யார் தடுக்கிறார்கள் ? வாழ்விலுந் தாழ் விலும் பிரியாதவர்களே நண்பர்கள், என் நிலை யறிந்தும் இரக்கமின்றி நீ போக விரும்பினால் என் னால் தடுக்க முடியுமா ? உணர்ச்சியற்ற இந்த மல் லிகையும் நீயும் ஒன்றே? நானும் வேறிடத்துக் குப் போகிறேன். (எழுகிறாள்)

**மல்லிகை :** (அவளை அருகில் வந்து தழுவிக் கொண்டு அன்புடன்) உனக்குச் சினங்கூட வருகிறதே !

**முல்லை :** (விலகிநின்று) உண்மைதான் ! உணர்ச்சியற்ற இக் கட்டைக்குச் சினம் வேறா ? (செல்கிறாள்)

**மல்லிகை :** (அவள் கையைப் பற்றி) 'சினம் சேர்ந் தாரைக் கொல்லி' என்று வள்ளுவர் கூறுவதைப்

படித்துமா வருகிறது சினம்? 'ஆறுவது சினம்' அன்றோ?

முல்லை : (தனக்குத் தானே) நம் நெஞ்சமே நமக்குத் துணையாக இல்லாதபோது துன்பத்திற்குத் துணையாவார் வேறு யார்?

மல்லிகை : (முல்லைக் கொடியின் முகத்தைத் தன் பக்கந் திருப்பி) முல்லை முகம் வாடினால் மல்லிகையின் மலர்ச்சியும் வாடும் என்பதை அறியாயா? என்ன வருத்தம் உனக்கு?

முல்லை : உம், உம், போடி! உனக்கா தெரியாது?

மல்லிகை : நானென்ன எங்கும் நிறைந்த பரம் பொருளோ, உன் உள்ளத்தி லிருப்பதை அறிவதற்கு?

முல்லை : பரம்பொருளாக இருக்கவேண்டுமோ? நட் பிருந்தால் தெரியாதா?

மல்லிகை : அப்படியானால் என் உள்ளத்தை நீ அறிவாயா? இருவருக்கும் ஒரே ஒழுங்குதானே?

முல்லை : (திகைத்து) உண்மைதான். ஆனால், என் உள்ளமே என்னிடத்திலில்லையே! உன் உள்ளம் அதனோடுதானே இருக்கவேண்டும்? அதனால் முடியவில்லை.

மல்லிகை : (புன்முறுவலுடன்) உன் உள்ளத்தை எங்கே அனுப்பினாய்?

முல்லை : (நாணத்துடன்) நானா அனுப்பினேன்? அது தான் அந்தக் கரடுமுரடான வழியிலே முதிரத்தை நாடிப் போய்விட்டது.

(இளவெளிமானும் அழகு நம்பியும் வருகிறார்கள்)

மல்லிகை : (நகைத்து) ஐயோ பாவம்! அப்படியானால் அதைத் தேடிக்கொண்டு நீ போக வேண்டுமென்று சொல்! (திடுக்கிட்டு) அதோ உன் தமையனாரும்... அவரும் வருகிறார்கள்! (இருவரும் எழுந்து நிற்கிறார்கள்)

இளவெளி : (அன்புடன்) முல்லைக்கொடி! உன்னைத் தேடித்தான் வந்தேன்.

முல்லை : (நிலத்தை நோக்கிய வண்ணம்) ஏன் அண்ணா!

இளவெளி : நாளைக்கு முதிரத்துக்குப் போகவேண்டும். நீயும் வருகிறாயா! (அவள் முகத்தை நோக்குகிறான்)

முல்லை : (நாணத்துடன்) நான் ஏன் அண்ணா!

இளவெளி : "மிக அழகிய மலைக் காட்சி! உள்ளத்துக்கும் கண்ணிற்கும் உணர்வூட்டும் காட்சி!" என்கிறார்கள். இவர் நம்மை அழைக்க வந்திருக்கிறார்.

முல்லை : உன் விருப்பப்படியே ஆகட்டும் அண்ணா! இந்த மல்லிகையும் வரலாமோ? (மல்லிகை கடைக்கண்ணால் அழகு நம்பியை நோக்குகிறாள்.)

இளவெளி : (நகைத்து) கையிலிருக்கும் மல்லிகையா? நிற்கிற மல்லிகையா?

அழகு : கையிலிருக்கும் மல்லிகை அங்கும் கிடைக்கும்; இந்த மல்லிகை—நிற்கிற மல்லிகைதான் வர வேண்டும்.

(மல்லிகை நாணத்துடன் தலைகுனிகிறாள்)

## காட்சி 20

**இடம்:** முதிரமலையிலே ஒரு குகையின் வெளிப்புறம் ஒரு பாறை.

**காலம்:** மாலை.

குமணர் தமது உண்மையுருவத்துடன் அமர்ந்திருக்கிறார்.

**குமணர்:** (தாமே) என்ன மக்க ளியல்பு! நிலத்தியல் பால் நீர் திரிவதுபோல நண்பரியல்பால் நல்லோருந் தீய ராகின்றனர். மேலும் நம் மரபிலே இத்தகைய புல்லுருவி தோன்றினதில்லை இதுவரையில்! 'உடன் பிறப்பில்லா உடம்புபாழ்' என்பது பொய்யாயிற்று. "உடன் பிறப்பாலே உடம்பு பாழ்," ஆயிற்று...... அரசென்பது உண்ணவுண்ண இனிக்கும் அமிழ்த மென நினைத்தான் போலும்! அது எனக்கு நஞ் சாயிற் றென்பதனை நாடவில்லையே! மரபின் மதிப்பையும் என்னையும் மாய்க்க வழிதேடுகிறான் மதிவாணன்! (நகைக்கிறார்) குமணா! தம்பிக் கஞ்சி மறைந்த கோழையெனச் சாற்றாரோ நின்னை? உயிரைக் காத்துக்கொள்ள ஓடி மறைந்தவ னென் றுலக முரையாதோ?......உலக மென்பது பெயராலொன்றுதான். ஆனால், ஒரு கோடி யுள்ளங் களை யுடையது! பல நிறங்கொண்ட மீன்களைப் போலப் பிறழ்ந்த நோக்க முடையது! அதற்காக உறுதியை—மரபை—இழக்காதே! நன்னெறியில் செல்ல நாணாதே! (பெருந்தலைச் சாத்தனார் சிறிது தொலைவில் வருகிறார்) யாரோ ஒருவர் வருகிறார். முகத்திலே அறிவுச் சுடர் வீசுகிறது! மெய்யிலே வறுமை குடியிருக்கிறது! புலவர் போலும்! (துக்கத்துடன்) புலமைக்கும் வறுமைக்கும்

பொருந்துவதில்லையோ? அவரை இந் நிலையிலே வரவேற்பதுதான் எப்படி?

"இலனென்னும் எவ்வம் உரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே உள"

என்றாரே வள்ளுவர்? (கண்ணீர் ததும்ப) இல்லை யென்ற சொல்லை எப்படி என் நாவினாலே உரைப்பேன்? (புலவர் நெருங்கிவிட்டார்) வாருங்கள், ஐயா! அமருங்கள்!

பெருந் : (கைகுவித்து) அடிகளே! வணக்கம். (அமர்கிறார்) இந்த மலையின் பெயரென்ன?

குமணர் : முதிரம்.

பெருந் : (மகிழ்வுடன்) குமணர்தாமே இதன் தலைவர்?

குமணர் : (திகைத்து) இதன் பழைய தலைவர் அவர்.

பெருந் : (திகைத்து) பழைய தலைவரா?

குமணர் : (புன்முறுவலுடன்) ஆம். இப்போது அங்கே அதன் பழைய தலைவர் குமணரின் அருமைத் தம்பி —இளங்குமணர்—ஆள்கின்றார். தாங்கள் யாரென்பதை அறியலாமோ?........என்ன மடையன் நான்! சற்று இருங்கள். (குகைக்குள் செல்கிறார்.)

பெருந் : (கால்களைப் பிடித்துக் கொண்டு) அப்பா! என்னவலி! மெய் யிளைத்தது; மன மிளைத்தது! வறுமைமட்டும் இளைக்காதுபோலும்! நான் பெருவழியே வந்தால் என் வறுமை கொடிவழியே குறுக்கில் வந்து விட்டதோ? உம்! ஊழ்வினையே! (சினத்துடன்) 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக உலகியற்றி யான்'. (குமணர் ஒரு

தட்டில் வள்ளிக் கிழங்கும் ஒரு குவளையில் நீரும் கொண்டுவருகிறார்)

குமணர் : (அவற்றை அவரெதிரில் வைத்து) முதலிலே இதையாவது தின்னுங்கள். பிறகு பேசுவோம். (வள்ளிக் கிழங்கைப் புலவர் தின்கிறார்) மெதுவாகத் தின்னுங்கள். தங்களை அறியலாமோ ?

பெருந் : (புன்முறுவலுடன் தின்றுகொண்டே) என்னைப் பார்த்தாலே தெரியவில்லையா ? வறுமையின் அடையாளமே நான் !

குமணர் : (வருத்தத்துடன்) கற்றறிந்த புலவர்போலக் காணப்படுகிறீர்களே ! கல்வி யென்பது வறுமையா ?

பெருந் : ஆம். கல்வியென்பதே வறுமையின் தோழன் ! 'நாவின் கிழத்தி உறைதலாற் சேராளே—பூவின் கிழத்தி புலந்து ?' என்றார் ஒருவர். அதை எப்படி மறுப்பது ? நான் பெருந்தலை என்னும் ஊரினன். சாத்தன் என்னும் பெயரினன்.

குமணர் : (துக்கத்துடன்) புலவர் தலைவரே ! வறுமை புலவரை மட்டுமோ துன்புறுத்தும். யாரையும் துன்புறுத்தும். இருள் எங்கும் ஒன்றுபோலவே கவியும். வெறுந்தரை மட்டுமன்று ! அழகிய காட்சிகளும் மறைதல் இயல்பே ! (புலவர் வள்ளிக் கிழங்கைத் தின்று நீரையும் பருகுகிறார்.)

பெருந் : (சோர்வுடன்) அப்பா ! போதும் பசித் துன்பம்..........., அடிகளே ! தாங்கள் துறவியா யிருந்தும் (ஏப்பம் விடுகிறார்) இல்லறத்தார் செயலை ஏற்றீர்களே ! தங்கள் அருளுக்கு நன்றி. குமணவள்ளல் எங்கே யென்று கூறமாட்டீர்களா ?

குமணர்: அவர் தம் தம்பியிடம் நாட்டை ஒப்பித்து விட்டுத் துறவியாய்விட்டார்.

பெருந்: ஏன்?

குமணர்: ஏனோ? நாட்டை முட்கள் நிறைந்த காட்டைப்போ லெண்ணியிருக்கலாம். 'அற்றது பற்றெனில் உற்றது' துறவு!

பெருந்: (துக்கத்துடன்) தாங்கள் கூறுவது உண்மையானால் என் ஊழ்வினையின் கொடுமையை யென்னென்பேன்?......சாத்தா! உன் உளக்கோட்டை ஆகாயக் கோட்டையாய்விட்டதே! செந்தமிழால் உன் வறுமையைச் சிதைக்க முடியவில்லையே! புவிக்குப் பொறையெனத் தோன்றினை.

குமணர்: (முகம் வாடி) அந்தோ! குமணன் நிலை என்னே! மாளாத செல்வமிருக்கும்போது வள்ளலானான். இப்போது அந்தப் பெயரை வீணே யிழக்கிறான்!

பெருந்: (ஐயத்துடன்) அவர் இருக்குமிடத்தை அறிவீர்களா? கண்ணுற் பார்த்தாவது களிப்படைகிறேன். அவரை நாடிவந்ததாக அறிவியாமலே செல்கிறேன். என் வினைக்கு அவர் என்ன செய்யவியலும்?

குமணர்: அவன் மரபின் மானத்தைக் காத்தற்காக மறைந்தான். எனினும், ஊழ்வினை வேறு வழியிலே அவன் எண்ணத்தைக் குலைக்க முடிவு செய்தது.

பெருந்: தாங்கள் என்ன கூறுகிறீர்களென்றே விளங்கவில்லை! அவருக்குந் தங்களுக்கும் ஏதாவது தொடர்பு உண்டோ?

குமணர்: தொடர்பு உண்டு. உண்மையைக் கூறவேண்டிய நிலை வந்துவிட்டதாற் கூறுகிறேன். அவன் தம்பி அவனைக் கொல்லச் சூழ்ச்சி செய்தான். அதை அறிந்த குமணன் அப்பழி தம்பியைச் சாராதிருக்க மறைந்தான். எனினும், குளிக்கப் போனவன் சேற்றைப் பூசிக்கொண்டதுபோலாயிற்று அவன் நிலை! இப்போது அவன் வள்ளல்களின் மானத்தை மாளச் செய்துவிடுவானென் றஞ்சுகிறேன்.

பெருந்: வள்ளல்களின் மானமேன் மாள்கிறது? அப் பெரியார் வாரி வாரிப் புலவர்களுக் களித்தார். பொருளோடு களிற்றையு மளித்துப் புரவலராக்கினார். தம்பிக்கும் நாட்டை வழங்கி மறைந்தார். அத்தகைய பேரரசர்—வள்ளல்களின் தலைவர்—ஏன் அந்நிலையை அடைகிறார்?

குமணர்: (துக்கத்துடன்) முன்னே வாரிக் கொடுத்தான்! இப்போது அவனை நாடினோர் வறியராய்த் திரும்பல் மாளா இழிவன்றோ! வள்ளல்களின் ஒளியை மழுங்கச் செய்யுமன்றோ?

பெருந்: நான் அவரிடம் செல்லமாட்டேன். அவர் உள்ளத்தைப் புண்படுத்தமாட்டேன். இப்படியே செல்கிறேன். நான் வந்ததை அறிந்தாலன்றோ வருந்துவார்? தாங்களும் அறிவிக்கவேண்டாம்.

குமணர்: (புன்முறுவலுடன்) புலவரே! அது என்னால் இயலாது. ஏனெனில், அவனே தங்களை அறிந்து கொண்டான். தம்பிக்கு மறைந்தாலும் தமிழ் முன்னைக்கு மறைய அவன் விரும்பவில்லை.

பெருந்: (வியப்புடன்) எவ்வாறறிந்தார்?

குமணர்: இதில் வியப்படைவதற் கொன்றுமில்லை. ஏனெனில், அவன் தங்களெதிரிலேயே முன்பின் அறியாத தங்களை ஏமாற்றிக்கொண்டு பிணம்போல் உட்கார்ந்திருக்கிறான்.

பெருந்: ஆ! தாங்களே குமணரா? வள்ளல்களின் தலைவரா? (துக்கத்துடன்) என்னே கொடுமை! அரசே! தங்களை அறிவியாமலே இருந்தால் நன்றாயிருக்கும். இப்போது தங்கள் உள்ளம் எங்ஙனம் வாடுகிறதோ? ஆனால், ஒருவிதத்திலே மகிழ்ச்சி! கண்ணாலே கண்டு மகிழ்ந்தேன். நான் செல்கிறேன்.

குமணர்: (அன்புடன்) இதுவரையிலே தமிழன்னையின் தண்ணருளை யிழவாமலிருந்தேன். இப்போதும் இழக்க விரும்பேன். என்னிடம் உள்ள உயர்ந்த பொருளொன்றை வழங்குவேன்.

பெருந்: அப்பொருள் தங்களிடமே யிருக்கட்டும். வேறெவருக்காவது அளிக்கலாம். தங்கள் ஊனுடலை மறைத்தாலும் புகழுடலால் உலகத்தையே நிறைத்திருக்கிறீர்கள்! தண்ணளியாளரான தங்களுக்கு என்னால் ஏதும் குறைநேரலாகாது.

குமணர்: தங்களை வறிதே மீளச் செய்யேன்.

பெருந்: உண்டியளித்தீர்கள். உங்கள் காட்சியளித்தீர்கள். இன்னும் என்னவேண்டும் எனக்கு?

குமணர்: (புன்முறுவலுடன்) தங்களுடைய உள்ள அமைதிக்கு மகிழ்கிறேன். எனினும் தங்கள் வறுமையையொழிக்க மனங்கொண்டேன். தாங்கள் அதற்கு இணங்கினாற் பெருமகிழ்வு கொள்வேன்.

பெருந்: தங்கள் மகிழ்ச்சி என் மகிழ்ச்சி.

குமணர்: ஆனல், இதை என் கொடையென்று சொல்ல முடியாது. தங்கள் கொடையென்றே சொல்ல வேண்டும்.

பெருந்: எப்படி? அந்த நிலை...

குமணர்: (மகிழ்வுடன்) இந்த வாள் வந்திருக்கிறது. (தம் அருகிலேயிருந்த வாளை எடுத்து) இவ்வாளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

பெருந்: (வியப்புடன்) இந்த வாளேன் எனக்கு?...... ஓ! இப்போது தெரிகிறது?

குமணர்: என்ன தெரிகிறது?

பெருந்: இந்த வாளேந்திச் சென்று தங்கள் பகையை அழிக்கவேண்டும். செல்கிறேன். (எழுகிருர்)

குமணர்: எங்கே எழுகிறீர்? அமருங்கள்.

பெருந்: (வியப்புடன்) ஏன்? தாங்கள் தங்கள் தம்பியை—தம்பியாயினும் இத்தகைய நிலைக்குத் தங்களைக் கொண்டுவந்த பகைவனை—அழிக்க விரும்புவது இயற்கையே! தங்களுக்காக அல்லாவிடினும் தமிழுக்காக அரசுரிமைபெற விழைதல் எம்போலியர்க்குப் பெருமகிழ்வே. நான் சென்று நாட்டையே உணர்வுபெறச் செய்து தங்களை மீண்டும் அரசராக்குவேன்.

குமணர்: (புன்முறுவலுடன்) அவ்வாறு செய்தல் என் வேண்டுகோளன்று. என் பகைவன் இங்கேயே யிருக்கிறன். ஆனல், தாங்கள் தயங்காமல் அப் பகைவனை வீழ்த்தவேண்டும்.

பெருந்: யார் அப்பகைவன்?

குமணர்: (முகவாட்டத்துடன்) அந்தோ! நான் கூறத் தான் வேண்டும். புலவரேறே! என் தலையைக் கொய்து சென்று என் தம்பியின் கையிலளித்தால் வேண்டும் பொருளை மிக மகிழ்வுடன் அளிப்பான். அவன் அவ்வாறு அறிக்கை விட்டிருக்கிறான். அஞ்சாதீர்!

பெருந்: (நடுக்கத்துடன் கைவாள் சோர) அந்தோ! (மூர்ச்சிக்கிறார்)

குமணர்: அடடா! (மூர்ச்சையைத் தெளிவிக்கிறார்)

பெருந்: (மெதுவாக எழுந்து) என்னே கொடுமை! என் வருகை தங்கள் உள்ளத்தைப் பிளந்தது. இப்போது தாங்களே வாளையளித்துத் தங்கள் உயிரையே பிளக்கச் சொல்கிறீர்கள். அரசே! என்னையும் இக் கொடிய செயலில் ஏவலாமா? வறுமையின் கொடுமையே இந்நிலைக்கு என்னைக் கொண்டுவந்ததென்று நினைக்கிறேன். ஆயிரம் பிறப்பெடுத்து வறுமை நரகிலேயே வருந்திக் கிடப்பினும் மகிழ்வேன். இந் நிலையிலே மட்டும்—என் அறிவைப் பிளக்கும் இச் செயல் புரியும் நிலையிலே மட்டும்—ஒரு நொடியும் இரேன். தங்கள் தலையைக் கொய்வதா? தளராத கொடையைக் கொய்வதா? தண்ணிய செந்தமிழ்க் கவிதை படருங் கற்பகத்தைக் கொய்வதா? அவ்வாறு புண்ணியத்தைக் கொய்யும் புன்மையைச் செய்ய என்னை ஏவுகிறீர்களே!......என்னைச் சோதனை செய்யாதீர்கள். தங்கள் தம்பியின் கருத்தை முற்றுவிக்க வந்தவனல்லேன். எனக்குத் தினையளவும் அந் நோக்கம் தெரியாது! (கண்ணீர் விடுகிறார்)

குமணர் : (அன்புடன்) வருந்தவேண்டாம் அறிஞரே! என் நோக்கம் இரண்டு. ஒன்று, தங்களுக்குப் பொருள் வழங்குவது. மற்றொன்று வள்ளுவர் வாக்கின்படி நடப்பது.

பெருந் : என்ன கூறுகிறார் வள்ளுவர்? இக் கொடுமையையா?

குமணர் :

"சாதலின் இன்னாத தில்லை யினிததூஉம்
ஈதல் இயையாக் கடை"

என்று கூறவில்லையா? 'கொடுக்க முடியாமல் இருப்பதைவிட இறப்பதே இனிது,' என அவர் கூறியதை மெய்ப்பிப்பதுதான் என் நோக்கம். தமிழுக்கு இதுவரையிற் பொருள்களைக் கொடுத்து வந்தேன். இப்போது என்னைவிடச் சிறந்த பொருளில்லாமையாலே என்னையே கொடுக்க முற்பட்டேன். இந்த நோக்கம் கொடியது என்கிறீர்களா? அதை முற்றுவிக்கும் நீங்கள் எனக்கு வழங்கும் அக் கொடை எவ்வளவு இனிது என உணர்ந்தீர்களா?

பெருந் : (வியப்புடன்) பெருஞ்சித்திரனாரே எளியேனைத் தங்களிடம் ஆற்றுப்படுத்தினார். அவர் கூறியதைக் கேட்டதைவிடக் கண்கொண்டு காணும்—நேரே அறியும்—தங்கள் நிலை மேலும் மேலும் உயர்ந்ததாயிருக்கிறதே. (குமணர் புன்முறுவலுடன் முகத்தை வேறுபக்கந் திருப்புகிறார்) இத்தகைய தங்கள் வாழ்வை—ஊனுடலுடன் உலாவும் வாழ்வை—ஒழிக்கச் சிறிதும் சம்மதியேன் அரசே!

குமணர்: (தலை நிமிர்ந்து) என் ஊழ்வினை கொடிது! எனினும், தங்களுக்கொன்றும் உதவாமல் வாழ விரும்பேன். இனிமேல் (பெருமூச்சு விட்டு) தற்கொலைதான் தக்கது!

பெருந்: (பதை பதைப்புடன் வாளைக் கையிலெடுத்துக் கொண்டு) எனக்கு வரமொன் றளிக்கவேண்டும்.

குமணர்: என்ன? என் உயிரைவிடச் சிறந்ததா அது?

பெருந்: ஆம்.

குமணர்: தர முடியுமானால் தருகிறேன்.

பெருந்: நன்றாய்த் தரமுடியும். நான் திரும்பி வரும் வரையில் தற்கொலை செய்துகொள்ளலாகாது. இவ் வரத்தை யளித்தால், ஏதோ இழிவு என்றீர்களே; அதுவும் தங்களுக்கு வராது; எனக்கு வரம் அளித்ததனால்!

குமணர்: (திகைத்து) என்ன செய்யப்போகிறீர்கள்?

பெருந்: (எழுந்து) வந்து கூறுகிறேன். தாங்கள்மட்டும் தற்கொலை செய்துகொள்ளக்கூடாது.

குமணர்: எப்படியோ, என்னைக் கட்டுப்படுத்தி விட்டீர்கள்! தங்கள் சூழ்ச்சிக்கு மெச்சுகிறேன்.

பெருந்: (அன்புடன்) வருகிறேன். (செல்கிறார்)

குமணர்: (திகைத்து) என் நிலையை என்னென்பேன்! இறைவா!

## காட்சி 21

*இடம்—முதிர மலைச்சாரலிலே ஒரு வேங்கை மரத்தின் அரு கிலே ஒரு மேடை.*

காலம்—*காலை.*

*அழகுநம்பியும், மல்லிகையும் வருகிறார்கள்.*

மல்லிகை: (*சோர்வுடன்*) அடியம்மா! இனி என்னால் ஓரடியும் எடுத்துவைக்க முடியாது. என்ன கரடு முரடான வழி! மேலும்! முழங்கால் உயரத்திலே யிருந்து கீழே சரிவான பாறையிலே இறங்க வேண்டும்! நெருங்கிய செங்குத்தான பாறையிலே —ஓரடிகூட அகலமில்லை—செல்ல வேண்டும்! நினைத்தாலும் உள்ளம் நடுங்குகிறது.

அழகு: (*புன்முறுவலுடன்*) உன் உள்ளம் நடுங்கியதை அறியேன். உன் கால்கள் நடுங்கியதையும் மெய் வியர்த்ததையும் பார்த்தபோது......(*நகைக்கிறான்*)

மல்லிகை: (*நாணத்துடன்*) நகைக்கமாட்டீர்களா? என் நடுக்கம் உங்களுக்கு........

அழகு: இன்பமாகவே யிருந்தது.

மல்லிகை: ஏனோ?

அழகு: (*புன்முறுவலுடன்*) உன்னைத் தூக்கிச் செல்லும் பேறு கிடைத்தது இன்பமன்றோ? (*மல்லிகை தலை குனிகிறாள்*) இது கைம்மாறுதானே? என் உள்ளத் தரசியாகிய நீ என் கரடு முரடான வாழ்க் கைப் பாதையிலே நான் இன்பத்துடன் செல்ல உன் காதலைக் கைகொடுக்கச் செய்தாய்!

மல்லிகை: (*நாணத்துடன்*) போதுமே. (*மேடைமேல் அமர்கிறாள். அழகுநம்பியும் அருகிலே அமர்கிறான்*)

அழகு: இந்த மலைநாட்டுச் சிறுமிகள் மான்குட்டி போலத் துள்ளி விளையாடுவார்கள் இங்கே. நீயோ நடுங்குகிறாய்!

மல்லிகை: ஆடவர்களே இப்படித்தான். பெண்களின் நிலைதெரியாமல் நகையாடுவார்கள். இல்லாவிட்டால் என் அன்னையும் மற்றவர்களும் ஐயுறுமாறு விட்டுவிட்டிருப்பீர்களா!

அழகு: (திகைத்து) ஏன் ஐயமுற்றார்கள்?

மல்லிகை: ஏன் ஐயமுற மாட்டார்கள்? அன்புடையவர் போலக் கொஞ்சிக் குலாவினீர்கள்! பிரியின் தரியேனென்றீர்கள்! ஆணையுமிட்டீர்கள்! பிரிந்து வந்த பிறகு, மறந்துவிட்டீர்கள்! இதுதான் ஆடவர் அறமென்று அறியாத நான் வருவார் வருவாரென்று வழிமேல் விழிவைத்து ஏங்கிக் கிடப்பேன்.

அழகு: (அன்புடன்) அடடா!

மல்லிகை: (பிணங்கி) அடடா என்றால் வந்துவிட்டதா எனக்கு மகிழ்ச்சி? ஒவ்வொரு நாளும் ஒவ்வோராண்டாக என் உயிரையே வாட்டியெடுக்கும். பாழாய்ப்போன என்னுள்ளம் வேறு பிரிந்து— இந்த ஏற்றிழிவான மலைவழியிலே நடக்கக் காதல் கொண்டு—ஓடி வந்துவிடும். உணவோ உறக்கமோ உலாவலோ உரையாடலோ ஒன்றும் ஒத்துக் கொள்ளாமல் ஒதுங்கிக் கிடப்பேன்.

அழகு: (புன்முறுவலுடன்) அப்புறம்?

மல்லிகை: (நாணத்துடன்) நினைத்தாலும் நாணமாக இருக்கிறது. மணலிலே உட்கார்ந்து தாங்கள் வருவீர்களா வரமாட்டீர்களா என்று சகுனம் பார்ப்பேன்.

அழகு : எப்படி?

மல்லிகை : கண்ணை மூடிக்கொண்டு மணலிலே ஒரு சுழி சுழித்துவிட்டு விழித்துப் பார்ப்பேன். என் பேதைமையை அறிந்த—எளிய நிலையை உணர்ந்த—அந்தக் கூடற்சுழியும் கூடியிராது. அப்போது, அப்படியே கண்ணீர் வழிந்து கூடற்சுழியை நனைக்கும். இப்படியெல்லாம் (பெருமூச்சுவிட்டு) இருந்தால் ஏன் ஐயமுறமாட்டார்கள்? எந்த உணர்ச்சியற்ற கட்டையும் ஐயப்படுமே!

அழகு : (பெருமூச்சுவிட்டு) உம். உன் சுடுகணைகளை விட்டு என் சிந்தனைகளைப் பிளந்துவிட்டாயே! என் நிலையை—அடிக்கடி உன்னைப் பார்க்க வரமுடியாத நிலையை—நீ எப்படி அறிவாய்? இங்கே உள்ள அரசியல் குழப்பத்திலே அமிழ்ந்துதான் உன்னை வந்து பார்க்கமுடியாமல் வாடிக் கிடந்தேன். உன் அழகிய கண்களின் ஒளியைக் காணுமல் என் வாழ்க்கை நெறியே இருண்டு கிடந்தது. எனினும், பழக்கமாகிய ஊன்றுகோல் கொண்டுதான் உலாவினேன். கொஞ்சம் ஓய்ந்ததுந்தான் ஓடிவந்தேனே! இனி உன்னைப் பிரிவதும் உன் சுடுகணைகளாலே வாடுவதும் நேராமலிருக்குமாக.

மல்லிகை : (அன்புடன் அவன் கரங்களைப்பற்றி) 'மத்தளத்திற்கு இருபுறமும் இடி' என்பதேபோல என் பிரிவு ஒருபக்கமும் அரசியல் ஒரு பக்கமுமாகத் தங்களை வருத்துவது இயற்கையே! அதோ பாருங்கள்! அரசரும் அரசியும் வருகிறுர்கள்! நாம் வேறுபுறம் செல்வோம்.

அழகு : (எழுந்து) ஆம். அவர்களுடைய இன்ப நெறியிலே நம் அடிச்சுவடும் தடையாயிருக்கக்கூடாது

மல்லிகை : (புன்முறுவலுடன்) அன்று; நம் இன்ப நெறியின்கண்ணே அவர்களுடைய அடிச்சுவடு தடையாகலாகாது!

(இருவரும் நகைத்துக்கொண்டே செல்கிறார்கள். மற்றொருபுறம் இருந்து இளங்குமணனும் முல்லைக்கொடியும் வருகிறார்கள)

முல்லை : (வியப்புடன்) அம்மம்ம! என்னென்ன புதிய மலர்கள்!

இளங் : அவற்றின் பெயர்களெல்லாம் நினைவிலுண்டோ?

முல்லை : ஒன்றும் நினைவிலில்லை. இன்னொருமுறை கூறுங்கள்.

இளங் : இந்த மேடையிலே அமர்வோம். (இருவரும் அமர்கிறார்கள். தன் மேலாடையிலிருந்த மலர்களை யெல்லாம் மேடையின் மேலே முல்லைக்கொடி பரப்புகிறாள்)

முல்லை : (கையில் நாரெடுத்துக்கொண்டு) தாங்கள் ஒவ்வொரு மலராக எடுத்துப் பெயரைக் கூறிக்கொடுங்கள். நான் தொடுக்கிறேன்.

இளங் : (புன்முறுவலுடன்) இது குறிஞ்சி!...இது வெட்சி!...இது செம்மணிப்பூ!...இது மூங்கிற்பூ!... இது எறுழம்பூ!...

முல்லை : (வாங்கி வாங்கித் தொடுத்துக்கொண்டே) உம். விரைவாக எடுங்கள்.

இளங் : (எடுத்துக் கொடுத்துக்கொண்டே) பயினிப்பூ, வாணிப்பூ, பச்சிலைப்பூ; திலக மலர், காட்டுமல்லிகை மலர்; கல்லிற் படரும் முல்லைமலர்; (முல்லைக்கொடி நகைக்கிறுள்) ஏன் நகைக்கிறாய்?

முல்லை : ஒன்றுமில்லை ; எடுங்கள்.

இளங் : ஓ! அறிந்துகொண்டேனே! மலையிலே படர வந்த முல்லைக்கொடியாகிய உன்னை நினைத்துக் கொண்டாய். சரிதானே?

முல்லை : (நாணத்துடன்) ஆமாம், எடுங்கள்.

இளங் : பிடவம், செங்கருங்காலி, செம்முல்லை, ஞாழல், மௌவல், கொடிமுல்லை, பவழக்கால் மல்லிகை, சுரபுன்னை, சாதி, சிறுசெங்குரலி, வெண்கோடல் காஞ்சி, ஓமை, மரவம், தணக்கு, அரும்பு, பகன்றை, பலாசு, அசோகு, வஞ்சி, பிச்சி, வேங்கை, (அவளைத் தொட்டு) கொடிமுல்லை!

முல்லை : (நகைத்து) கொடிமுல்லையை எடுத்துத் தொடுக்க முடியவில்லையே! (மாலையையெடுத்துப் பிடித்து) பார்த்தீர்களா எவ்வளவு அழகிய மலர் மாலை! என் ஆயுளில் இத்துணை அழகிய மலர் மாலையைத் தொடுத்ததேயில்லை!

இளங் : (எழுந்து நின்று அவளை நோக்கி) ஆம். நீயும் பல நிறமணிப் பணிகளாலும் பலநிறப் பூ வேலை செய்த ஆடையாலும் பன்னிற மலர்மாலையாக இருக்கிறாய்! உன் கையிலும் பன்னிற மலர்மாலை இருக்கிறது. இந்த இரண்டையும் பார்த்த என் கண்களிலும் மயக்கமான மாலை விழுந்துவிட்டது!

முல்லை : (நாணத்துடன்) ஓ! அப்படியானால் இது மாலைக்குரிய காலந்தானென்று உறுதியாய்க் கூற லாம். (இருவரும் நகைக்கிறார்கள்)

இளங் : வேங்கை மரத்தினடியிலே வீற்றிருக்கும்—வள்ளியைப்போல அமர்ந்திருக்கும்—உன்னைப் பார்த்தால்......

முல்லை : போதும், நீங்களும் புலவர்களாகி விட்டீர்களா?

இளங் : நானென்ன, எந்தப் பேதையும் கவியாகி விடுவானே! (அருகில் அமர்கிறான்)

முல்லை : நான் வள்ளியானால்(மாலையை அருகில் வைத்து) உங்கள் வழிபடு தெய்வமாகத்தானே வணங்க வேண்டும்?

இளங் : (காதலுடன்) அதிலென்ன ஐயம்?

முல்லை : (நகைத்து) எனக்கு அந்த இடம் வேண்டாம். அப்புறம் தங்கள் அச்சத்துடன்கூடிய வழிபாட்டைத் தவிரக் காதலின் நிழலையும் பெற முடியாது. (சிந்தனையுடன்) தாங்கள் என்னை வள்ளி என்றவுடன் 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்ற அப் பொன்மொழி நினைவிலே தோன்றுகிறது.

இளங் : ஏன்?

முல்லை : (நாணத்துடன்) எல்லாம் தங்களால் நேர்ந்தது தான். நீங்கள் ஆட்டுவித்தீர்கள்; நான் ஆடினேன்!

இளங் : இப்பழி வேறா?

முல்லை : ஆம்; அதுவும் பெண்பழி யன்றோ?

(நகைக்கிறாள்)

இளங் : சரி, கூறு. உன் கண்களின் கவர்ச்சியிலே பட்ட நான் எப்பழியையும் ஏற்றுத்தானாக வேண்டும்.

முல்லை : (நிலத்தை நோக்கியவாறு) தங்களை முதன் முதற் கண்டபிறகு என் உள்ளமும் உணர்வும்

தங்களையே நாடிநின்றன. அதனால், ஒரே இடத்தி லேயே அடைந்து கிடப்பேன். அடிக்கடி தனி மையை விரும்புவேன். உணவு முதலியனவும் இன்றி வாடிவிட்டேன். பிரிவினும் சுடுமோ பெருந்தீ! என் அண்ணி என் நிலையைப் பார்த்து அச்சமுற்றாள். ஏதோ தெய்வக் குற்றமாக இருக்குமென்று கட்டுவிச்சியைக் கூப்பிட்டுக் குறி கேட்டாள்.

இளங் : அடடா! இது வேறா?

முல்லை : என்னை உட்காரவைத்தார்கள். கட்டுவிச்சி கொஞ்சம் நெல் கொண்டுவரச் சொல்லி எண்ணிப் பார்த்தாள். ஏதேதோ தெய்வங்களை யெல்லாம் அழைத்தாள். கடைசியிலே...தெய்வக்கோளாறு என்றுதான் சொன்னாள்.

(இளவெளிமான் வேங்கைமரத்தின் பின்னே வந்து நிற்கிறான்)

இளங் : எந்தத் தெய்வமாம்?

முல்லை : (புன்முறுவலுடன்) இந்த மலைநாட்டுத் தெய்வந் தானாம்.

இளங் : அதன் பெயர்?

முல்லை : இளங்குமரன் என்றாள்.

இளங் : கட்டுவிச்சி கூறியது உண்மையே. இளங்கும ரன் என்றால் முருகனுக்குச் சிறப்புப் பெயரானா லும் இளமை பொருந்திய வாலிபன் என்றுதானே பொருள். ஆகவே, காதல் நோய் என்று கூறி யிருக்கிறாள்.

முல்லை: (முகத்தைத் திருப்பிக்கொண்டு) அப்படியும் பொருள் செய்யலாமென்பதை அப்புறந்தான் நினைத்தேன். ஆனாலும், அந்தப் பொல்லாத மல்லிகை யிருக்கிறாளே; அவள் உண்மையைக் கூறிவிட்டாள்.

இளங்: எப்படி?

முல்லை: அந்தக் கட்டுவிச்சிக்கு ஒலி வேறுபாடு தெரிய வில்லையாம். இளங்குமரன் என்பதிலே ரகரத்திற் குப் பதிலாக ணகரத்தைப் போட்டுக் கூறவேண்டு மாம். இப்படித் துணிந்து ஒரு போடுபோட்டாள்.

இளங்: (நகைத்து) ஏன் உண்மையைக் கூறினாள்?

முல்லை: எனக்குக்கூட அப்போது நாணமாய்த்தான் இருந்தது. எனினும் மல்லிகை கூறியதைப்பார்த் தால் அதுதான் சரியென்று பட்டது.

இளங்: ஏன்?

முல்லை: உண்மையைக் கூறுவிட்டால் முருகனுக்கு வெறியாடல் தொடங்கி விடுவார்கள். வினைக ஒரு ஆட்டின் உயிரை வேலன் ஒழிப்பான். இவ்வளவும் செய்வதால் முருகனுக்கும் வேலனுக்கும் அறியா மைப் பட்டமே மிகுதியாகும். என் நோய் என்னவோ...... (நாணுகிறாள்)

இளங்: (புன்முறுவலுடன்) தணியாதுதான். (இள வெளிமான் எதிரில் வருகிறான். முல்லைக்கொடி நாணத்துடன் எழுந்து நிற்கிறாள்)

இளவெளி: நான் அப்போது இதை அறியேன். (புன் முறுவலுடன்) அம்மா முல்லைக்கொடி! (மாலையை எடுத்து அவள் கையில் கொடுத்து) நீ இதை இந்த

இளங்குமரனார் — இல்லை — இல்லை—இளங்குமணனார் கழுத்திலே அணிவாயாக. (இருவர் கைகளையும் ஒன்று சேர்க்கிறான். முல்லைக்கொடி அம்மாலையை இளங்குமணன் கழுத்திலேயிடுகிறாள். அழகுநம்பியும் மல்லிகையும் வருகிறார்கள்)

அழகு : (மகிழ்வுடன் நகைத்து) எங்களுக்கும் அக்காட்சியிலே பங்கு வேண்டும்.

இளவெளி : உம். இவர்களும் வருகிறார்களா? இங்கே வாரும் அழகரே! நீரும் அந்த மல்லிகையுமாய் இவ் வேங்கையின் அடியிலே அவர்களருகில் நில்லுங்கள். (அவர்களும், நிற்கிறார்கள், மல்லிகையின் கையையும் அழகுநம்பியின் கையையும் இளவெளிமான் ஒன்று சேர்க்கிறான்) நால்வரும் அப்படியே நில்லுங்கள்! (வேங்கைமரத்தை ஆட்டுகிறான். வேங்கை மலர்கள் அவர்கள்மேலே பெய்கின்றன)

---

## காட்சி 22

இடம்—முதிரத்திலே ஒரு மாந்தோப்பு.

காலம்—நண்பகல்.

பலர் அமர்ந்திருக்கிறார்கள். (சந்தனம், கருங்காலி, நாகன், எயினன், வேலன் ஆகியோர் முதன்மையானவர்கள்.)

வேலன் : அப்படியானாற் குமணர் இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க முடியாதா?

சந்தனம் : முடியாது. (வருத்தத்துடன்) குளிர்ந்த நீரோடை இருக்குமிடந் தெரியாது. இப் பாலையைச் சுற்றித்தான் நெருப்பாறு வேறு ஓடுகிறதே! இந்த நெருப்பாறு அந்த மலரோடை வற்றும்படி

பாயவும் தொடங்கியிருக்கிறது! குமணரைக் கொன்று தலையைக் கொண்டுவந்தாற் பரிசு கிடைக்குமாம்!

கருங்காலி: (சினத்துடன்) அண்ணன் அரசு கொடுத்தார். தம்பி அதற்கு நன்றியாக அவரைக் கொல்லப் பரிசு கொடுக்கிறார்! சீ! என்ன காலமடா இது?

எயினன்: (துடிதுடித்து) காலமா? சோம்பலாயுங் கோழையாயும் இருந்தால் எல்லாக் காலமுந்தான் வரும். நன்றியைக் கொல்பவன்—தன் உடலையே சிதைப்பவன்—நம்மை ஆள்வதுதான் எப்படி?

நாகன்: ஓடிப்போனவரைக் கொல்ல நினைக்கிறானே! அவனே அவர் ஓடவுங் காரணமாயிருப்பானோ?

கருங்காலி: இருந்தாலும் இருக்கலாம்! எப்படியோ நாடு உயிரிழந்த நாடாய்விட்டது. நம்முடைய உள்ளமும் கண்ணீர் விடக்கூடாது, நினைக்கக் கூடாது என்று தடை விதிப்பார்கள்; வாய்க்குப் பூட்டிட்ட மறவர்கள்!

வேலன்: இந்த நிலை இன்னும் சிலநாள் நீடித்திருந்தால், நெருப்பு வைக்காமலே குடிகளின் உள்ளம் பற்றிக் கொள்ளும் போலும்!

சந்தனம்: ஆம், என்ன செய்வது? எவ்வளவு சிக்கனமாகச் செலவு செய்தாலும் வரவு பற்றாதவனுடைய நிலையாய்விட்டது நம் நிலை. மனக்கொதிப்பு எல்லையைக் கடக்கிறது.

எயினன்: கடல் நீரைக் கொண்டணைத்தாலும் தணியாதப்பா கொழுந்துவிட்டெரியும் இந்த நெருப்பு!

வேலன் : வீடுபற்றி எரியும்போது வெளியிலே தீக் கொழுந்து தெரியாமலிருக்க முடியுமா? அந்த அமைச்சர் என்ன செய்கிறார்? இந்த நெருப்பு அவரைச் சுடவில்லையா?

நாகன் : அரசர் இருக்கும்போது தேனொழுகப் பேசினார்! அன்பொழுக நடித்தார்! இப்போது அரசரை மறந்தார்.

சந்தனம் : அப்படிச் சொல்லாதே நாகா! அமைச்சர் நீறுபூத்த நெருப்பைப் போன்றவர்.

நாகன் : அப்படியானால் இந்தச் சந்தனந்தான் அவ்ரைக் கிளரி விடட்டுமே!

எயினன் : சந்தனமா நெருப்பைக் கிளரவேண்டும்! அவரென்ன. உயிரில்லாத மரக்கட்டையா? (சினத்துடன்) உயிரில்லாத உடல்போல நாடு இருப்பதையும் அந்த இருவரும் இப்போதைய அரசரும் அவர் தோழரும்—அந்த உடலையும் கொளுத்த முயல்வதையும் அவர் கண்களறியும்!

வேலன் : ஆம். நம் வாய் சொல்லாத—சொல்லிமுடியாத—இந்த நாட்டின் வெந்துயர் நிலையைப் பார்க்கும்போது எந்த உணர்ச்சியற்ற பிண்டந்தான் உணராது? காற்றையிழந்த உயிர்போல் மூர்ச்சையுற்றிருக்கும்—பொலிவற்ற ஓவியம்போல இருக்கும்—இந்த நாட்டைப் பார்க்காமலா இருப்பார்?

(பெருந்தலைச் சாத்தனார் வருகிறார்)

எயினன் : அதோ யாரோ வருகிறார். பேச்சை அடக்குங்கள். (பெருந்தலைச் சாத்தனார் வந்து ஒரு பக்கமாக அமர்கிறார்) ஐயா! தாங்கள் யார்?

பெருந் : (களைப்புடன்) நான் ஒரு புலவன். இதுதானே முதிரம்? அப்பா! என்ன களைப்பு!

எயினன் : இதுதான் முதிரம். தங்களுக்கு என்ன வேண்டும்?

பெருந் : உங்கள் அரசர் குமணரைப் பார்க்க வந்தேன். இப்போது பார்க்க முடியுமா?

எயினன் : (முகம் வாடி) இந்த நகரத்தைப் பார்த்தால்—இக் கூட்டத்தையே பாருங்கள்—எப்படி யிருக்கிறது?

பெருந் : ஆம். அதைப்பற்றியுங் கேட்கவேண்டுமென நினைத்தேன். ஏன் இவ்வாறு சோர்வுற்றிருக்கிறது?

எயினன் : (ஏக்கத்துடன்) புலவர்களை ஆதரிக்கும் நலமுடைய நல்லரசரை யிழந்த—குமண வள்ளலை யிழந்த—தமிழன்னையின் தவப் புதல்வரை யிழந்த—நாடு எப்படியிருக்கும்?

பெருந் : (வாட்டமுற்று) அவர் எங்கே?

வேலன் : (கண்கலங்க) இந் நாட்டை யிருளாக்கிவிட்டு, அப் பேரொளி ஞாயிறு மறைந்த காரணம் இறைவன் ஒருவனுக்கே தெரியும்! துறவு பூண்டாரென்கிருர்கள். ஆனுல்,.........

எயினன் : ஆனுல் கீனுல் வேண்டாமப்பா! ஏன் பெரிய பேச்சு? மனத்திலுள்ளதை வெளியிடவும் அச்சமாகத்தானே யிருக்கிறது?

கருங்காலி : (கொதிப்புடன்) என்ன அண்ணே அச்சம்? கடல் பொங்குகிறபோது கையை நீட்டித் தடை செய்யமுடியுமா? அணையைத்தான் ஆக்கமுடியுமா?

இப்போதிருக்கும் அரசும் ஆலும் நம் வெறுப்புத் தீயிலே வெந்து சாம்பலாக வேண்டாமா ?

நாகன் : ஆம். அரசியலிலே கனிந்த அண்ணலை ஓட்டி விட்டு, அரிச்சுவடியும் அறியாத பேதை ஆள்வதா நாட்டை? ஓடின அண்ணலைக் கொல்லப் பரிசளிக்கும் உத்தமன் குடிகளைக் குளிர ஆளமாட்டானே? (சினத்துடன்) பசுக் கூட்டத்திற்குப் புலி அரசன்! அரசில்லாமல் அல்லலுறினும் நன்றே! "கொடுங் கோல் மன்னன் வாழும் நாட்டிற் கடும்புலி வாழுங் காடு நன்றே."

எல்லோரும் : ஆம்! ஆம்! ஒழிக இவ் வரசு !!

பெருந் : ஒரு சிறு வேண்டுகோள். இவ்வளவு வெறுப்புடைய நீங்கள் ஒருமுகமாக ஒருவர் தலைமையிலே சென்று, அரசரிடம் உங்கள் வெறுப்பை அறிவித்தால் என்ன? அரசர் ஒத்துவராவிட்டால் வேறு நடவடிக்கை எடுக்க அது வழிகாட்டும்.

வேலன் : (நினைவுடன்) ஆம். நீங்கள் கூறுவது மிகவும் நன்று. இப்போதே அமைச்சரிடம் செல்வோம். அவரை அழைத்துக்கொண்டு சென்று அவர் மூலமாக அரசரிடம் நம் கருத்தை அறைவோம்.

எல்லோரும் : நன்று, நன்று.

பெருந் : நான் இக் குழப்பமெல்லாம் அடங்கின பிறகு தான், குமணரைக் காணவேண்டும் போலும்.

வேலன் : அப்படித்தான் செய்யுங்கள்.

---

## காட்சி 23

இடம்: இளங்குமணன் அரண்மனை.

காலம்: மாலை.

*இளங்குமணன் சிந்தனையுடன் உலாவுகிருன். அழகுநம்பி அமர்ந்திருக்கிருன்.*

அழகு: என்ன உளக் கலக்கம்? அரசே! அழைத்தீர்கள்; வந்தேன்! ஒன்றும் உரையாமல் உலாவுகிறீர்கள். கவலைக்குக் காரணத்தைக் கூறிஞற் கடிதே முடிக்கக் காத்திருக்கிறேன். (*இளங்குமணன் பேசாமலிருக்கிருன்*) காதலிலே ஏதாவது கோளாறுண்டோ? திடீர் மாறுதலேன்?

இளங்: (*இருக்கையிலே சென்று அமர்ந்து*) என் உள்ளம் அமைதியிலிருந்து வழுக்கியது! நண்பா!......நாம் ஆட்சியேற்று எவ்வளவு காலமாயிற்று?

அழகு: ஏன் அந்த நினைவு? ஒரு திங்களிருக்கலாம்.

இளங்: நாடு எப்படி யிருக்கிறது?

அழகு: (*நகைத்து*) இதைத்தாஞ நினைத்துக் கலங்குகிறீர்கள்? கையில் தேன் கிண்ணமிருக்கும்போது கசப்பு மருந்தை நினைத்துக்கொண்டீர்களே! சிறிது குழப்பமிருக்கத்தான் செய்யும். நான் பார்த்துக் கொள்கிறேன் அதனை. தாங்கள் விருந்தினர்களோடு இனிமையாகப் பொழுது போக்குங்கள்.

இளங்: (*நகைத்து*) அரண்மனையைச் சுற்றித் தீக் கொழுந்து, நாவை நீட்டிப் பார்க்கும்போது உல்லாசமாக உறங்குகிறவன் நீதான்! நாட்டின் கொந்தளிப்பை மிக எளிதாகக் கொசுக்கடிபோல நினைத்துக்கொண்டாயே!

அழகு : எரிவதைப் பிடுங்கிவிட்டால் கொதிப்பது நின்றுவிடுகிறது ! என் கருத்துப்படி நடப்பீர்களா ?

இளங் : இதுவரையில் நடக்காமலிருந்தேனே ? உன்னுடன் வந்து உலாவித்தான் படுகுழியில் விழுந்தேனே !

அழகு : (முகம் வேறுபட்டு) தங்கள் உள்ள மாறுதலுக்குக் காரணமென்ன ? (கண் கலங்க) தங்களை உயர்ந்த மலைச்சிகரத்திலே இன்ப வீட்டிலே இருத்த உண்மையாகப் பாடுபட்டேன் ! இப்போதும் அந்த நெறியிலே எனக்கு வரும் இடையூறுகள் பல. அவற்றையெல்லாம் ஏற்றுத் தங்கள்மேல் எந்தத் துன்பக் காற்றும் வீசாமல் என் உள்ளத்திலே வைத்துக் காத்துவருகிறேன். சில இடையூறுகள் நேர்ந்தால் அஞ்சி விலகுவதோ வீரம் ?

"இடுக்கண் வருங்கால் நகுக ! அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்."

என்று பெரியார் கூறுவதை அறியமாட்டீர்களா ? தேன்கூட்டைப் பெற வேண்டுமானால் ஈக்களின் கடிக்கு அஞ்சலுண்டோ ?

இளங் : (துக்கத்துடன் எழுந்து அழகுநம்பியின் கைகளைப் பற்றி) நண்பா ! உன் உண்மையை நான் எப்போதும் ஐயுறவில்லை. என் கண்கள் நீயே ! எனினும் நாம் செல்லும் நெறியிலே உள்ள இடையூற்றை நினையாமலும் மதிக்காமலும் இருப்பது எப்படி ? தேனைப் பெற விரும்புவோன் தேனீக் கடியைத் தடுக்காமலே எடுப்பதெப்படி ?

அழகு : (எழுந்து) நாம் பெரிய நிலையை அடைய முயன்றோம். கொம்புத்தேனை விரும்பிய முடவன்

வாயிலே அதுதானே ஒழுகியது. இத்துணை எளி தாக விரும்பியதை அடைந்த நாம் நாட்டின் குமுறலை அடக்கமுடியாதா? இதற்குக் காரண மான ஒருவரை—முடிநாகராயரைச்—சிறைப் படுத்திவிட்டால் அடங்கிவிடும்.

**இளங்:** (வெறுப்பாக நகைத்து) நன்று! சூழ்ந்திருக்கும் தீயை வளர்க்க நெய்க்குடங்களை வார்ப்பதுபோ லாகும் அது. தன்னிலையிலிருந்து மீறுத கடலைப் போன்ற அவரை ஒன்றும் புரியலாகாது. (காவலன் வருகிறான்) எங்கேயடா வந்தாய்?

**காவலன்:** (வணங்கி) அரசர் பெருமான் வாழ்க! ஒரு புலவர் தங்களைப் பார்க்க வந்திருக்கிறார்.

**இளங்:** போய் வரச்சொல். (காவலன் வணங்கிச் செல் கிறான்) நீண்டநாள் கழித்து ஒரு புலவர், அத்தி பூத்ததுபோல வருகிறார். (இருவரும் தத்தம் இருக் கையிலே அமர்கின்றனர். பெருந்தலைச்சாத்தனார் வருகிறார்) வாருங்கள்! அமருங்கள்! தாங்கள் யார்?

**பெருந்:** (அமர்ந்து) அரசர் வாழ்க! நான் ஒரு புலவன். தங்களைத் தங்கள் நன்மையின்பொருட்டே பார்க்க வந்தேன்.

**இளங்:** (நகைத்து) என் நன்மையை நாடியா வந்தீர்கள்? கூறுங்கள், பார்ப்போம்.

**பெருந்:** அரசே! இவ்வுலகம் நிலையற்றது என்பதை யாவரும் அறிவோம். அத்தகைய வுலகிலே நிலை பெற விரும்புவோரும் உளர் என்பதையும் அறி வோம்.

**இளங்:** (புன்முறுவலுடன்) ஆம்.

பெருந் : எனினும், சிலரே இறவாநிலையை—ஊனுடம்பு ஒழியினும் புகழுடம்பு பொன்றாத நிலையைப்—பொருந்தினர்.

இளங் : எவ்வாறு ?

பெருந் : தங்களிடம் உள்ள செல்வத்தை ஏற்றோர்க்கு மாற்றாமல் வழங்கி வள்ளல்களாக, மக்களுள்ளத்தே வட விமயமென்னப் புகழால் உயர்வு பெற்றனர். பலர் தமக்கும் பிறர்க்கும் பயனளிக்காத செல்வத்தை வீணே வைத்து இறந்தார்கள் ! அச் செல்வத்தைச் சேர்ப்பதினாலுங் காப்பதினாலும் உண்டான இடையூறுகளால் உறக்கமின்றி யிறந்தனர்.

இளங் : (நகைத்து) கொக்கின் தலையிலே வெண்ணெயை வைத்துப் பிடிப்பவர் நீங்கள் ! தங்கட்குப் பரிசு கொடுப்பதால் நானும் இறவாநிலையைப்—புகழுடம்பைப்—பெற வேண்டுமென்பதே தாங்கள் எனக்குக் கூறும் நல்லுரை.

பெருந் : (துக்கத்துடன் பெருமூச்சுவிட்டு) என்னே புலவர்பட்ட புன்மை ! அரசே ! நான் வந்த நோக்கம் அப்புல்லிய பரிசிலன்று.

அழகு : (நகைத்து) உண்மையே ! அது புல்லிய பரிசிலாக இருக்காதுதான். குமணர் யானைப் பரிசுதானே கொடுப்பார் ? அதையே விரும்பி வந்திருப்பீர்கள் ! (நகைக்கிறான்)

பெருந் : (துணிவுடன்) அவ்வாறு யானைப் பரிசையே கொடுக்கும் குமணரைக் கண்டேன் அரசே !

இளங், அழகு : எங்கே எங்கே ? உண்மையாகவா ?

பெருந் : ஆம், உண்மையாகக் கண்டேன். ஆனால், உங்கள் பரிசுக்காகக் காணவில்லை. அவரை அரச போகத்திலே அரண்மனையிலே காண விரும்பி வந்த நான் (கண்ணீர் ததும்ப) காட்டிலே மறைந்து வாழும் தனிமையிலே வள்ளிக்கிழங்கைத் தின்னும் வறிய நிலையிலே கண்டேன். தம் நிலையைக் குறித்து வருந்தாத அவர் என்னை மகிழ்வுடன் வரவேற்றார். அவர் நிலையைக் கண்டால் எந்தக் கொடியவனும் கண்ணீர் விடுவான்.

இளங் : அந்தோ !

பெருந் : அவருடன் உரையாடி விட்டுத் திரும்ப எழுந்த என்னை அவர் தடுத்தார். 'நாடு போனதை விடத் தம்மை நாடி வந்தோர் வெறுங் கையோடு திரும்புவது துன்பத்தைத் தரும்,' என்று கூறித் தம்மை விடச் சிறந்த பொருள் இல்லாமையால் தம்மையே அளித்தார் எனக்கு !

இளங் : (திடுக்கிட் டெழுந்து) என்ன கூறுகிறீர்கள் ? தம்மையே அளித்தாரா ? அப்படியென்றால் ? (நடுங்குகிறான்)

பெருந் : பொறுமையுடன் கேளுங்கள். (காவலன் வருகிறான்)

இளங் : அமைச்சரா வருகிறார் ?

காவலன் : (வணங்கி) ஆம்.

இளங் : விரைவில் வரச்சொல் (காவலன் வணங்கிச் செல்கிறான்) மேலே கூறுங்கள் ! (அமைச்சர் முடிநாகராயர் வருகிறார்) வாருங்கள் ! அமருங்கள் ! (அமர்கிறார்)

பெருந்: (மூவரையும் ஒரு முறை நோக்கிவிட்டு) தாங்களும் தங்கள் நண்பருமாக அவரைக் கொல்லச் சூழ்ச்சி செய்வதை அறிந்தே அவர் மறைந்தாராம். (மூவரும் வியப்படைகிருர்கள்)

இளங்: (வருந்தி) எங்கள் சூழ்ச்சியை அறிந்தா மறைந்தார்? ஏன்?

பெருந்: மரபின் மானத்தைக் காக்க மறைந்தாராம்! (இளங்குமணன் பெருமூச்சு விடுகிருன்) அவ்வாறு மறைந்தவரையும் தேடிக் கொல்ல முயல்கிறீர்களாம்! கொல்பவர்களுக்குப் பரிசு கொடுப்பீர்களாம்.

இளங்: (துக்கத்துடன்) எல்லாம் அறிந்தனர்!

பெருந்: இவ்வாறு தாங்கள் பரிசு கொடுப்பதாக அறிவித்திருப்பதை அறிந்த அவர் தம்மை எனக்களிப்பதாகக் கூறித் தம் வாளை என் கையிலே தந்தனர்! 'என் தலையைக்கொண்டு போய் என் தம்பியின் கையிற் கொடுங்கள்,' என்ருர்.

இளங்: (கண்ணீர் வழிய, மெய்ந் நடுங்க, வாய்குழற) ஐயோ! (மூர்ச்சையாகிருன்)

முடிநாக: (திடுக்கிட்டு) அந்தோ! என்ன இது! (மூவரும் ஓடி மூர்ச்சை தெளிவிக்கின்றனர்)

இளங்: (கண்ணீர் வடிய) மரபின் மானத்தைக் காக்க எனக்கு—உடன் பிறந்த நோய்க்கு—அரசை அளித்த வள்ளலை, வள்ளல்களின் புகழைக் காக்கத் தம்மைத் தங்களுக்கு அளித்த வள்ளலை என்ன செய்தீர்கள்? (அழுது நடிபி தலை கவிழ்கிருன்)

பெருந்: (மகிழ்வுடன்) இதுவரை அவரை ஒன்றுஞ் செய்யவில்லை, (தம் துணியிலே மறைத்து வைத்

திருந்த வாளை யெடுத்து) இதோ அவர் கொடுத்த வாள்! (எல்லோரும் வியப்புடன் நோக்குகின்றனர்) இதை அவர் என் கையிலளித்ததும் செயலற்றேன். ஒருவாறு பிறகு துணிந்து தங்களிடம் வந்தேன். தாங்கள் எனக்குக் கொடுக்கவேண்டிய பரிசு தங்கள் தமயனுரைத் தாங்கள் சென்று வேண்டி அழைத்து வருவதேயாகும். வேருென்று கூற மறந்தேன். இவ்வூரிலே இன்று நடந்த ஒரு பொதுக் கூட்டம் தங்களை வெறுத்தது; இந்த அமைச்சர் தலைமையிலே ஒரு கூட்டம் வந்து நேரிலே கூற விரும்பியது! அதை நோக்கியபோது என் எண்ணம் நிறைவேறுமென்று உறுதிகொண்டேன். இவற்றையெல்லாம் நினைத்துப் பார்ப்பது தங்கள் சிறந்த அறிவுக்குப் புறம்பாகாததுதான்!

முடி: ஆம் அரசே! இவர் கூறியது உண்மையே. நான் அவர்கள் வேண்டுகோளைக் கூறவே வந்தேன்.

இளங்: (எழுந்து புலவரைத் தழுவிக்கொண்டு) புலவரேறே! தங்கள் வரவினுலே என் மரபின் மானமும் உடன் பிறந்தவர்களாகிய எங்கள் உயிரும் காக்கப்பட்டன. என் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. இந்த நாட்டின் நலனையுங் கருத்துட்கொண்ட தங்களுக்குக் கைம்மாறென்ன செய்வேன்? (நாணத்துடன்) "வாய்ச் சொல்லால் வயிறு வளர்க்கும் புலவர்கள்," என்று மடமையேன் மதியாமலிருந்தேன். பேரறிவாளர்கள் புலவர்களெனவும், அவர்கள் வாழ்வே நாட்டின் வாழ்வெனவும் அறிந்தேன் இப்போது! (முடி-நாகராயரை நோக்கி) அமைச்சரே! தாங்கள் என் தந்தையின் நிலையிலுள்ளீர்கள். அருள் கூர்ந்து என்னை என் தமயனுரிடம் அழைத்துச்

சென்று மன்னிப்பு வாங்கிக்கொடுங்கள்! என் தமயனுரை அழைத்து வருவோம்! நீர் வற்றிய பொய்கைபோலிருக்கும் இந்த நாட்டை மகிழ்விப்போம்!

முடி: (வியப்பும் மகிழ்ச்சியும் பொங்க) ஆ! என்ன வியப்பு! தங்கள் உளம் மாறியதனுலே யாவரும் வாழ்ந்தோம். கதிரவனை மேகம் மறைப்பது போலச் சிறிது தங்கள் மாசற்ற உள்ளம் மாசுபடிந்தது. "எம் மரசர்பின் பிறந்தார் இழைப் பரோ பிழைப்பு?"

அழகுநம்பி: எழுந்து (வணக்கத்துடன்) அந்த மேகம் நானே! எனினும், எல்லையற்ற அப் பிழைகள் என்னுடைய நலத்தைக் கருதாமல் இளங்குமணருடைய நலத்தை நோக்கியே செய்யப்பட்டன. இதை என் நண்பராகிய தாங்களும் உணர்வீர்கள். இப் புலவரால் நானும் திருந்தி என் பிழைகட்கு வருந்துகிறேன். மன்னிப்பீர்களா? (கண் கலங்க நிற்கிருன்)

இளங்: (அவனைத் தழுவி) நான் மன்னிப்படையும்போது நீயும் அடைவாய். உன் நட்பிலே தன்னலக் கலப்புச் சிறிதும் இல்லையென நன்குணர்வேன்.

முடி: யாவும் இப் புலவர் பெருமான் தண்ணருளாலே நிகழ்ந்தன. கோவூர்கிழார் போன்ற தமிழ்ப் புலவர் பலர் இவ்வாறே நாட்டின் நலனைக் காத்தனர்! அரச குடும்பத்தைக் காத்தனர். வாழ்க பெருந்தலைச் சாத்தனர்!

பெருந்: (நாணத்துடன்) இளங்குமணருடைய உள்ளந் திருந்தியதற்கு நான் சிறிதும் காரணமாகேன்.

குமணவள்ளலின் கொடைப் பெருமையே காரணம். அன்பினாலும் கொடையாலுமே அவர் தம் தம்பியை வழிப்படுத்தினர். நான் அவருடைய கருவி என்னலாம். கருவி என்றவுடன் அவரே என்னை யிங்கனுப்பினாரெனத் தவறாக எண்ண வேண்டாம். நானே வந்தேன்.

இளங் : (மகிழ்ச்சியுடன்) இரு பெரியார்களின் அருளினாலே நான் திருந்தினேன். (அழகுநம்பியை நோக்கி) முரசறைந்து நாட்டைப் புனையச் செய். நான் புலவரை அழைத்துச்சென்று தமிழரரசராக அணிந்து அழைத்துவருகிறேன். யாவரும் அமைச்சருடன் சென்று என் தமயனாரை அழைத்து வருவோம்.

முடி : (மகிழ்வுடன்) நான் சென்று தங்கள் அண்ணியாரிடம் இந்த நல்ல செய்தியை நவில்கிறேன். அவர்கள் மெலிந்து துரும்பாகி வேதனையால் தீய்க்கப்பெற்றிருக்கிறார்கள்.

இளங் : (கண்ணீர் வார) எங்கிருக்கிறார்கள் ?

முடி : என் இல்லத்தில் இருக்கிறார்கள்.

இளங் : (வெட்கத்துடன்) நான் செய்த பிழையை என்னென்பேன் ! அன்னையைப்போல ஆதரவு காட்டிய அவர்களையும் வருந்தச் செய்தேன். விரைவிலே புறப்படுங்கள். (எழுந்து) புலவர் தலைவரே ! வாருங்கள்.

(யாவரும் செல்கிறார்கள்)

## காட்சி 24

இடம்: முதிரமலையிலே குமணனிருப்பிடம்.

காலம்: காலை.

குமணர் உலாவிக்கொண்டிருக்கிறார்.

குமணர்: (தாமே) சென்ற புலவர் என்ன செய்கின்றனரோ? என் விருப்பம் நிறைவேறுமா? ஒருக்கால் அவருக்கு ஏதேனும் இடையூறு நேருமோ? என் தலையைக் கொண்டுபோக வேண்டியவர் வாளைக் கொண்டு போனாற் பரிசு கிடைக்குமா? என்ன செய்கிறாரோ, பார்ப்போம் "எற்றென் றிரங்குவ செய்யற்க, செய்தபின்—மற்றன்ன செய்யாமை நன்று" என்றார் வள்ளுவர். அவருக்குத் தலை கொடுத்தாலன்றோ நான் செய்யத் துணிந்தது முற்றுறும்? (நகைக்கிறார்) காதலி எங்கே? நாடு எங்கே? தமிழ்ப் புலவர்கள் எங்கே! குமணா! இறுதியில் உன் வாழ்வு இப்படியா முடியவேண்டும்? இதுவரையில் நீ பிறர்க்கிரங்கினை. இனி நீ நினக்கே யிரங்கவேண்டும். மற்றோரும் இரங்க வேண்டும்! இதுதான் உலகியல்போலும்! ஏன் அவர் இன்னும் வரவில்லை? (வழியை நோக்குகிறார். பெருந்தலைச்சாத்தனார், முடிநாகராயர், இளங்குமணன், அழகுநம்பி, இளவெளிமான், வான்மலர் தேவி, முல்லைக்கொடி, மல்லிகை மற்றும் பல மாதர்கள், குடிகள் யாவரும் திரண்டு வருகின்றனர்.) ஏன் இது?

இளங்: (ஓடிவந்து அடியிலே விழுந்து கண்ணீர் வார வணங்கி) அண்ணா! பொறுத்தருள்க! பொறுத்தருள்க!!

குமணர் : (திகைத்து) என்ன இது ? எழுந்திரு. (தம்பியை யெழுப்பித் தழுவிக்கொண்டு) எதைப் பொறுக்க வேண்டும் என்கிறாய்? ஏதோ ஊழ்வினையின் நிகழ்ச்சி! வருந்தாதே!

இளங் : (கண்ணீர் வடிய) தங்களை அண்ணா என்று கூப்பிடவுந் தகுதியற்றவன் யான்! அறியாமை யாலே மரபைக் கெடுக்க முயன்றேன். அம் முயற்சியி லிருந்து என்னைத் தடுக்கத் தாங்கள் இக் கோலங் கொண்டீர்கள்! இப் புலவர் பெருந்தகை என்னைத் துணிவாக நன்னெறியிலே செலுத்தினார். நெருப்பி லிருந்து தப்பினேன். இனி, மரபின் மானத்தைக் காக்க எழுந்தருளவேண்டும்.

அழகு : (விழுந்து குமணரின் அடிகளைப்பற்றியவாறு) அரசே! தங்கள் தம்பியைத் தீயநெறியிலே அழைத் துச் சென்ற கொடியவன் யான். என் பிழை பொறுத்தற்கரிது. (கண்ணீர் வடிய) என்னை ஒறுத்தலே ஏற்றது! தங்கள் செங்கோலுக்கிடையூ றளித்த எனக்கு எந்தத் தண்டனையை விதிப்பினும் ஏற்கிறேன்.

குமணர் : (அன்புடன் எழுப்பி) உன் பிழையை உணர்ந்த நீ இனிமேலே நன்னெறியிற் செல்வாய். உன்னை ஒறுத்தலாவது தக்க பொறுப்பிலே தலைமை வகிக்கச் செய்வதாகும். பிழையும் தன் தலைவனைத் திருத்துவதுண்டென்பதை உன் செயல் அறிவிக் கிறது. காட்டாற்று வெள்ளம் தனியே போகாமல் அசுத்தப் பொருள்களையுங் கொண்டுபோகிறது! வெள்ளம் வடிந்த பின்னர் அது சென்ற இடமெல் லாம் தூயதாகிறது. (வான்மலர்தேவி குமணரிடம் வருகிறாள். யாவரும் விலகி நிற்கின்றனர்)

வான் : (விம்மி யழுதவண்ணம் அவரை வணங்கி) இவ்வாறு என்னைப் பிரிக்கலாமா ?

குமணர் : (கண்ணீர் வடிய அவளை அன்புடன் நோக்கி) ஊழ்வினை பிரித்தது ! இனிமேல் எப்போதும் பிரியோம். (யாவரும் வந்து அமைதியாகக் கண்ணீர் வடிய நிற்கிறார்கள்)

முடி : (முன்வந்து வணங்கி) குடிகளின் நிலையை நோக்குங்கள்.

பெருந் : (அன்புடன்) 'கலக்கினுந் தண்கடல் சேறுகாது' என்பதை உலகம் அறியச் செய்தீர்கள். தங்கள் மதிப்பை மிகவும் உயர்த்தியவர் தங்கள் தம்பியாரே ! இதோ தங்கள் வாள் ! (கையிலளித்து) இனி இவ் வாளை யாரிடமும் அளித்து அச்சுறுத்த மாட்டீர்கள். இப்போதே நாட்டிற்கு எழுந்தருளுங்கள். மழையிலாப் பயிர்போல வாடிக்கிடக்கும் நாட்டை மகிழ்வியுங்கள்.

குமணர் : (இளவெளிமானைச் சுட்டி) இவர் யார் ?

இளங் : இவர் வெளிமான் தம்பி, இளவெளிமான். மலைவளங் காண என் வேண்டுகோளால் வந்தார். (இருவரும் அஞ்சலி செய்துகொள்ளல்)

இளவெளி : (புன்முறுவலுடன்) மலைவளங் காணவந்த நான் தங்கள் அன்புவளம் அதைவிடச் சிறந்த அழகுடன் விளங்குவதை அறிகிறேன். தங்கள் நட்பையும் விரும்புகிறேன். (முல்லைக்கொடியைச் சுட்டி) இவள் என் தங்கை. இவளும் தங்கள் தம்பியும் காதல் கொண்டுள்ளனர். (மல்லிகையைச் சுட்டி) இவள் என் தங்கையின் தோழி. இவள்

அழகுநம்பியைக் காதலிக்கிருள். இவர்களை வாழ்த்த வேண்டுகிறேன்.

குமணர்: (மகிழ்வுடன்) புலவர் வாழ்த்தும் புகழுடைய வெளிமானை அறிவேன். அவர் தம்பியாகிய தங்கள் நட்பைப் பெரிதும் விழைகிறேன். (முல்லைக் கொடியும் இளங்குமணனும், மல்லிகையும் அழகு நம்பியும் வணங்கி எழுகிருர்கள்) மனமொத்த காதலர்களான நீங்கள் தமிழன்னையின் திருப்பணியிலே உங்கள் காதல் நெறியை ஈடுபடுத்துவீர்களாக!

பெருந்: இவர்கள் மணம் பெறவும் நாடு மணம்பெறவும் இப்போதே தாங்கள் நாட்டிற்கு வரவேண்டும். நிலமகள் தங்களை வரவேற்க மலர்மாலையுடன் காத்திருக்கிருள்.

குமணர்: (புன்முறுவலுடன்) எல்லோரும் அமருங்கள் (அமர்கிருர்கள்) என்னை நீங்கள் இவ்வாறு வரவேற்பதைக் கண்டு என்னுளம் திகைப்படைகிறது. உண்மையாகவே நீங்கள் என்னை விரும்பினுல்—என்னிடம் அன்புடையவர்களானுல்—என் வேண்டுகோளை ஏற்கத் தயங்கலாகாது.

முடி: (ஐயத்துடன்) என்ன அது?

குமணர்: நான் நகரைவிட்டு வெளியேறும்போது அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததை உறுதிப்படுத்த விரும்புகிறேன்.

பெருந்: (திடுக்கிட்டு) நான் இதை எதிர்பார்க்கவில்லை.

முடி: அவ்வாறு செய்வது எங்களை வதைப்பதாகும்.

இளங்: (கண்ணீர் வார) என்னுல் இப்பழியை ஏற்க முடியாது அண்ணு! எங்கள் சூழ்ச்சிக்குத் துணை

யாக—எங்கள் பிழையை வளர்க்கத்—தாங்கள் நினைக்கிறீர்கள். நான் அரசை ஒப்புக்கொள்ளேன்.

குமணர்: (அன்புடன்) என் தம்பி என் துணைவன். அவன் என் வேண்டுகோளை மறுத்தலாகாது. என் வழக்கம் ஒருவர்க்கு மனமார அளித்த பொருளை வாங்குவது ஆகாது என்பதே. என் தம்பியாயினும் அவனுக்களித்த நாட்டை வாங்கமாட்டேன். மேலும், நான் முதிரத்தை யாண்டபோது முதிரத்தைமட்டும் அன்புடன் கண்டேன். அதற்கு மட்டுமே தொண்டு செய்தேன். வெளியேறிய அன்றுமுதல் உலகையே அன்புடன் காண்கிறேன். என் தொண்டும் பரவியதாயிற்று. "யாதும் ஊராயிற்று. யாவருங் கேளிராயினர்" கடந்த ஒரு திங்களிலே அந்த நெறியிலேயிருந்து பழகிவிட்டேன். என் உள்ளம் அரசை விரும்பவில்லை. முதிரம் என் மலர்ப்பொழிலிலே ஒரு மலர்ச்செடி! வாடாமல்லிகை! ஆகவே, அதற்கும் என் தொண்டு எப்போதும் உண்டு. எல்லோரும் பொறுத்துக் கொள்ளுங்கள். (கைகுவிக்கிறார்)

பெருந்: (துக்கத்துடன்) அங்ஙனமாயின், துறவியாகவே வாழ விரும்புகிறீர்கள். தமிழையுந் துறந்தீர்களோ?

குமணர்: (அன்புடன்) யாரையும் துறக்கவில்லை. என் தன்னலத்தையே துறந்தேன். தமிழ் என் உயிர். உயிரினுஞ் சிறந்ததுமாகும்! அதைத் துறப்பேனோ?

முடி: எனக்கு என்ன ஆணை?

குமணர்: (அன்புடன்) தங்கள் பணியைத் தாங்களே அறிவீர்கள். புதிய அரசர்க்குத் துணைபுரிவதே

தங்கள் பணி. (அமைச்சர் பெருமூச்சு விடுகிறார்) கவலை வேண்டாம். தங்களாலேயே என் கொள்கை நிறைவேறவேண்டும்.

**முடி :** (பணிவுடன்) என் கடன் பணி செய்வதே.

**வான் :** (கண்ணீருடன்) என்னையுமா துறந்தீர்கள்? தங்களுடன் இருந்து தங்கட்குப் பணிபுரியும் பேற்றை அருளவேண்டும்.

**குமணர் :** (அன்புடன்) வாழ்வினும் தாழ்வினும் பிரிவதில்லை யென்ற ஒப்பந்தமும் முதிர்ந்த நம் அன்புப் பிணையும் இருக்கும்போது பிரியமாட்டோம். ஆனால், அரச போகத்தை விடுவாயோ?

**வான் :** அரசர் தாங்கள்! தங்களுடன் இருந்து தொண்டு செய்வதே அரசபோகம். தங்களைப் பிரிந்திருப்பதே துன்பவெளி—பாலைநிலம்.

**குமணர் :** (அன்புடன்) நன்று.

**இளங் :** (கண் கலங்கி) அண்ணா! தங்கள் ஆணையை மறுக்க அஞ்சி ஒப்புக்கொள்கிறேன். என் வேண்டுகோளையும் நிறைவேற்றவேண்டும். நம் வேனில் விடுதியிலேயே, இளங்கோவடிகள் தம் தமையன் வேண்டுகோளை ஏற்றதுபோல இருக்கவேண்டும். அப்போதுதான் தங்களை அடிக்கடித் தமியேன் காணமுடியும். அரசைத் துறந்தாலும் வண்மையைத் துறவாமல் எப்போதும் அற்றோர்க் குதவும் நற்றுணையாளராக இருக்கவேண்டும். வேண்டும் பொருள்களை அடிக்கடி அனுப்புவேன்.

**குமணர் :** (புன்முறுவலுடன்) நன்று.

**இளங் :** இன்னுமோர் வேண்டுகோள். இப் பெரும் புலவர் நம் அரண்மனையிலேயே எப்போதும்

இருக்கவேண்டும். அவர் குடும்பத்துடன் வாழத் தனியே இருக்கை அமைத்துத் தருகிறேன். அவருக்கு முதிரத்திலே ஓரூர் முற்றூட்டாக அளிக்கிறேன். அவரை ஒப்புக்கொள்ளச் செய்யவேண்டுவது தங்கள் கடமை.

குமணர்: (தம்பியைத் தழுவி) உன் கருத்து மிகவுயர்ந்தது. (புலவர் முகத்தை நோக்கி) இவன் வேண்டுகோளை மறுக்காதீர்கள்.

பெருந்: தங்கள் கருத்தை ஏற்கிறேன். (மகிழ்வுடன்) தாங்களும் என் வேண்டுகோளை ஏற்கவேண்டும். இந்த இளங்காதலர்களை வாழ்க்கைத் துறையிலே பிணைப்பதற்குத் — திருமணத்திற்குத் — தாங்கள் வரவேண்டும்.

குமணர்: நன்று தமிழ் அன்னையும் தமிழ்நாடும் தமிழரும் வாழ்க!

13715

...SITY EXTENSION LIB...
22 DEC 1960

## நாடக நூல்கள்

| | | |
|---|---|---|
| மனோன்மணீயம்—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை ரூ. | 3 | 8 |
| புகழேந்தி—அ. நடராசப் பிள்ளை | 2 | 0 |
| மணிமேகலை—கரந்தைக் கவியரசு | 1 | 8 |
| சிலப்பதிகார நாடகம் ,, | 1 | 12 |
| சங்ககால வள்ளல்கள் I—சிவ குப்புசாமி பிள்ளை | 1 | 8 |
| ,, II ,, | 1 | 12 |
| வள்ளலும் வளவனும் ,, | 1 | 8 |
| குடமலைத் தெய்வம் —புலவர் அரசு | 1 | 8 |
| இளவரசன் முதற்குலோத்துங்கன் ,, | 1 | 0 |
| புறநானூற்றில் ஐந்து காட்சிகள் ,, | 0 | 10 |
| பிறந்தநாள் ,, | 2 | 0 |
| சுகுமாரி ,, | 0 | 8 |
| கோடைமடம் ,, | 0 | 10 |

---